அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 22-07-1994

## மன்னாரில் குண்டுமழை

மன்னார் மக்கள் மேல், சிறீலங்கா விமானப்படையின் விமானங்கள் சரமாரியான குண்டுவீச்சை நடாத்தியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்காப் பொதுத்தேர்தல் அறிவிப்பை பிரகடனப்படுத்தியபின், நடைபெற்றுள்ள இப்பாரிய குண்டுவீச்சினால், பல பொதுமக்கள் கொல்லப்பட்டும், பாதிக்கப்பட்டுமுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சர்வதேச அரசாங்கங்கள் சிறீலங்காவை நம்பத் தயாரில்லை

### பி.பி.சி. சர்வதேச செய்திநிறுவனம் பகிரங்க விமர்சனம்

"பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்புகின்றோம். ஆயினும், விடுதலைப் புலிகள் தான் அதற்கு இடந்தர மறுக்கின்றார்கள் என்ற சிறீலங்கா அரசாங்கத்தின் கூற்றை இனியும் சர்வதேச அரசாங்கங்கள் நம்பத்தயாரில்லை" என சர்வதேச செய்தி நிறுவனமான பி. பி. சி. தனது உலகச்செய்தி விமர்சனத்தில் விபரித்துள்ளது.

"நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பானது, இதுவரை பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு இருந்துவந்த அரசியல் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிந்துள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விடுத்த இவ் அழைப்பானது, மூன்று விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது.

1. சிறீலங்கா அரசாங்கம்தான், பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகளை தொடங்கவேண்டிய நிலையில் உள்ளது.

2. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாகவே உள்ளனர்.

3. விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததின் மூலம், அவர்கள் தடையாக இல்லை.

என்ற விடயங்களே தெளிவாக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இந்த அழைப்பை, "புதிய இசையமைப்புடன்கூடிய பழைய ஒலிநாடா" என சிறீலங்கா அரசாங்கத்தின் விமர்சகர்கள் விமர்சித்திருக்கின்றார்கள். ஆனால், சிறீலங்கா இது குறித்து அலட்சியமானபோக்கைக் கடைப்பிடித்து வருகின்றது. அதேவேளை, இராணுவத் தீர்வுக்கான யுத்தமொன்றுக்கான முன்முயற்சிகளில், அக்கறையுடன் ஈடுபட்டுவருகின்றது. இச் செயற்பாடுகளை அவதானிக்கும் சர்வதேச சமூகத்தினரும், சர்வதேச அரசாங்கங்களும், "பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகின்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...




யேர்மனியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவுநாளின் போது...

# சர்வதேசக் கலை விழாவில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

### சிறீலங்கா தேசியக்கொடி கீழிறக்கப்பட்டது

நோர்வேயில் போ(F)ர்ட் என்னுமிடத்தில் நடைபெற்ற சர்வதேச கலைநிகழ்வு ஒன்றில், ஈழத்தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்தி அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது.

கடந்த 7, 8, 9, 10ம் திகதிகளில் நடைபெற்ற இச் சர்வதேசக் கலை விழாவில் மங்கோலியா, இந்தோனேசியா, மலேசியா, பூட்டான், இந்தியா, சிலி, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, ஸ்பெயின், ருஸ்யா, பின்லாந்து, நோர்வே உள்ளிட்ட 15 நாடுகளுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 250க்கும் மேற்பட்ட தொழில்முறைக் கலைஞர்கள் பங்கு கொண்டனர்.

இக் கலைவிழாவில் அன்னை பூபதி தமிழ்க்கலைக் கூடத்தினால் வழங்கப்பட்ட காவடி, கரகம், தீச்சட்டி நடனம், வடமோடி, தென்மோடி ஆகிய நடனவகைகளை உள்ளடக்கிய 'மீன்பாடும் பண்பாடு' எனும் நிகழ்ச்சி பார்வையாளர்களின் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டது. இவ்விழாவினையொட்டி நடாத்தப்பட்ட கலைஞர்களின் வீதி ஊர்வலத்தில் கலைக்கூட மாணவர்கள் காவடி ஆட்டத்தினுடனும், கும்மி நடனத்துடனும் வீதிகளில் வலம் வந்தபோது வீதியின் இருமருங்கும் குழுமி நின்ற பார்வையாளர்கள் பெரும் கரகோசம் செய்து வரவேற்றனர். மேலும் கலைக்கூட மாணவிகளினால் வழங்கப்பட்ட புஸ்பாஞ்சலி, கௌதம், திருப்புகழ் நடனங்களும் பார்வையாளர்களினால் பெரிதும் புகழப்பட்டன.

இக்கலை நிகழ்வின் ஓரங்கமாக

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# ஆயுத ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாக சிறீலங்கா நடாத்தும் பலவந்த தேர்தல்

- வாக்காளர் பதிவில் மோசடிகள்
- 99 வீதமான வாக்காளர் உரிமை மறுப்பு
- ஒரே இடத்தில் வாக்குப்பெட்டிகள் குவிப்பு

தமிழீழ மக்கள் மீதும், பிரதேசங்கள் மீதும் ஆயுத ஆக்கிரமிப்புச் செய்துவரும் சிறீலங்கா அரசாங்கம், தனது படைபலத்தைக் கொண்டு, பலவந்தம் மூலம், மோசடித் தேர்தல் ஒன்றுக்கான திகதியை நிர்ணயம்செய்துள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில், சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்ட தமிழீழ மக்களை, பகடைக்காய்களாக்கி நடைபெறவுள்ள இத்தேர்தல், ஜனநாயகத் தேர்தல் ஒன்றுக்கான சகல வழிமுறைகளையும் மீறுகின்ற ஒரு தேர்தலாகக் காணப்படுகின்றது.

**வாக்களிப்பு உரிமை பறிப்பு**

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், கொத்தணி முறையில் வாக்குச் சாவடிகளை அமைக்கும் சிறீலங்கா அரசாங்கம், ஒரே இடத்தில் வாக்குப் பெட்டிகளைக் குவித்து, அவற்றுள் மோசடிகள் மூலம் வாக்குச் சீட்டுக்களைத் தள்ளும் தனது செயற்பாட்டுக்குப் பொதுத்தேர்தல் எனப் பெயர் சூட்டியுள்ளது. இதற்காக யாழ். குடாநாட்டில் சிறீலங்காவின் செயலகமான யாழ். அரசாங்கச் செயலகத்தை 23. 06. 1994 ஆம் திகதிய திடீர் வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறிக் கொள்ளும் தெல்லிப்பளைப் பகுதிக்கு சிறீலங்கா அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது.

இதன் மூலம், மக்களது வாக்களிப்பு உரிமையைத் தனதாக அபகரித்துக்கொள்ளும் சிறீலங்கா, மனித நடமாட்டம் அற்ற பிரதேசங்கள், என இங்கு விஜயம் செய்த சர்வதேச பொதுசனத் தொடர்பு சாதன முகவர்களால் விமர்சிக்கப்பட்ட, தெல்லிப்பளைப் பகுதிக்குள் இராணுவக் கவசவாகனங்களுக்கு மத்தியில் யாழ். அரசாங்கச் செயலகத்தை அமைத்துக் கொண்டது. அத்துடன், இங்கு தேர்தலுக்கான பொறுப்பதிகாரியாக அரசாங்க ஊழியர் ஒருவரை நியமிக்காது, சிறீலங்கா இராணுவ பிரிகேடியர் இரத்நாயக்கா என்பவரை நியமித்தமை.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# பூரண அதிகாரங்களுடனான கூட்டாச்சியே அமைதியை ஏற்படுத்தும்

### யாழ்ப்பாணத்தில் கலாநிதி பியற்றே

"இலங்கையில், யேர்மனியில் இருப்பதுபோன்று சகல அதிகாரங்களும்கொண்ட கூட்டாட்சி ஏற்பட்டால் மட்டுமே, நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்படும்; ஒற்றுமைதோன்றி, நாடு சுபீட்சம் அடையும்".

இவ்வாறு 'ஈபேர்ட்' மன்றத்தின் பிரதிநிதி, கலாநிதி பியற்றே, யாழ்ப்பாணத்தில், தமிழர் ஆசிரியர் சங்கமும், 'ஈபேர்ட்' மன்றமும், 'எடியூகேசன் இன்டர்நசனலும்' இணைந்து நடாத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோது குறிப்பிட்டார்.

அவர் மேலும், "யேர்மனியில், கிட்லரின் சர்வாதிகாரம்கொண்ட ஒற்றை ஆட்சிமுறையினாலேயே இரண்டாவது உலக மகாயுத்தமும், பல அனர்த்தங்களும், அழிவுகளும் ஏற்பட்டன. இதனால், யேர்மனிய மக்கள் கற்றுக்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# தேர்தலை நிராகரிக்கின்றோம்

### அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடாத்த நாம் தயாராகவே இருக்கின்றோம். எமது கதவுகள் பேச்சுவார்த்தைக்காக என்றும் திறந்தே உள்ளன என, நாம் சிறீலங்கா அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தும் சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை. ஆகையால் எதிர்வரும் பொதுத்தேர்தலை வடக்கு -கிழக்கில் நாம் நிராகரித்துள்ளோம்".

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளும் விரும்பினால், தேர்தலில் பங்குபற்றலாம் என்ற சிறீலங்கா அரசாங்கத்தின் கருத்துக்குப் பதிலளித்த அவர், "பாராளுமன்றக் கதிரைகளுக்கு சூடேற்றுவதில் எமக்கு நம்பிக்கை இல்லை; இனியும் மடப்பட்டம் கட்டப்படவோ அல்லது ஏமாறவோ நாம் தயாராக இல்லை. எமது நிர்வாகத்தைக்கொண்டு நடாத்த கொழும்புக்குச் செல்லவேண்டிய அவசியம் எமக்கில்லை. சுதந்திர ஈழத்திற்கான அடித்தளத்தையிட்டு அதனைப் பலப்படுத்தியுள்ளோம்" என்றார்.

மேலும், "சிறீலங்காவின் பொதுத் தேர்தலுக்குப் பின்பே, இனிமேல் பேச்சுவார்த்தை" எனவும் கூறினார். ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# வெளியாகும் உண்மை

இதுவரை காலமும் காங்கேசன்துறை முதல், காலிவரை இலங்கைத்தீவு முழுவதும் தனது இறைமையே கொடிகட்டிப் பறப்பதாகச் சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச உலகிற்கு பறைசாற்றிவந்தது.

ஆனால் இன்று, தமிழ்ப் பிரதேசங்களில், அதிலும் குறிப்பாக, யாழ். குடாநாட்டிலும் ஏனைய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எனப்படும் மீட்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்களிலும், தேர்தல் நடாத்த முடியாதநிலை, சிறீலங்காவுக்கு இருப்பது உலகுக்குத் தெரியவந்துள்ளது.

"இலங்கைத்தீவின் வடக்கு -கிழக்கு மாகாணம் சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை என்பதை, இத்தேர்தல் மூலம் உலகம் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு -கிழக்கில் பெரும்பகுதி நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இங்கு சிறீலங்கா அரசாங்கத்தால் தேர்தல் நடாத்த முடியாது" என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதன்மூலம் அங்கீகாரத்தை நோக்கி நிற்கும், தமிழீழ அரசின் இறைமை உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளது".

மேலும் "இந்தப் பாராளுமன்ற அமைப்பு பெரும்பான்மையினரின் ஆட்சிப்பீடமாகவும் இனவாதத்தின் இருப்பிடமாகவும் உள்ளது" எனக்கூறியுள்ள அன்ரன் பாலசிங்கம் அவர்கள், "இப்படிப்பட்ட சிங்களப் பாராளுமன்றம் எமக்குத் தேவையில்லை" என உறுதியாகக் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே கரும்புலிகள் நினைவுக்கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், "எமது கதவுகள் பேச்சுவார்த்தைக்காக என்றும் திறந்தே உள்ளன என நாம் சிறீலங்காவுக்கு பலமுறை அறிவித்திருந்தும், சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லை. ஆகையால், எதிர்வரும் பொதுத்தேர்தலை நிராகரிக்கின்றோம்" என விளக்கம் அளித்தார்.

இந்த 23 யூலை 1994 உடன், சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மேல் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் போக்கும் சிறீலங்கா அரசின் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளும் அன்றுபோலவே இன்றும், வேறு வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

அதேவேளை, 1978 ஆம் ஆண்டின் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் மூலம், சிறீலங்கா தொடங்கிய தமிழினவேட்டை, இன்று நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தும் யுத்தமாக மாறி நிற்கின்றது.

தமிழீழ மக்களின் இறைமை, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசினால், பாதுகாக்கப்படத் தொடங்கியதன் விளைவாக, சிங்கள சிறீலங்கா அரசு, தான் நினைத்ததுபோல் 1983 மாதிரி இன அழிப்பு நடவடிக்கைகளை நடாத்த முடியாமல், வெளிப்படையாகவே யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த யுத்தப் பிரகடனத்தின் மூலம் ஒரு தீவுக்குள் இரு அரசுகள் உண்டென்ற உண்மை வெளியாகியது.

இன்று அந்த இரு அரசுகளில் ஒன்றான தமிழீழத் தேசிய அரசு, தனது மக்களுக்குத் தானே பாதுகாப்பு வழங்கக்கூடிய நிலைக்கு வளர்ந்துவிட்டதை, அப்பிரதேசங்களில் தேர்தல் நடத்த முடியாதிருக்கும் சிறீலங்காவின் நிலை வெளிச்சம்போட்டுக் காட்டிவிட்டது.

சொந்தத் தேசியப் பாதுகாப்பு -சொந்த நீதிமன்றங்கள் மூலம் சட்டஅமுலாக்கம் -சொந்தப் பொருளாதார முறைமைகளுடன்கூடிய நிர்வாகம் -இவற்றுடன் உருவாகி உலகப்படத்தில், தமிழர்களின் முதலாவது தன்னாட்சி நாடாக இடம்பெற்றுவரும் தமிழீழ அரசாங்கத்தை அங்கீகரிக்கும்படி, உலகத் தமிழினம் சர்வதேச நாடுகளிடம் கேட்கத் தொடங்கி விட்டது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியுள்ளது போல், "எமது ஆட்சி அதிகாரங்களை, உரிமைகளை நாங்களே வென்றெடுத்து சுதந்திர மனிதர்களாக மாறிவருகின்றோம்" என்ற உண்மையைத் தமிழர் அனைவரும் உலகுக்கு அறிவிக்கவேண்டும்.

இதற்காகத்தான் 1983 கறுப்பு யூலை நினைவு நாள் தொடர்பான, இவ்வாண்டுக்கான (23. 07. 1994) நினைவுப் பேரணிகளிலும் கூட்டங்களிலும், தமிழீழ மக்களையும் உலகத் தமிழர்களையும் அமைதியின் மேலும் மனிதாயத்தின் மேலும் நம்பிக்கையுள்ள அனைவரையும் பெருமளவில் பங்குபற்றி, தமிழீழ மக்களுக்கு பலவந்தத் தேர்தல்கள் தேவையில்லை; அமைதிதான் தேவை; அது ஏற்பட, தமிழீழ அரசு நோக்கிய அரசையும் அதன் ஆட்சியாளரான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்குமாறு, சர்வதேசத்தையும் கோரும்படி, உலகிலுள்ள தமிழர் அமைப்புக்கள் அழைக்கின்றன. வெள்ளமெனக் கூடுவோம்! வேகமுடன் தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோருவோம்! வாருங்கள் பேரணி முன்றலுக்கு! ■

**'தன்காலில் நிற்றல்' எனும் உயரிய குறிக்கோளுக்கமைய, தமிழீழத்தின் வங்கித் தேவைக்காக உருவாக்கப்பட்ட 'தமிழீழ வைப்பகம்' தனது செயற்பாட்டை 23. 05. 1994 அன்று ஆரம்பித்தது. இவ் வைப்பகத்தில் என்னென்ன கணக்குகள் எவ்வாறு பேணப்படுகின்றன, அதற்கான வட்டி விகிதங்கள் என்ன, எத்தகைய கடன்கள் வழங்கப்படவுள்ளன என்பது பற்றி தமிழீழ வைப்பகம் முன்வைத்துள்ள அறிவிப்பே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

# தமிழீழ வைப்பகம்
## Bank of Tamil Eelam

## வைப்பிலிடும் தேட்டம் காலத்தே பயன்தரும்

**1. கணக்குத் தொடங்குதல்**

1. 1 தனியாக, கூட்டாக, கழகங்களாக, அவைகளாக வைப்பகத்தில் கணக்கு ஒன்றைத் தொடங்கலாம்.
1. 2 16 அகவைக்குக் குறைந்தோர் கணக்கு ஒன்றைத் தொடங்குவதற்கு, பேணுநர் ஒருவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
1. 3 கழகங்கள், அவைகள் மற்றும் பொது நிறுவனங்கள் கணக்கு ஒன்றைத் தொடங்குவதாயின், அந்நிறுவனத்தின் யாப்பின் பிரதி ஒன்றினையும், நெறியாளர் கூட்டத் தீர்மானத்தின் பிரதி ஒன்றினையும் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**2. சேமிப்புக் கணக்கு**

2. 1 ஆகக் குறைந்தது ரூபா 200 செலுத்தி சேமிப்புக் கணக்கினைத் தொடங்கலாம்.
2. 2 சனவரி மாதம் 1 ஆம் நாள் தொடக்கம், டிசம்பர் 31 ஆம் நாள்வரை, காலாண்டு அடிப்படையில் கணக்கில் உள்ள ஆகக் குறைந்த மீதியில் 14% வீதம் வட்டி வழங்கப்படும்.
2. 3 கணக்கில் ஆகக்குறைந்தது மீதி ரூபா 200. பேணப்படல் வேண்டும்.

**3. நிலையான வைப்பு**

3. 1 ஆகக் குறைந்தது ரூபா 2000 ஐ நிலையான வைப்பில் இடலாம். ரூபா 10, 000 இற்குக் குறையாத வைப்பிற்கு மட்டுமே மாத வட்டி வழங்கப்படும்.
3. 2 வட்டி விகிதங்கள்

| | முதிர்வில் வட்டி | மாதவட்டி |
|---|---|---|
| 06 மாத வைப்பு | 15 % | இல்லை |
| 01 ஆண்டு வைப்பு | 16 % | 15 % |
| 02 ஆண்டு வைப்பு | 17.5 % | இல்லை |

3. 3 முதிர்வு காலத்திற்கு முன் மீளப்பெறுவதாயின்:-

| காலம் | 6 மாத வைப்பு | 1 ஆண்டு வைப்பு | 2 ஆண்டு வைப்பு |
|---|---|---|---|
| 3 மாதத்திற்குள் | இல்லை | இல்லை | இல்லை |
| 03-06 மாதம் | 12.5 % | 13.5 % | 13.5 % |
| 06-12 மாதம் | இல்லை | 14 % | 14.5 % |
| 12-18 மாதம் | இல்லை | இல்லை | 15 % |
| 18-24 மாதம் | இல்லை | இல்லை | 15.5 % |

மாதவட்டி பெறும் வைப்புக்களை முதிர்வு காலத்திற்கு முன் மீளப்றெுவதாயின், மேலே காட்டப்பட்ட காலப் பகுதிக்குரிய வட்டி நூற்றுக்கூறிலிருந்து 2% குறைத்து வழங்கப்படும்.

**4. 7 நாள் அறிவித்தலில் மீளும் வைப்பு**

ரூபா 25, 000 இற்குக் குறையாத எத்தொகையையும் வைப்புச் செய்யலாம். 7 நாள் முன் அறிவித்தல் கொடுத்து 10% வட்டியுடன் மீளப்பெறலாம்.

**குறிப்பு:-** காலத்திற்குக் காலம் வைப்பகத்தினால் மாற்றி அமைக்கப்படும் வட்டி விகிதமே நடைமுறைப்படுத்தப்படும்.

**5. கடன் வாய்ப்புக்கள்**

5. 1 நிலையான வைப்புக்கு எதிராகவும், சேமிப்புக் கணக்கு மீதிக்கு எதிராகவும், வைப்பகத்தில் இருந்து 80% கடன் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம். பொறுப்புக் கையளிக்கப்படும் கணக்கிற்கு வைப்பகத்தினால் செலுத்தப்படும் வட்டி நூற்றுக்கூறிலும்பார்க்க, இரண்டு நூற்றுக்கூறு கூடுதலாக அறவிடப்படும்.
5. 2 மேம்பாட்டுக் கடன் -
மேம்பாட்டின் நோக்கத்தையும், பொறுப்பின் பெறுமதியையும் நோக்கி கடன்வாய்ப்புச் செய்து கொடுக்கப்படும்.
5. 3 அடகு -
வைப்பகத்தினால் முடிவு செய்யப்படும் பவுணின் பெறுமதியின் 60 % இற்கு கடன் வழங்கப்படும்.
5. 4 வாணிபக் கடன் -
பொறுப்பாகக் கொடுக்கும் வாணிபச் சரக்குகளின் தன்மைக்கு ஏற்றாற்போலும் அந்நிறுவனத்தின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டும் கடன் வழங்கப்படும்.
5. 5 வட்டி விகிதம் -
கடனின் தன்மைக்கும் நோக்கத்திற்கும் ஏற்றாற்போல் காலத்திற்குக் காலம் வைப்பகத்தினால் முடிவுசெய்யப்படும் விகிதத்தில் வட்டி அறவிடப்படும். மேலதிக விபரங்களுக்கு வைப்பக மேலாளருடன் அலுவல் நேங்களில் தொடர்புகொள்ளலாம்.

**தமிழீழ வைப்பகம்**
**கன்னாதிட்டி,**
**யாழ்ப்பாணம்**
23. 05. 1994

# "எமது தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலே பட்டினிச்சாவிலிருந்து மக்களைத் தடுத்துள்ளது"

## - கரிகாலன்

"இன்று உலகத்திலே பல நாடுகளிலும் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையிலேகூட, ருவாண்டாவிலே நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக அயல் நாடுகளுக்கு ஓடிச்சென்றிருக்கிறார்கள். ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளாரர்கள். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சடலங்கள் வாவிகளிலே மிதந்துகொண்டிருப்பதாக பத்திரிகை, வானொலிச் செய்திகள் கூறிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு மிகப்பெரிய படுகொலைகளைச் சந்தித்து, ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. உலகத்தில் நடைபெற்ற, வெற்றியடைந்த, விடுதலைபெற்ற நாடுகள் எல்லாம் மிகப்பெரிய அளவிலேயே உயிர்களைப் பலி கொடுத்து, பட்டினியால் பலரைக் காவுகொடுத்துத்தான் விடுதலையைப் பெற்றிருக்கின்றன. அந்த நாடுகள் விடுதலை அடைந்திருக்கின்றன. இன்றும் பல இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொடுத்து, விடுதலைக்காக பல நாடுகள் போராடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, மிகச்சொற்பமான உயிரிழப்புக்களையே நாம் சந்தித்திருக்கிறோம்; மிகச்சொற்பமான அழிவுகளையும், சேதங்களையும், துன்பங்களையும்தான் நாம் சந்தித்திருக்கின்றோம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனுடைய அடிப்படையில் முக்கியமாகக்கொள்ளக்கூடியது:

எமது தமிழீழத் தேசியத் தலைவருடைய நெறிப்படுத்தலினாலே, அவருடைய தீர்க்கதரிசனமான சிந்தனைகளினாலே இந்த விடுதலைப் போராட்டம் கட்டி எழுப்பப்பட்டு வருவதுதான் அதற்கு முக்கியகாரணமாக இருக்கின்றது. மக்களை பேரழிவிலிருந்து தடுத்து, எமது மக்களை பட்டினிச்சாவிலிருந்து தடுத்து, அவற்றுக்கேற்ற அடித்தளங்களை இட்டுக்கொண்டு, இந்த விடுதலைப் போராட்டத்தை அவர் வழிநடாத்திச் செல்கின்ற காரணத்தினாலேதான் எமது மக்கள் துன்பங்களைச் சந்திக்காது தவிர்க்கப்படுகிறது.

இவ்வாறு அண்மையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவமொன்றில், உரையாற்றிய தமிழீழ அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட, 'வேளாண் மன்னர்' போட்டியில் மாவட்டரீதியாக 2 ஆம், 3 ஆம் பரிசைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்குமுகமாக இவ்வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ் வைபவத்தின்போது, தமிழீழத் தேசியக் கொடியினை, வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி அன்ரன் அவர்கள் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்டத்தில் 'வேளாண் மன்னராக'த் தெரிவுசெய்யப்பட்டு, தமிழீழத் தேசியத் தலைவரால் கௌரவிக்கப்பட்ட, பண்டிசுட்டான் கண்டாவளையைச் சேர்ந்த திரு. பாலேந்திரனும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் ஏற்றிவைத்தனர்.

ஈகைச்சுடரினை வன்னி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. ஞானம் எற்றிவைத்தார். வன்னி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. எம். ஜி. ஆர், வன்னி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. ஞானம், கிளிநொச்சி அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் திரு. செம்பியன் வாசித்தார்.

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய திரு. கரிகாலன் மேலும் உரையாற்றுகையில், "பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினுடைய செயற்பாடுகளைப் புரிந்து கொண்டு, அவர்களுடைய ஊக்கத்தைக் களமாக அமைத்துக் கொண்டு, எங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்துகொண்டு, விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாக ஒரு உந்துசக்தியாக 'வேளாண் மன்னர்'கள் மாறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்" என்றார்.

இறுதியாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ■

# தமிழர்களின் வயல்களில் சிங்களவர்கள் செய்கை

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான பெருமளவு வயற்காணிகளில், தற்போது சிங்களவர்களும், முஸ்லீம்களும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தம்பலகாமம் பகுதியிலுள்ள நெல் வயல்களில் தமிழர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடக்கூடாதென சிறீலங்கா இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே. இவ் வயல்களில் சிங்களவர்களும், முஸ்லீம்களும் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை செய்கையில் ஈடுபட்டுள்ள சிறு அளவிலான தமிழ் விவசாயிகளும்கூட உரம், கிருமிநாசினி போன்றவற்றை பெறுவதில் பல சிரமங்களை அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கது. ■

# பெண்ணைத் தாக்கியவருக்கு தண்டனை விதிப்பு

பெண்மணி ஒருவரைத் திட்டமிட்டுத் தடியால் அடித்துக் காயப்படுத்திய ஒருவருக்கு எதிராக, சாவகச்சேரி காவல் துறையினரால் சாவகச்சேரி நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

கைதடி நவபுரம் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார். எதிராளிக்கு எதிராக குற்றப்பத்திரம் வாசித்துக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, எதிரி குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து, பதினைந்துநாள் சிறைத்தண்டனையுடன், 500 ரூபா அபராதம் கட்டம்படியும், சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாக 1000 ரூபா செலுத்தும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ■

# மாணவர்களின் அணிவகுப்புடன் மருதங்கேணியில் எழுச்சி நாள்

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் தமிழீழ மாணவர் எழுச்சி நாள், செம்பியன்பற்று றோ. க. த. பாடசாலையில் இருந்து சகல மாணவர்களுடைய அணிவகுப்புக்களுடன் ஆரம்பமாகியது. இவ்வூர்வலம் செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையைச் சென்றடைந்து, அங்கு மாணவர் எழுச்சிநாள் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு மருதங்கேணிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராஜா அவர்கள் தலைமைவகித்தார். ஈகச்சுடரை யாழ். மாவட்ட கடற்புலிகளின் போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் தேனமுதனும், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. ம. மணிமகனும் ஏற்றிவைத்தனர். தேசியக்கொடியை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் (கடற்புலிகளின்) திரு. ஜேந்தன் அவர்களும் எற்றிவைத்தார். தொடர்ந்து மருதங்கேணிக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ராஜலிங்கம் அவர்கள் கல்விக்கோட்டக் கொடியை ஏற்றிவைத்தார். இதனைத்தொடர்ந்து கடற்புலிகளின் கொடியை யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் (கடற்புலிகளின்) செல்வி சுகி அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து இரண்டு நிமிட மௌனஅஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட கடற்புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. செ வைத்தி அவர்களும், தமிழீழ கடற்புலிகள் அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் (மூர்த்தி) அவர்களும் உரைநிகழ்த்தினர். இதனைத்தொடர்ந்து, தமிழ்த்தின விழாவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து, கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. இந்நிகழ்வின்போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டார்கள். ■

# "தேசம் விடிகின்றவேளையில் மக்கள் வாழ்வும் விடியவேண்டும்"

## - இளம்பரிதி

"ஒவ்வொரு தனிமனிதனும் விழிப்புணர்ச்சி அடைகின்றபோது, சமுதாயம் விழிப்புணர்ச்சி பெறுகின்றது. சமுதாயத்தின் விழிப்புணர்ச்சியில்தான் தேசத்தை வளர்க்கமுடியும். எங்களுடைய தேசம் விடிகின்றபோது, மக்களுடைய வாழ்வும் விடிய வேண்டும். இதுவே எமது தலைவரின் ஆசையாகும்". இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்திய வதிவிட வேளாண்மைப் போட்டியின், கோட்டரீதியாக வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், அவர் இதனைத் தெரிவித்தார். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் மகிந்தன் தலைமையில், வரணி மகாவித்தியாலய மண்டபத்தில் இந் நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட மற்றும்பலர் உரையாற்றினர். வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கந்தண்ணா அவர்கள் வழங்கினார். முதற்பரிசை முகமாலை வடக்கு பளையைச் சேர்ந்த க. கருணாகரனும், இரண்டாவது பரிசை பளை வேம்போடுகேணியைச் சேர்ந்த முத்தையா இராசையாவும், மூன்றாம் பரிசை இராமாவில் கொடிகாமத்தைச் சேர்ந்த த. இராசையாவும் பெற்றுக்கொண்டனர். இதில் வட்டவாரீதியாக இடம்பெற்ற போட்டிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ■

# தமிழ்நாள் போட்டி பரிசில் வழங்கப்பட்டது

யாழ். மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும், கோட்டந்தோறும் நான்கு பிரிவுகளாக நடைபெற்ற தமிழ்நாள் போட்டியில், 72 நிகழ்வுகளுக்கான முதல் மூன்று இடங்களைப்பெற்ற ஆயிரத்துக்கும் கூடுதலான மாணவர்களுக்கு, மாணவர் எழுச்சி நாளின்போது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியோடு பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் கடந்த ஆண்டில், யாழ். கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு இறுதிப் பொதுத்தேர்வில் மாவட்ட அடிப்படையில் கூடுதல் புள்ளிகளைப்பெற்ற 10 மாணவர்களுக்கும், 13 கோட்டங்களிலும் முதல் 10 இடங்களையும் பெற்ற 130 மாணவர்களுக்கும் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1993 இல் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெறுவோரின் பெயர், பாடசாலை புள்ளிகள் என்பன தரப்படுகின்றன.

இ. சுஜித்தா, தெல்லிப்பளை தந்தை செல்வா தெ. நி. பா, 293; யோ. சிவகலா, வட இந்துமகளிர் கல்லூரி, 291; ச. சங்கீத்தா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, 290; அ. மாதங்கி, மகாஜனாக் கல்லூரி, 289; ம. தக்சாயினி, நல்லூர் காசிப்பிள்ளை வி., 289; பா. திரிசூலன், பெரியவிளான் றோ. க. த. பா. 288; க. அகல்யா, வட இந்துமகளிர் கல்லூரி, 288; இ. யூலியஸ் நிசாந்தன் சில்லாலை, றோ. க. த. க. பா, 287; ச. வினோதன், இந்து ஆரம்பப் பாடசாலை, 287; சி. பிரணவன், புனித ஜோன் பொஸ்கோ வி., 287. ■

# தொழிலாளியை வேலை நீக்கிய உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளிப்பு

நாவற்குழிப் பகுதியில் உள்ள ஒரு தனியார் ஆலை ஒன்றில், பதினைந்து வருடங்களாகத் தொழில்புரிந்த தொழிலாளி ஒருவரைத் தக்க காரணம் எதுவுமின்றி, வேலை நீக்கம்செய்த ஆலை உரிமையாளருக்கு எதிராக, சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழிலாளி செய்த முறைப்பாட்டை விசாரித்த நீதிமன்றம், வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த கடந்த ஆறு மாதங்களுக்கு, மாதமொன்றுக்கு 2000 ரூபா வீதம் தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், மீண்டும் வேலை வழங்கப்படவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது. இது தொடர்பாக இத்தொழிலாளி தொழில்ரீதியாகப் பாதிக்கப்படக்கூடாதென்றும் நீதிமன்றம் உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ■

# தேர்தல் 'சலுகை' அறிவிப்புக்கள்; திறைசேரிக்குப் பெரும் நெருக்கடி

## யுத்த செலவீட்டுடன் புதிய சிக்கல்

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்திற்கான செலவுடன், எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெறும் நோக்கில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தொடர்ச்சியாக பல சலுகைகளையும், வேலைவாய்ப்புக்களையும் அறிவித்துவருகின்றார். இது சிறீலங்காப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பையும், திறைசேரிக்கு திரவத்தன்மைப் பிரச்சினையையும் ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே யுத்தத்திற்கான குறைநிரப்புப் பிரேரணையாக 1000 கோடி ரூபாவை டி. பி. விஜேதுங்கா அரசு கோரியுள்ளது. இதேசமயம் மே மாதம் முதலாம் திகதியன்று, டி. பி. விஜேதுங்கா தேர்தலைக் குறியாகக்கொண்டு அறிவித்த குட்டி வரவு -செலவுத்திட்டத்தில், சமூகநலத் திட்டங்களுக்கு என 1800 கோடி ரூபா தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு டி. பி. விஜேதுங்காவின் உத்தரவை அடுத்து, 12, 000 ரூபாவிற்கு கீழ் மாதாந்த வேதனம் பெறுபவர்களின் வருமானவரி நீக்கமும், 1993 ஆம் ஆண்டு ஏப்பிரலில் இருந்து பெறப்பட்ட வரி மீளளிப்பும் திறைசேரிக்கு மேலும் நெருக்கடியை உருவாக்கியுள்ளன. இச் சலுகை அறிவிப்பின் மூலம் 80 கோடி ரூபாவை திறைசேரி வருடாந்தம் இழப்பதோடு, 75 கோடி ரூபாவைத் திருப்பிச் செலுத்தவேண்டியும் உள்ளது.

இதேசமயம், டி. பி. விஜேதுங்கா பல புதிய வேலைவாய்ப்புக்களையும் அறிவித்துள்ளார். பிரதேச செயலகங்களில் உள்ள 3000 பதவி வெற்றிடங்களை நிரப்பவும், 6000 ஆசிரிய நியமனங்கள் வழங்குதல் உட்பட, பல வேலைவாய்ப்புக்களை வழங்குவதான அறிவிப்புக்களும், பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டுள்ள திறைசேரியின் பிரதிச் செயலாளர், "மக்களின் சுமைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளின் விளைவாக திறைசேரிக்குத் திரவத் தன்மைப் பிரச்சினை எழுகின்றது" என்றார்.

மேலும் பணவீக்கம் குறைவதை நாம் உறுதிசெய்யவேண்டும். சில சலுகைகளை வழங்கிவிட்டு, பின்னர் விலை அதிகரிப்பிற்கு அனுமதித்தால், எவ்வித அர்த்தமும் இல்லாது போய்விடும். புதிய நாணயத்தாள்களை அச்சிட்டுப் பணவீக்கத்தை உருவாக்க முடியாது" என்றும் அவர் சொன்னார்.

இதேசமயம் டி. பி. விஜேதுங்காவின் இவ் அறிவிப்புக்கள் குறித்து உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவும் கவலைகொண்டுள்ளன.

இவ் அறிவிப்புக்கள் எதிர்காலத்தில், யார் வெற்றிபெற்றாலும் பெரும் சுமையாக அமையும் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். ■

# 1990 இல் நடந்த கொலை பற்றி பொலிசார் விசாரணை

## சொத்தி உபாலி இரகசியப் பொலிசாரிடம்

1990 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் திகதி, பாதுக்க பொலிஸ் பகுதியில், இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு, டயர் போட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, தற்போது பாதுக்க பொலிசார் புதிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் காடையர் குழுத் தலைவர் ஒருவர்தான் இக்கொலைக்கு பொறுப்பு எனக் கூறப்படுகின்றது.

கத்தியால் குத்தப்பட்டு, ஊனமாக்கப்பட்ட இவ்விளைஞர் ரயர் போட்டு எரிக்கப்பட்டு, சாகும் படிவிடப்பட்டார். ஆனால் எரிகாயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கையில், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் அங்கு வாக்குமூலம் அளிக்கையில் தான் யாரால் காயப்படுத்தப்பட்டார் என்பதைக் குறிப்பிட்டிருந்தார் எனினும், பின்னர் அவ்விளைஞர் மரணமடைந்துவிட்டார்.

இவ்வாறு அந்தக் காடையர் குழுத்தலைவரின் பெயர் தெரிய வந்தபோதும், பொலிசார் அப்போது விசாரணைகளைத் தீவிரமாக்கவில்லை. ஆனால் இப்போது அவர் கைதுசெய்யப்பட்டிருப்பதையடுத்து பொலிசார் இவ்வழக்கு மீதான விசாரணையை நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, சொத்தி உபாலி உட்பட, பொலிசாரால் கைது செய்யப்பட்ட பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் இப்போது இரகசியப் பொலிசாரின் ஆறாம் மாடியில் வைத்து விசாரிக்கப்பட்டுவருகின்றனர். சொத்தி உபாலி தற்போது பொரல்லை, பாதுக்க, நீர்கொழும்பு மற்றும் மீரிகான பொலிசாரால் அவ்வப்பகுதியில் நிகழ்ந்த குற்றச்சம்பவங்களில் அவரது தொடர்பு குறித்து விசாரிக்கப்பட்டுள்ளார். ■

# தமிழ் இளைஞர்கள் 'ரெலோ' குழுவால் கடத்தல்

கொழும்பில் இயங்கும் தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினர்கள் மூவர், 'ரெலோ' குழுவால் கடத்திச்செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். சில நாட்களின் முன், இவர்கள் ஈ. பி. டி. பி. குழுவினராலும் கடத்தப்பட்டு, 20 ஆயிரம் ரூபா பணம்பெறப்பட்டதுடன், தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து இயங்கக்கூடாது எனவும் எச்சரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த சில தமிழ் இளைஞர்கள் இணைந்து, கொழும்பில் இத்தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நிர்மாணித்திருந்தனர். இவர்கள் முத்தமிழ்விழா ஒன்றையும் நடாத்த ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கென இவர்கள், சில தமிழ்க் குழுக்களின் பெயர்களைப் பாவித்து, நிதி திரட்டியதாகக் கூறப்பட்டபோதிலும் அவர்கள் அதனை மறுத்துள்ளனர். இதன்காரணமாகவே இவர்கள் கடத்தப்பட்டதாகவும், மிரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ■

# "கடற்றொழிலாளர்கள் இன்னலில் வாழ்கின்றனர்"

## □ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

"போர்ச் சூழல் காரணமாக தமிழ்க் கடற்றொழிலாளர்கள் மிகப்பெரிய கஸ்டத்துக்கு ஆளாகியுள்ளனர். கடினமாக உழைத்து, தமது வாழ்வை மகிழ்ச்சிகரமாக நடத்திவந்த வடபகுதி கடற்றொழில் சமூகம், இன்று கடலிலே கால்வைப்பதற்குக்கூட அச்சங்கொண்டு, உயிரைப்பணயம் வைக்கும் நிலையில் தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்றவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது".

யாழ். மாவட்ட மீன்பிடி இலாகா பிரதி அதிபர் திரு. இலங்கநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவில் மேற்கு ஜே. 125 கிராமசேவகர் பிரிவில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட, கொக்குவில் கடற்றொழிலாளர் கூட்டுறவு அபிவிருத்திச் சங்க வைபவத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. இலங்கநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஒருவர் பலருக்கும், பலர் ஒருவருக்கும் உதவுவதே கூட்டுறவின் அடிப்படை அம்சம். அந்த நோக்கில் நாம் செயற்படுவோமாகில், பல இன்னல்களை எதிர்கொண்டு வாழ்வின் வெற்றியைக் காணமுடியும்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கொக்குவில் மேற்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. சந்தோசம் பேசுகையில்:

"கடல்வளம் எமது தமிழீழத்தின் மிகமுக்கியமான பகுதி; இதன் அவசியம் உணரப்பட்டதின் காரணமாக, 'கடல்வளம்' என்ற பெயரில் எமது தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டு, தொழில்நுட்ப வல்லுநர்கள் பலரின் ஆற்றலுடன், கடற்றொழில் கலங்கள், உபகரணங்கள் போன்றவற்றை நாமே தயாரிக்கின்றோம். அரசின் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் எமது கடல்வளத்தை, எமது மக்களின் உறுதிமிக்க உழைப்போடு பயன்படுத்தி, கடற்றொழில் சார்ந்த மக்களின் பல்வேறு நலன்களுக்கும் உதவுமுகமாக உழைத்துவருகின்றோம். போர் ஓர்புறமும், எமது உணவுத்தேவைகள் மறுபுறமாக எமது நடவடிக்கைகள் ஓரளவு கைகூடிவருகின்றன என்றார்". ■

# யாழ். தபாலில் வந்த பணம் காவல் ஊழியரால் கையாடல்

யாழ். தபாலில் வந்த பணம் காவல் ஊழியரால் கையாடப்பட்டதாக அறியப்படுகின்றது.

யாழ். தபாற்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. காவல் ஊழியரின் மோசடி ஒன்றை அடுத்து, கொழும்பு மத்திய தபால் தரம்பிரிக்கும் நிலையத்தில், யாழ். குடாநாட்டிற்கு கப்பலில் அனுப்பப்படும் தபால்களை சோதிக்கும் வேலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அண்மையில் கையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் வெளிநாட்டிலிருந்து யாழ். குடாநாட்டுவாசி ஒருவருக்கு வந்த பணத்தாள்களை தமக்குள் பிரித்து எடுத்துக்கொண்ட நடவடிக்கை அம்பலத்திற்கு வந்ததையடுத்தே, இச் சோதனைகள் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மேற்படி பணநோட்டுக்கள் காவல் ஊழியர்களால் கையாடப்பட்டதைக் கண்ட தரம்பிரிக்கும் ஊழியர் ஒருவர், இதை உயரதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரவே, விசாரணை நடத்தப்பட்டு, அந்தக் காவலர்கள் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து சோதனை நடவடிக்கையில் காவல் படையினரை விலக்குமாறு அதிகாரிகள் வேண்டுகோள்விடுத்தனர்.

யாழ். செல்லும் தபாற்பொதிகள் இங்கு வைத்தே படையினராலும் சோதனையிடப்படுவது வழக்கமாகும். ■

# மின்சார உபகரணங்களை குறைந்த வலுவுடன் இயக்கும் பொறி கண்டுபிடிப்பு

மின்சார உபகரணங்களைக் குறைந்த வலுவுடன் இயக்கக்கூடிய பொறியொன்று, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பொறி மூலம் வானொலிப்பெட்டி, கறுப்பு - வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி, ஒலிபெருக்கி ஆகிய உபகரணங்களைக் குறைந்த மின் வலுவுடன் இயக்க முடியும் என சக்திப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள சிறீலங்கா அரசின் மின்சாரத் தடையைக் கருத்திற் கொண்டு, இப்பொறி வடிவமைக்கப்பட்டுள்ளது. கைகளினால் அல்லது கால்களினால் இதனை அசைப்பதன் மூலம் உபகரணம் இயங்குவதற்குத் தேவையான மின்சக்தியை இப்பொறி வெளிவிடும்.

புதிய பொறியைப் பயன்படுத்த விரும்புவோர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். ■

# குழாய்க்கிணறு

மக்கள் நன்னீரைப் பெறும் நோக்குடன், வலிகாமம் பிரதேசத்தில் பல பொது இடங்களிலும் குழாய்க்கிணறு அமைக்கும் வேலையை தேசநிர்மாணிகள் செய்துள்ளனர்.

இச்செயற்பாட்டின் மூலம் வலிகாமம் வடக்கில் மல்லாகம் கலைமகள் சனசமூக நிலையம், குலமங்கால் சனசமூக நிலையம், அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும்; வலிகாமம் தெற்கில் உடுவில் மான் கலஹுரிக்கு அருகாமை, வைரவர்வீதி, உடுவில் கமநல சேவை நிலையம் ஆகிய இடங்களிலும்; வலிகாமம் கிழக்கில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாசாலை, சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன்பாடசாலை, கோப்பாய் அரசினர் வைத்தியசாலையடி ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# கோவில் கட்டிடங்களில் முகாமிட்டிருக்கும் சிறீலங்காப் படைகள்

மட்டக்களப்பு பகுதி மக்களின் அயராத முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான இந்து இளைஞர் மன்றச் செயலகத்தையும், அங்கிருந்த நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களையும் சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்து அபகரிப்புச் செய்து தனது முகாமாக்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

இதனை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றச் செயலாளர் சிறீலங்கா அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ள போதிலும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை.

இது ஒருபுறம் இருக்க மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் தீர்த்தோற்சவ மண்டபத்தில் சிறீலங்காப் பொலிசார் முகாமிட்டிருப்பதால், மாமாங்கப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவத்தைக் கொண்டாட முடியாத நிலமை காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# "ஊழலும், கொடூரமும் மலிந்த நாடாக சிறீலங்கா இப்போதுள்ளது"

## □ திருமதி சந்திரிக்கா கவலை

"கொடூரம் இழைக்கப்படுவதுதான், இன்றைய சிறீலங்கா சமூகத்தின் நியதியாக இருக்கின்றது. எனவே சரியாகச் சிந்திக்கும் ஒவ்வொரு குடிமகனதும் தலையாய கடமையாக, சமூகத்தில் ஒழுங்கு மீளநிலைநாட்டப்படுவதாகவே இருக்கவேண்டும்" இவ்வாறு பொதுசன மக்கள் முன்னணிப் பிரமுகரும், மேல் மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

நாரகேன்பிட்டி சிறிசம்புத்த ஜயந்தி விகாரையில், அண்மையில் நடைபெற்ற சமய நிகழ்ச்சியொன்றில், கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், "மது, சூதாட்டம், போதைப் பொருட்கள் போன்றவற்றுக்கு பல்வேறு மட்டங்களிலும் மக்கள் அடிமைகளாகியுள்ள நிலைமையே காணப்படுகின்றது. மேல் வகுப்பினர் என்று தம்மை எண்ணிக்கொள்பவர்களாலேயே சமூகத்தின் இன்றைய கெட்ட நிலைமைகள் தோன்றியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாகரிக சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத ஊழலும், கொடூரமும் அண்மைக் காலத்தில் இங்கு மிகவும் பரவியிருப்பதாகவும் தெரிவித்தார். ■

# முதலில் பாராளுமன்றத் தேர்தல்; டி.பியின் நிலைப்பாடு மாறியது ஏன்?

ஜனாதிபதித் தேர்தலா? பாராளுமன்றத் தேர்தலா? முதலில் நடத்துவதென்ற குழப்பத்தில் இருந்து, டி. பி. விஜேதுங்கா தீர்மானம் ஒன்றிற்கு வந்துவிட்டார். ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதென்ற டி. பி. விஜேதுங்காவின் முடிவானது, அரசியல் வட்டாரங்களில் பலருக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்துள்ளது. இதற்குக் காரணம். இத்தேர்தல் முடிவானது, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே அடுத்த ஜனாதிபதி யார் என்பதை வெளிப்படுத்திவிடும் என்பதனாலேயே ஆகும்.

இந்தவகையில், கொழும்பு பி. பி. சி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளது போல், "இது டி. பி. விஜேயதுங்காவின் ஒரு துணிச்சலான முடிவு" என்பதில் சந்தேகமில்லை.



இதேசமயம், டி. பி. விஜேதுங்காவின் முடிவானது, அவரின் வழமையான அரசியல் பாணியில் அமைந்த, முன்னுக்குப்பின் முரணான முடிவு என்றே சொல்லமுடியும். இவ்வருடத்தினை ஒரு தேர்தல் ஆண்டாக டி. பி. விஜேதுங்கா வருட ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தியபோது, ஜனாதிபதித் தேர்தலா, பாராளுமன்றத் தேர்தலா? முதலில் என்ற கேள்வி எழுந்தது. அப்பொழுது முதலில் ஜனாதிபதித் தேர்தலே என்ற நிலைப்பாட்டையே டி. பி. விஜேதுங்கா எடுத்தார்.

தேர்தல்கள் யாவும் உரிய காலத்தில் நடத்தப்படுமென அவர் வெளிப்படையாகவே அறிவித்துமிருந்தார்.

டி. பி. விஜேதுங்கா இப்படியானதொரு நிலைப்பாட்டை எடுத்தமைக்கு சீரான அரசியல் நடைமுறை எனக் காரணம் கூறப்பட்டதாயினும், ஐ. தே. கவில் காணப்பட்ட உள் முரண்பாடே காரணம் என அரசியல் விமர்சகர்கள் கருதினர். பாராளுமன்றத் தேர்தல் -முதலில் நடத்தப்படுமானால், ஐ. தே. கவிற்குள் புகைந்துகொண்டிருந்த உட்கட்சி முரண்பாடு, வேட்பாளர்களை நியமனம் செய்வதோடு பற்றி எரியும் பிரச்சினையாக உருவாகும் எனவும், அது ஜளாதிபதித் தேர்தலைப் பாதிக்கும் எனவும் கருதப்பட்டது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டால், கட்சி வேட்பாளர் பட்டியலில் இடம் பெறும் நோக்கில் தேர்தலில் சகலரும் ஒத்துழைக்க முன்வருவர் என முடிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆனால், தற்போதைய டி. பி விஜதுங்காவின் முடிவானது, முன்னைய கருத்துக்களை அவர் மாற்றிக்கொண்டுவிட்டார் என்றே கொள்ளமுடியும். இம்மாற்றத்திற்கு கட்சிக்குள்ளும் அதேசமயம் வெளி அரசியலிலும் குறிப்பாக சுதந்திரக்கட்சியின் நிலைமையும் காரணங்களாக இருக்கலாம் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு

இதில் முக்கியமான காரணியாக சுதந்திரக்கட்சியின் தலைமை குறித்து அக்கட்சிக்குள் எழுந்துள்ள குழப்ப நிலையை அரசியல் அவதானிகள் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்காவா? சந்திரிகா குமாரணதுங்காவா? கட்சியின் தலைமையை ஏற்பது குறித்து, எழுந்துள்ள சர்ச்சையானது, அக்கட்சியின் பல மட்டங்களில் பலமான கருத்துபேதங்களை ஏற்படுத்தியுள்ளது. இது மக்கள் மத்தியில் கட்சிக்குள்ள செல்வாக்கைப் பாதிக்கும் கட்டம்வரையில் வந்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்காவை கட்சி தெரிவு செய்துள்ள போதிலும், இதில் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் திருப்தி இருப்பதாக இல்லை. அத்தோடு, சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்பட்சத்திலேயே எதிரணியினரின் வெற்றி பிரகாசமாகவுள்ளது என பத்திரிகைகளும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன. இதேவேளை கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் சந்திரிகா குமாரணதுங்காவை ஆதரிப்பதாக இல்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்விடயத்தில் விட்டுக்கொடுக்கத் தாயாராக இருப்பதாகக் கூறுகின்றபோதும், அவரின் நடவடிக்கைகள் அதிலிருந்து முழுமையாகப் பின்வாங்கவில்லை என்றே கூறவைக்கின்றது. இதனை அண்மையில் 'ராவய' போன்ற பத்திரிகைகளின் போக்கினை அவர் வன்மையாகச் சாடியதிலிருந்து புரிந்துகொள்ள முடியும். 'ராவய' போன்ற பத்திரிகைகள் சந்திரிகா குமாரணதுங்காவிற்கு ஓரளவு சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன என்பது இங்கு முக்கியமானதாகும்.

இதேசமயம், சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள உட்கட்சி முரண்பாடானது, அக்கட்சிக்குள் பிளவுகளைக்கூட ஏற்படுத்தலாம் எனவும் டி. பியால் எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராவை ஆதரிப்போரும் 'கெல உறுமய' குழுவினரும் இதை மேற்கொள்ளமுடியும். இதற்கான நம்பிக்கையை அனுரா வழங்கியிருக்கலாம். இவ்வாறு ஒரு பகுதியினர் வருவார்களேயானால். அவர்கள் ஐ. தே. காவிலிருந்து வெளியேறுபவர்களின் இடத்தை நிரப்புவார்கள் என டி. பி. விஜேதுங்கா கருதியிருக்கலாம். ஆனால், இதற்கும் மேலாக எதிர்கட்சியினரின் . முரண்பாட்டை டி. பி. விஜேதுங்கா பயன்படுத்த முற்பட்டுள்ளமைக்கு, வேறு ஒரு காரணமும் அரசியல் விமர்சகர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

டி. பி. விஜேதுங்கா, சந்திரிகா குமாரணதுங்காவை ஜனாதிபதித் தேர்தலில் சந்திப்பதற்கு அஞ்சுவதாகக் கூறப்படுவதே அதுவாகும். இந்நிலையில் எதிர்க் கட்சித்தரப்பில் குழப்பம் நிலவும் வேளையில், தேர்தலை அறிவித்து, சுதந்திரக் கட்சிக்குள் தலைமைப்போட்டியை விரிவாக்குதல் மூலம், ஐ. தே. கவின் தேர்தல் வெற்றியை உறுதிசெய்யலாம் எனவும் இதன்பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் பலமானநிலையில் யாரையாவது சந்திக்கலாம் என அவர் திட்டமிட்டிருக்கலாம். அதாவது, பாராளுமன்றத் தேர்தலில் உறுதிசெய்யப்படும் வெற்றியானது, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வெற்றிவாய்ப்பைத் தேடிக்கொடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஐ. தே. கவிற்குள் முரண்பாடு

இவ்வாறாக எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள உள்முரண்பாட்டைப் பயன்படுத்த, டி. பி. விஜேதுங்கா எண்ணம் கொண்டிருப்பினும், ஐ. தே. கவிற்குள் உள்ள உள்முரண்பாடே அவரை பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடாத்துவதற்கு தீர்மானம் எடுக்கவைத்திருக்கும் என்பதே வலுவான காரணியாக உள்ளது என அரசியல் விமர்சகர்களின் பலமான அபிப்பிராயமாகும்.

இவ்வாண்டைத் தேர்தல் ஆண்டாக டி. பி. விஜேதுங்கா அறிவித்தபோது, ஐ. தே. கவிற்குள் இன்றுள்ளதுபோல முரண்பாடுகள் வெளிப்படையான மோதலாக இருக்கவில்லை. ஐ. தே. கவிற்குள் அன்றும் முரண்பாடுகள், அணிகள் என்பன இருந்தாலும், அவை உட்கட்சி ஜனநாயகம் என்றரீதியில் மறைக்கப்பட்டிருந்தன. ஆனால் தென்மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து, ஐ. தே. கவிற்குள் ஏற்பட்ட முரண்பாடானது, என்றுமில்லாதவாறு கட்சியைப் பலவீனப்படுத்தியுள்ளது.

**ஜெயராஜ்**

பிரேமதாசா அணி என்றும், ஜே. ஆர். அணியென்றும், டி. பி. விஜேதுங்காவின் அணியெனவும் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடானது, அண்மையில் ஓர் சமரசத்தை எட்டும் கட்டத்தில் இல்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

### காமினி வருகையும் விரிசல் அதிகரிப்பும்

இம் முரண்பாடானது, காமினி திசாநாயக்காவை மீண்டும் பாராளுமன்றத்திற்குள் கொண்டுவர ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேற்கொண்ட முயற்சியின்போது உச்சக்கட்டத்தை அடைந்தது. இதன்காரணமாக, ஐ. தே. கட்சியின் பொதுச்செயலாளர் சிறிசேனகூரே பதவி விலகும் அளவிற்கும் நிலைமை சென்றது.

ஆனால் கூரே பதவிவிலகியதுடன், பிரச்சினை தீரவில்லை. காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்குவதற்கும், அமைச்சர் ஆக்குவதற்கும் பகீரதப்பிரயத்தனத்தை டி. பி. விஜேதுங்கா மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால் இதில் அவர் வெற்றிபெற்றதாக வெளிப்பார்வைக்குத் தெரிகின்றபோதும், அவர் பல எதிர்ப்புக்களுக்கு முகம்கொடுக்கவேண்டியதாக இருந்தது. இவ் எதிர்ப்பானது, தற்பொழுதுகூட ஒடுக்கப்பட்டுவிட்டதாகவோ, அன்றி களையெடுக்கப்பட்டுவிட்டதாகவோ இல்லை. பல அமைச்சர்கள் அமைச்ரவைக்குள் காமினியின் வருகையை இன்னும் எதிர்க்கின்றனர். இவர்களில் சிலர், அமைச்சரவைக் கூட்டங்களை புறக்கணிக்கத் திட்டமிடுவதாகவும் அறியமுடிகின்றது.

### பிரேமதாசா குடும்பத்தின் எதிர்ப்பு

இதேசமயம், பிரேமதாசா குடும்பத்தினரும் டி. பி. விஜேதுங்கா அரசிற்கெதிரான ஒரு பலமான சர்ச்சையை உருவாக்கிவருகின்றனர். பிரேமதாசா கொலையில் சந்தேகம் தெரிவித்துள்ள அவர்கள், அரசாங்கம் புலன்விசாரணையில் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதோடு, மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணை திருப்தியில்லை எனக்கூறி, அதை நிராகரித்தும் உள்ளனர்.

அத்தோடு, அரசிற்கெதிரானதும், அவமானப்படுத்தும் நடவடிக்கையாக அரசாங்கம் அமைத்த பிரேமதாசாவின் சிலை பிரேமதாசாவைப் பிரதிபலிக்கவில்லை எனக்கூறியதோடு, புதியசிலை ஒன்றையும் திறந்துவைத்துமுள்ளனர். இந்நிலையானது, டி. பி. விஜேதுங்காவின் போக்கில் பிரேமதாசா குடும்பத்தினர் திருப்தியடையவில்லை என்பதோடு, அவருக்கு எதிராக செயற்படவும் தயாராக உள்ளனர் என்பதை வெளிப்படுத்துபவையாகவுமே உள்ளது.

### கட்சியில் யாரை நம்புவது?

இவ்வாறாக கட்சிக்குள் எழுந்த உள்முரண்பாடு காரணமாக, கட்சிக்குள் யாரை நம்புவது? எவரை நம்பிச்செயற்படுவது? என்பது குறித்து பலத்த சந்தேகம் டி. பி. விஜேதுங்காவிற்கு அண்மைக்காலத்தில் எழுந்தது.

அவருக்கு இவ்வாறான சந்தேகங்கள் உருவாவதற்கு நியாயபூர்வமான காரணிகளும் உண்டு. எடுத்துக்காட்டாக கொழும்பு மத்தியதொகுதி ஐ. தே. கட்சியின் அமைப்பாளராகவுள்ள கூரே இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்புக்கிட்டினால், போட்டியிடுவதில்லை; கட்சி வேலைகளில் ஈடுபடப்போவதில்லை என்று தனது ஆதரவாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்றதொரு நிலையே மத்திய மாகாணத்திலும் உருவாகியுள்ளது. அண்மையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா செய்த அமைச்சரவை மாற்றத்தினால், மத்திய மாகாண ஐ. தே. க. அமைப்பாளரும், அமைச்சருமான அலுத் அலுவிகார அதிருப்தியடைந்தார். இதன்காரணமாக டி. பி. விஜேதுங்கா மாற்றிவழங்கிய அமைச்சர் பதவியை நிராகரித்திருந்தார். பின்னர், ஐ. தே. கவின் முக்கிய பிரமுகர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக இணைந்துகொண்டார். ஆயினும் அம்முரண்பாடு தீர்ந்ததாகக் கொள்ள முடியாது.

ஏனெனில், அலுத்விகாரவிற்கும் டி. பி. விஜேதுங்காவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு, அமைச்சுப் பதவியுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல; மத்திய மாகாணத்தில் ஐ. தே. கட்சிக்குள் எழுந்த முரண்பாட்டின் வெளிப்பாடாகும்.

ஐ. தே. கட்சிக்குள் மத்திய மாகாணத்தில் உள்ள முரண்பாட்டின் வெளிப்பாடே, ஐ. தே. கட்சியைச் சேர்ந்த நுவரேலியா நகரபிதா பதவிவிலக வேண்டும் என, மத்திய மாகாணசபையில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பிரேரணை வெற்றி பெற்றுள்ளமையாகும். இரகசிய வாக்கெடுப்பு மூலம் இத்தீர்மானம்



நிறைவேற்றப்பட்டமையானது, ஐ. தே. கவிற்குள் இன்றுள்ள முரண்பாட்டிற்கு சிறப்பானதொரு உதாரணமாகும்.

இவ்வாறாக உட்கட்சி முரண்பாடுகளின் உச்சக்கட்டம்தான், டி. பி. விஜேதுங்காவை ஜனாதிபதித் தேர்தலின் முன், பாராளுமன்றத் தேர்தலை நடாத்தும் முடிவை எடுக்கத்தூண்டியது என்று கூறலாம். பாராளுமன்றத் தேர்தல் முடிவின் மூலம் ஜனாதிபதித் தேர்தலை ஊகிக்க முடியுமாயினும், பாராளுமன்றத் தேர்தல் நடைபெறின், டி. பி. விஜேதுங்கா தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள அது உதவும் என்பது மட்டும் நிச்சயம்.

அத்தோடு இலங்கை பூராகவும் நடத்தப்படவேண்டிய ஜனாதிபதித் தேர்தலுக்கு இதன் மூலம் வழிஒன்றைத் தேடமுடியுமா என்பதும், டி. பி. விஜேதுங்காவின் சிந்தனையாக இருக்கலாம். ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஐ. தே. கட்சி பெறும்பட்சத்திலேயே அது சாத்தியமாகக்கூடியதாகும். ஆனால், இதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடத்தப்படுமானால், ஐ. தே. கவிற்குள் இன்றுள்ள நிலையில் வேட்பாளர்பட்டியல் தயாரிப்பதில் சிக்கல்கள் எழக்கூடும். சிலர் கட்சியைவிட்டு விலகவும் கூடும். ஆயினும் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர், தனதுநிலை வலுவாகும் என்றே டி. பி. விஜேதுங்கா கருதுகின்றார். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்கள் பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெறுவார்களாயின், தனதுநிலை மேலும் உறுதிப்படும் என அவர் கருதுவதில் தவறில்லை.

அதாவது இவ்வெற்றியின் மூலம் தனது கொள்கையுடனும், தனது அணியிருடனும் தான் ஜனாதிப

**தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...**

# "மக்களின் சிந்தனைச் சித்திரமாக மலர்ந்துள்ள 'மண்ணுக்காக'"

## வீடியோத் திரைப்பட வெளியீட்டில் கரிகாலன்

"இந்த வீடியோத் திரைப்படம், மண்ணில் நிலைத்து நின்று போரிடும் மக்களின் சிந்தனையைத் தூண்டும் சித்திரமாகும். விமானக் குண்டுகளைவிட, கலை ஊடகங்கள் சக்திவாய்ந்தவை".

மேற்கண்டவாறு தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அண்மையில் நடைபெற்ற 'மண்ணுக்காக' வீடியோத் திரைப்பட வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசும் பொழுது:-

"இந்த வீடியோச் சித்திரம் எமது கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் சித்திரமாகும். இதுவரை வெளிவந்த வீடியோப் படங்களைவிட, மக்களைச் சிந்திக்கத் தூண்டும் விதமாக இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இக் கலைவடிவங்களின் தேவை இங்குள்ளது. இதன் மூலம் இனவாத அரசின் நோக்கங்களுக்குப் பதிலடி கொடுக்கும் சிந்தனை வளர்க்கப்படும்" என்றார்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் அங்கு பேசும் போது, "வீடியோத் திரைப்பட வரலாற்றில், 'மண்ணுக்காக' படம் ஒரு திருப்புமுனை; இது கணிசமான வெற்றியைப் பெற்றுத்தரும்; உயரிய கலைப் படைப்பைப் படைப்பது சிரமமானது; இந்த மண்ணில் வீடியோத் திரைப்படக்கலை மேல் நோக்கி நகர்கின்றது; இது மகிழ்ச்சிக்குரியது; மக்களைச் சென்றடைவதில்தான் இப்படத்தின் வெற்றி தங்கியுள்ளது; எமது மண் வித்தியாசமானது; கலை மலினப்பட்டுப் போகாது; வலுவான கதை; அதி உச்சமான விலையை இந்த மண்ணுக்கு மக்கள் எப்படி வழங்கலாம் என்பதை இத்திரைப்படம் கூறியுள்ளது. எமது பிரச்சினையை வெளிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. நல்வழியில் மேல் நோக்கி வீடியோத் திரைப்படம் வளர்ந்து நகரவேண்டும். உச்சங்களைத் தொடவேண்டும் என்றார்".

முன்னதாகத் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. தங்கன் மங்கள விளக்கேற்றினார். கலை, பண்பாட்டுத் துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் வீடியோத் திரைப்பட நாடாவை வெளியிட்டு வைக்க, மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி ரதி அதைப் பெற்றுக்கொண்டார்.

யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா, பங்குபற்றிய கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். ■

# உயிர்களைப் பறிகொள்ளும் எறிகணை வீச்சுக்களை உடன் நிறுத்துக

## ■ சிறீலங்கா ஜனாதிபதிக்கு கத்தோலிக்க மதகுருமார் மகஜர்

"மண்டைதீவு, காரைநகர், பலாலி இராணுவ முகாம்களில் இருந்து பொதுமக்களின் குடிமனைகளை நோக்கி கண்மூடித்தனமான முறையில் மேற்கொள்ளப்படும் மூர்க்கத்தனமான எறிகணை வீச்சுக்களினால் பலர் பலியாவதுடன், பலர் படுகாயமடைந்தும் வருகிறார்கள். பல வீடுகளும் அழிக்கப்பட்டு பொருட் சேதங்களும் ஏற்படுகின்றன. எனவே செல் அடிகளை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்."

இவ்வாறு நற்சமூக நடுநிலைய இயக்குனரும் கத்தோலிக்க மதகுருவுமான அருட்திரு டாக்டர் எஸ். ஜே. இமானுவேல் சிறீலங்கா ஜனாதிபதிக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். ■

# குருநகர் சந்தைப் பகுதியில் மக்கள் கூட்டம் மீது எறிகணை வீச்சு

## மூவர் பலி, 30 இற்கும் மேற்பட்டோர் காயம்

குருநகர் தொடர்மாடி சந்தைப் பகுதியை நோக்கி, மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர், எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதில், மூவர் கொல்லப்பட்டனர். 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அண்மையில், மேற்படி சந்தைப் பகுதியில் மீன் வியாபாரம் சூடு பிடித்திருந்தவேளையில், இந்த எறிகணைப் பிரயோகம் நடந்தது.

தொடர்ச்சியாக நான்கு தடவைகள் குருநகர்ப் பகுதி மீது எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதலில் ஏவப்பட்ட எறிகணை கடற்கரைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. அடுத்த எறிகணை சந்தைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. மற்றய இரண்டும் கடற்கரையை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

சந்தைப் பகுதியில் மீன் விற்பனையில் ஈடுபட்டிருந்தவர்களும், மீன் வாங்கச் சென்றவர்களுமே இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தில் ஸ்தலத்தில் இறந்தவர் எனக் கூறப்படும் காசிநாதர் என்பவர், படுகாயமடைந்து நூறு யார் தூரம் ஓடி வந்து மூச்செறிந்த நிலையில், நிலத்தில் வீழ்ந்து இறந்தார். இவரது விபரம் தெளிவாகக் கிடைக்கப்பெறவில்லை.

முத்து. கேசவநாதன் என்பவர் (வயது 46) கால் ஒன்று உடைந்த நிலையில், மார்பில் படுகாயமடைந்து, மருத்துவமனைக்குக் கொண்டுவந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது, இறந்தார். இவர் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது. மேலும் பொற்பதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த பிரேமானந்த் (வயது20 ) என்பவர் மேற்படி சம்பவத்தில் பலியானார்.

இத்தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்களுள் யாழ்.-போதனா மருத்துவமனையில் 18 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ■

# சிங்கள அரசு கல்வியை அரசியலாக்கி இன ஒழிப்பில் ஈடுபடுகின்றது!

## □ தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அறிக்கை

"கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த எமது தேசியத் தலைவர் அவர்கள், கல்வி வளர்ச்சிக்கெனப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். ஆனால், சிங்கள அரசு எமது கல்வியை அரசியலாக்கி, எமது கல்வியை அழிக்கும் நோக்கில், திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. மாணவர் கல்வியைத் தொடரவும், வாழ்வை உறுதிப்படுத்தவும் போராடியே ஆகவேண்டியுள்ளது" இவ்வாறு தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில், "கல்விச் சமூகத்தில் ஏற்பட்ட விழிப்பின் அடிப்படையில், யூன் 5 மாணவர் எழுச்சி நாளாகக் குறிப்பிடப்பட்டு, இவ்வாண்டிலிருந்து கொண்டாடப்படுகின்றது. உலகில் நடைபெற்றிருந்த, நடைபெற்றுவருகின்ற, தேசிய விடுதலைப் போராட்டங்கள், புரட்சிகள் எல்லாம் முகிழ்ச்சியடையவும், வீறுகொள்ளவும் வைப்பவர்களில், முதன்மையானவர்கள் மாணவர்களே. மாணாக்கர் வலு என்பது, உலகின் ஆற்றல்மிக்க வலு என்று எல்லோராலும் உணரப்பட்டதே. எமது சமுதாய ஏற்றத்தின் தூணாக விளங்கப்போகின்ற தமிழீழ மாணாக்கரின் அடித்தளத்தையே தகர்த்து, வலுவிழக்கச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு, சிங்கள அரசு திட்டமிட்டுச்செயற்பட்டு வருகின்றது. மாணவர்களின் எதிர்காலத்தையே அழித்துச் சிதைப்பதற்காக, சிங்கள அரசு பல்வேறு அழுத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. தமிழீழ மாணவர்கள் கல்வி கற்பதற்கு மட்டுமன்றி, உயிர் வாழ்வதற்கே போராடவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள்.

கல்வியின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தபடியால் தான், எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், கல்வியை மேம்படுத்துவதற்குப் பல அமைப்புக்களை ஏற்படுத்திச் செயற்படுத்தி வருகின்றார். ஆனால், சிங்கள அரசு தமிழ் மாணவர்களின் கல்வியை அரசியலாக்குகின்றது; எமது மாணவர்களது கல்வித்தகமை வளர்ச்சியடையாது தடுக்கப்படுவதுடன், கல்வித் தகமையைத் தாக்கி அழித்துவிடும் நோக்கில், திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடரவும், வாழ்வை உறுதிப்படுத்தவும் போராடியே தான் ஆகவேண்டும். நெருக்கடிகளைத் தகர்த்து எறியும் விடுதலைப் போராட்டம், வீறோடு நடைபெறுகையில், மாணவர்கள் தம்மாலான பங்களிப்பைச் செய்யவேண்டும்.

மாணவர் எழுச்சி நாளைக் கொண்டாடுகின்ற இந்நாளில், மாணவர் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில், முழுமையான மனிதர்கள் ஆகவேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# இராணுவத்தினரின் அழிவுவேலைகளை சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சு மூடிமறைப்பு

வவுனியா மாவட்டத்தில் "ஜெயமகா" என்ற சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது சிறீலங்கா இராணுவம், அப்பகுதியிலிருந்து அகதியாக வெளியேறி இருந்தவர்களின் வீடுகளை அத்திவாரம் கூட இல்லாமல் நாசமாக்கியது. இது குறித்து சிறீலங்கா ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்ட புகாருக்கு சிறீலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சு பதிலளித்துள்ளது. அதில் சிறீலங்கா இராணுவம் இவ்வழிவு வேலைகள் எதையும் செய்யவில்லை எனவும், வீடுகள் அதே நிலையில்தான் இருந்தன எனவும் அப்பட்டமான பொய்யினைக் கூறியுள்ளது. சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சு தனது இராணுவத்தின் அழிப்பு நடவடிக்கைகளை மூடிமறைத்து அபயம் கொடுக்கின்றது. ■

# இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவை ஓரம்கட்ட அரசாங்கம் முயற்சி

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவை 'ஓரம்கட்டும்', நடவடிக்கைகள் அரச உயர் மட்டத்தில் நடைபெறுவதாக 'ராவய' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கமில்டன் வனசிங்காவை நீக்கிவிட்டு, இப்பதவிக்கு முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவை நியமிக்க முயற்சிகள் நடப்பதாகவும் 'ராவய' குறிப்பிட்டுள்ளது.

ஜெரி டி சில்வாவை நீக்கும் முயற்சிக்கு, வட -கிழக்கு போரில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதும் காரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால், ஜெரி டி சில்வாவை நீக்க அரசு முயற்சிப்பதற்கு, அவர் பௌத்தர் அல்ல என்பதே, பிரதான காரணம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதாக 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது. ■

# "தோல்வியை நோக்கியே யானை ஓடிக்கொண்டிருக்கின்றது"

## □ லூசியன் கருணாநாயக்கா

"யானை இப்பொழுது தோல்வியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றது. மக்களுக்கு எப்படி இலஞ்சம் வழங்குவது? எப்படி வாக்குகளைப் பெறுவது? என்ற சிந்தனையிலேயே இப்பொழுது அரசு இருக்கின்றது. பொருட்களுக்கு விலைக்குறைப்பு மூலம் மக்களுக்கு இலஞ்சம் வழங்கும் யுக்தியை அது அறிந்து கொண்டுள்ளது". இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் லூசியன் கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில், "பாணின் விலை, மருத்துவக் கட்டணம், பஸ் கட்டணம், மருந்து விலை என நீண்ட பட்டியல் ஒன்றின் மூலம் வாழ்க்கைச் செலவை குறைக்க முயற்சிப்பதாக அரசு கூறுகின்றது.

ஆனால், இந்த விலைக்குறைப்புக்களால் நாடு சுமக்கப்போகும் சுமையைப் பற்றிய கவலை டி.பி. விஜேதுங்கா அரசிற்கு இல்லை. ஏனெனில், தேர்தலின் பின்னர் சுமக்கும் பொறுப்பு அக்கட்சிக்கு இல்லை என்பதையும், அக்கட்சி அறியும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டுமக்களை குழந்தைகள் எனவும், மூடர்கள் எனவும் கருதி, இனிப்பு வழங்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கின்றது" எனவும் தெரிவித்துள்ளார். ■

# விமானப்படை கோப்ரல் படுகாயம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உப்புவெளி, வெலிவேலிக்குளம் கிராமத்தில் விடுதலைப் புலிகள் சிறீலங்கா விமானப்படையினர் மேல் நடாத்திய தாக்குதலில், சிறீலங்கா விமானப்படையின் கோப்ரல் பிரசன்ன டி அல்விஸ் படுகாயமடைந்துள்ளதாகச் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர். ■

# "சிங்களவர் சுதந்திர முன்னணி" புதிய சிங்கள அமைப்பு உதயம்

"வடக்கு - கிழக்கில் இனவாதப் பிரச்சினையே இல்லை. நாட்டைப் பிரிக்கும் பிரச்சினை தான் அவர்களுக்கு உண்டு. அதனை யுத்தத்தின் மூலமே தீர்த்து வைக்க வேண்டும். இந்தியாவின் வற்புறுத்தலுடன் அமைக்கப்பட்ட வெள்ளை யானையான மாகாண சபைகளைக் கலைக்க வேண்டும். வடக்கு -கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு அப்பகுதியை தமது சொந்த பூமியாக்க அனுமதிக்கக் கூடாது. வடக்கு -கிழக்கை இரண்டாகப் பிரிக்க வேண்டும்"

என்ற கோட்பாடுகளுடன் பேராசிரியர் நளின் டி சில்வாவை செயலாளராகவும், கம்புறுப்பிட்டிய ஆரியசேன தேரோவை தலைவராகவும் கொண்ட 'சிங்கள சுதந்திர முன்னணி' (சிங்களயே நிதகஸ் பெரமுன) என்ற புதிய அரசியல் அமைப்பு ஒன்று களனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் பொதுத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் தாம் கவனம் செலுத்தப் போவதாகவும் பௌத்தத்தையும் பௌத்தர்களையும். பாதுகாப்பதே தமது நோக்கமெனவும் இவர்கள் கூறியுள்ளனர். ■

# தெளிவூட்டத் தெருவீதி முழக்கமிடுவோம்

# வாருங்கள் அணிநடைக்கு தமிழர்களே!

இலங்கைத் தீவின் வரலாற்றில் 1956, 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களை சிங்கள பௌத்த பேரினவாதிகள் பெருமளவில் நடாத்தியுள்ளனர். அதிலும் 1958 ஆம் ஆண்டுத் தாக்குதலும், அதன் வெள்ளிவிழாத் தாக்குதலான 1983 ஆம் ஆண்டுத் தாக்குதலும் இன அழிப்புக்கான பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தமொன்றின் ஆரம்பமாகவும், முடிவாகவும் காணப்படுகின்றது. இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் திட்டமிட்ட முறையில், சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் அரசாங்க கட்சிகளின் துணையுடனும் வழிகாட்டலுடனும் நடாத்தப்பட்டன. இதனால், இவை அரச பயங்கரவாதத்தின் முதலும், வளர்ச்சியும் உச்சகட்டமாக காணப்படுகின்றன.

இந்த வன்முறைத் தாக்குதல்களின் அடிப்படைக்காரணம், 'இலங்கைத்தீவு சிங்களவர்க்கு மட்டுமே சொந்தம்' எனும் வரலாற்றுத் திரிபுவாதமும், பிரித்தானிய குடியேற்றவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட, ஒற்றையாட்சி அமைப்பு முறை தோற்றுவித்த, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அரசியல் மேலாண்மையுமே ஆகும். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், இலங்கைத்தீவில் தமிழீழ மக்களின் இறைமையும், அரசும் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் தொடர்ந்து இருந்து வந்தது என்பதை அறிந்தும், உணர்ந்தும் இருந்த சிங்கள பௌத்த பேரினவாதிகள், வரலாற்று விபத்தினால், பிரித்தானியர் தங்களுக்கு அளித்திட்ட அரசியல் மேலாதிக்கத்தை பயன்படுத்தி, தமிழீமக்களையும் அவர்களின் இறைமையையும் அரசியல் ரீதியாக செயலிழக்க வைப்பதற்கென மேற்கொண்ட ஆயுதமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளே இக்கலவரங்கள்.

1958 ஆம் ஆண்டுக் கலவரம் இலங்கை ஒற்றையாட்சியை கடைப்பிடிக்கக்கூடிய நாடு அல்ல; பிளவுபட்ட தேசம் என்பதை உறுதி செய்தது. இதனை பி. ச். பாமர், அறுபதுகளில் எழுதிய 'பிளவுபட்ட தேசம்' (Divided nation) எனும் நூல் தெளிவுபடுத்துகின்றது. 1833 இல் பிரித்தானியர் கோல்புறுக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம், தமிழ் அரசுக்களினதும் சிங்கள அரசுக்களினதும் நாட்டு எல்லைகளை அழித்து, 'சிலோன்' என்னும் ஒற்றையாட்சியைக் கொண்ட நிர்வாக இயந்திரம் ஒன்றை உருவாக்கினர் என்பதும் வரலாறு. இதன் விளைவாக 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிங்கள பௌத்த பேரினவாதம், பௌத்த மறுமலர்ச்சி, சிங்களமொழி, கலாச்சார எழுச்சி எனும் காரணிகளூடாக பௌத்த மதத்தலைவர்களால் நிறுவனப்படுத்தப்பட்ட 'அமுக்கக் குழு'வாக (Pressure Group) மாற்றப்படுகின்றது. அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தல்; இந்துமத மறுமலர்ச்சி என்னும் நோக்குகளில் செயற்பட்ட தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கூர்மையை உணராதது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் தமிழ்மொழி, தமிழ்க் கலாச்சாரத்தின் எழுச்சியை ஏற்படுத்தாது, ஆங்கில மொழி, ஆங்கிலநாகரிகம் எனும் சக்தியுள்ளும் சிக்கிக்கொண்டது. ஆயினும் 1930 ஆம் ஆண்டில் சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதின் விளைவாக, இலங்கைத்தீவு 'சிங்களவர்களின் நாடு' என்ற நிலைதோற்றுவிக்கப்பட்டதும், தமிழ்மக்களில் ஒருசிலர் தமிழ்த் தேசியத்தின் தேவையை உணர்ந்தனர். இருந்தபோதிலும், 1930 முதல் 1948 வரை தமிழ்த் தேசிய உணர்வு வீறுகொண்டு எழாதவாறு, ஆங்கிலம் படித்த தமிழ் தலைமைத்துவம் தனதுமிதவாத தன்மையில் இறுக்கமாக இருந்தது. சிங்களவர் கைக்கு ஆட்சிபாரப்படுத்தப்பட்ட 1948 ஐ அடுத்து, மலையகத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதும் 'தமிழரசு' என்கின்ற உணர்வுடன் கூடிய தமிழ்த்தேசியம் 1952 இல் உருவாகியது. இதனை அடுத்து, சிங்களத் தேசியம் தன்னை சட்டநிலைப்படுத்தி, தனது அரசியல் மேலாண்மையை உறுதிப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டது. அதன் விளைவாகவே பண்டாரநாயக்காவின் 'சிங்களம் மட்டும் சட்டம்' பிறந்தது.

இதனை ஜனநாயக ரீதியாக எதிர்க்க முற்பட்ட, தமிழ் அரசியல் தலைமைத்துவத்துக்கு, 1956 இல் காலிமுகத்திடலில் வைத்து, அரச பயங்கரவாதம் பதில் கூறியது. அன்று கருக்கட்டிய அரச பயங்கரவாதம், சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு உற்சாக 'பானமாக்' மாறி, 1958 ஆம் ஆண்டு பரந்த அளவிலான இன அழிப்புக் கலவரத்தைத் தூண்டியது. ஆயுத ஒடுக்குமுறை மூலம் தமிழர்களை அடக்கியொடுக்கலாம் என்ற அரசியல் சித்தாந்தம், சிங்களக் கட்சிகளிடையே நிலை பெறத் தொடங்கியதும், தமிழர்களுடனான பேச்சவார்த்தை வழியிலான தீர்வுகள் அனைத்தும் அலட்சியம் செய்யப்பட்டன. 1960 ஆம் ஆண்டுகளில், தமிழ்ப் பகுதிகளில் சத்தியாக்கிரகம் மூலம் சிங்கள நிர்வாகத்திற்கு 3 மாதங்களாகத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பும், அரச பயங்கரவாதத்தால் படை பலம் கொண்டு அடக்கப்பட்டது. சிங்கள அரசாங்கங்கள் ஆயுதப்படைகளின் ஆளணிகளை பலமடங்காக அதிகரித்துக் கொண்டன. 1972 இல் தன்னிச்சையாக சிங்கள பௌத்தக் குடியரசாக தன்னை மாற்றிக்கொண்ட இலங்கை அரசாங்கம், நாட்டின் பெயரையும் 'சிறீலங்கா' என மாற்றிக்கொண்டது. அன்று முதல், அரசற்ற நாட்டினமாக்கப்பட்ட தமிழீழ மக்களை அஞ்சவைத்து, அடிபணியவைப்பதற்கு அரச பயங்கரவாதமே சிறீலங்கா அரசாங்கத்தின் கருவியாகியது. தமிழ் மக்கள் தங்களது தனியான தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தி, சிறீலங்காவின் அடக்குமுறை ஆட்சியை நிராகரிக்க எடுத்த முயற்சிகளுக்கு, 'தீவிரவாதம்' என பட்டம் சூட்டப்பட்டது. பொலிசார், இராணுவத்தின் கடமைகளைச் செய்தனர். இதன் விளைவாக, தங்கள் உயிர்வாழ்வுக்கு தமிழ் மக்கள் 'கெரில்லா' போர்முறையைத் தேர்ந்தெடுத்தனர். இதனைப் 'பயங்கரவாதம்' எனப் பெயர் சூட்டி, 1978 இல் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்' என்ற கொடிய சட்டத்தை, சிறீலங்கா அமுல் செய்தது. அதேவேளை, தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை, அரச பயங்கரவாதத்தின் ஊடாக, சிறீலங்கா மேற்கொண்டது. 1977 இல் கலவரம் தூண்டப்பட்டது. 1981 இல் யாழ். குடாநாட்டுக்குள் அரச பயங்கரவாதம், சிறீலங்கா அமைச்சர் காமினி திசநாயக்காவின் வழிகாட்டலில் கட்டவிழ்த்துவிடப்பட்டு கடைகள், வீடுகள், யாழ். பொதுநூலகம் என்பன எரியூட்டப்பட்டன. வகைதொகையற்ற முறையில், தமிழ் மக்கள் மீது, அரச பயங்கரவாதம் நாளாந்தம் கொடுங்கோலோச்சத் தொடங்கியது. அப்போது பாதுகாப்பற்ற, காலகட்டத்தில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும், நம்பிக்கைக்கும்



1983 ஜூலை இனக்கலவரத்தின்போது இராணுவ சோதனைச் சாவடியில் தமிழர்கள்

உரிய ஒரே விடுதலை இயக்கமாக வெளிப்பட்டனர். 1972 முதல் 'புதிய புலிகள் இயக்கம்'- என்ற பெயரில் இயங்கிய விடுதலைப் புலிகள், 1978 முதல் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற புதிய பெயருடன், தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்கான அமைப்பாகப் பரிணாமடைந்தனர்.

1983 யூலை 23 இல் திருநெல்வேலியிலுள்ள, யாழ் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில், தமிழ் குடிமக்களுக்குத் தீங்கு விளைவிக்கப் புறப்பட்ட சிறீலங்கா இராணுவ அணியொன்று, விடுதலைப் புலிகளால் சிதறடிக்கப்பட்டு, 13 இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். வேர்ணன் கீவர்ட் கூறுவது போல், "இதுவே தமிழீழ மக்களின் அரசியல் வரலாற்றில் திருப்புமுனையாயிற்று". தமிழீழ மண்ணில், தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்ய நடாத்தப்பட்ட இத் தாக்குதலைச் சாட்டாக வைத்து, சிங்கள பௌத்த பேரினவாத ஜே. ஆர். ஜெயவர்தனவாவின் தலைமையிலான அரசானது, தமிழீழத்துக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் மேல், அரச பயங்கரவாதத்தை சிங்களக் காடையர்களுக்கூடாகக் கட்டவிழ்த்துவிட்டது. இதுவே 1983 ஆம் ஆண்டு இன ஒழிப்புக் கலவரம் ஆகும். இக் கலவரத்தில் திட்டமிட்ட முறையிலேயே சிறீலங்கா அரசாங்கம், சிறீலங்கா பாதுகாப்பு படைகள் என்பன பௌத்த பேரினவாதக் காடையர்களை ஈடுபடுத்தியது. சிறீலங்கா அரசாங்கம் தான் கைதுசெய்து, காவலில் வைத்திருந்த 53 தமிழ் விசாரணைக் கைதிகளின் உயிர்களையும், வெலிக்கடைச் சிறையில் வைத்தே பலிகொண்டது. இவற்றின் மூலம் சிறீலங்கா அரசாங்கம், குடிமக்களுக்கான சர்வதேச சட்டவிதிகளை மீறி, தமிழர்களை ஆளும் உரிமை தனக்கு இல்லை என்பதை நிருபித்துக் கொண்டது.

ஆகவே, ஆக்கிரமிப்பாளராகத் தன்னை வெளிப்படுத்திய சிறீலங்கா அரசு, இனசுத்திகரிப்பு, தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, தனது பாதுகாப்புப் படைகளின் கடமைகளுள் ஒன்றாக அவற்றைச் சேர்த்துக்கொண்டது. அன்று முதல் இன்றுவரை, 50,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் மரணத்திற்கும், 5 இலட்சத்துக்கு மேற்பட்ட அகதிகளின் இடம்பெயர்வுக்கும், 3 இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளின் சர்வதேச வெளியேற்றத்திற்கும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகள் காரணமாகி நிற்கின்றன. 1983 இல் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கை, மிக விரைவாக வளர்ச்சியடைந்து, இன்று தமிழீழமெங்கும் தனது கோரப்பற்களை மிக ஆழமாகப் பதித்துள்ளது. குறிப்பாக 1990 யூனில் தொடங்கிய, 2 ஆம் கட்ட ஈழப்போரை வென்றெடுப்பதற்காக சிறீலங்கா அரசு, சர்வதேசயுத்த விதிகளையும் மீறி, கொடிய நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி, தமிழ் மக்களை ஈவிரக்கமற்ற முறையில் கொன்றொழித்துவருகின்றது. வான்வழித் தாக்குதல் மூலம் குண்டுகளையும், எறிகணைகளையும் ஏவி, மக்களைக் கோரமாகக் கொல்வதோடு, சொத்துக்களையும் அழித்துவருகின்றது. மறுபுறம் இலங்கைத்தீவு முழுவதும் ஒரேதேசமாகவும், தான் ஆட்சி செய்வதாகவும் போலியாகப் பேசிக்கொண்டு, வடக்கு -கிழக்கிற்கு மட்டும், பொருண்மியத் தடையையும் விதித்துள்ளது. பொருண்மியத் தடைமூலம், ஏற்படக்கூடிய, எம் மக்களின் பட்டினிச்சாவிலும், சிறீலங்கா அரசு இன அழிப்புச் சம்பந்தமான அரசியல் இலாபம் தேடமுனைந்தது. ஆனால், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற தலைமைத்துவத்தின், தீர்க்கதரிசனத்துடன்கூடிய பொருண்மிய மேம்பாடுகளினாலும், அதற்கு மக்கள் வழங்கிய ஒத்துழைப்பினாலும், சிறீலங்கா அரசின் பொருண்மியத்தடை படுதோல்வியைத் தழுவியுள்ளது. மாறாக, தமிழீழம் தன்காலில் நிற்கக்கூடிய சுயசார்பு உற்பத்தியை நோக்கி, தனியரசாக நிமிர்வதற்கும் வளர்வதற்கும் சிறீலங்காவின் பொருண்மியத்தடையும், ஆயுத அடக்குமுறையும் வழிசமைத்துள்ளன.

**இந்த உண்மைகளை சர்வதேச உலகுக்கு எடுத்துக் கூற, தமிழ் மக்களின் அரசியல் யதார்த்தத்தைப் படம் பிடித்துக் காட்ட, தமிழீழ மக்களின் அரசுநோக்கிய அரசின் இருக்கை நிலையை விளக்கி, அங்கீகாரத்தைக் கோர; இதன் வழியாக, தமிழீழ மண்ணில் அமைதி தோன்ற நடாத்தப்படுவதே, யூலை 23 ஊர்வலங்கள். எனவே இதில் பங்குபற்றி, சர்வதேச உலகம் எம் மக்களின் நிலையை இனம் காண உழைக்கவேண்டியது, எம் தலையாய கடமையாகும். 1983 இல், 50 இற்கு மேற்பட்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, பல சர்வதேசத் தலைவர்கள் இவ் இன ஒழிப்பைக் கண்டித்து, நீதியான விசாரணை நடத்தும்படி, சிறீலங்காவைக் கேட்டனர். ஐரோப்பிய பாராளுமன்றம், 'துன்புறும் இனமாக', இலங்கைத் தமிழர்களை அறிவித்து, அகதி நிலை வழங்கியதும் அல்லாமல்; அதிகாரப் பரவலாக்கம் செய்யும்படி, சிறீலங்காவை வற்புறுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையும் பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், சமாதானக் குழுக்கள் சிறீலங்காவை கண்டித்து, நீதி விசாரணை கேட்டனர். ஆனால், நடந்தது என்ன? முன்னையைவிட, பல மடங்காக இன ஒழிப்பைச் சிறீலங்கா அதிகரித்து, தொடர்ந்துவருகின்றது. இதனை சர்வதேச உலகுக்கு எடுத்துக்கூற நாம் தயங்கலாமா...? ஒரு சில மணித்துளிகளை, தாய்மண்ணுக்கு கடமை செய்யவென ஒதுக்கி, ஊர்வலத்தில் பங்குபற்றி, உண்மை நிலைமையை எடுத்துரைப்போம் திரண்டு வாருங்கள்!** ■



# தமிழீழ உட்

## தமிழீழத்திற்கான பிரதான நகரங்கள்

தயாரிப்பு: நகரங்களுக்கான செயற்குழு

செய்விப்போர்: உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,

திகதி: ஓகஸ்ட் 1993

**எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந்திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

### 1. ஆரம்பநிலை - குழுநிலை

1. 1 தமிழீழத்திற்கான உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராய்வதற்கென 1993 யூலை 15 ஆம் நாள், யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், இறைமையும் தன்னாட்சியுங்கொண்ட தமிழீழம் (இலங்கையின் வடக்கு -கிழக்குப் பிரதேசம்) தனக்கேற்றதான வகையில் எதிர்கால உட்கட்டுமான அமைப்பைத் தீர்மானிப்பது தொடர்பான பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

1. 2 உட்கட்டுமான அமைப்புத் தொடர்பாக ஆக்கபூர்வமாகவும், முழுமையாகவும் ஆராய்வதற்கு ஏற்றதாக எட்டுக் (8) குழுக்கள் அக்கூட்டத்தில் தெரியப்பட்டன. அக்குழுக்கள் வருமாறு:-

1. நகரங்கள்
2. தெருக்கள், இரும்புப் பாதைகள், விமான நிலையங்கள்
3. கடற்போக்குவரத்தும், துறைமுகங்களும்
4. மின்சாரம்
5. தொலைத்தொடர்பு
6. நீர்ப்பாசனமும், நீர்முகாமையும்
7. கைத்தொழில்
8. நீர்வழங்கலும், வடிகால் அமைப்பும்

1. 3 ஒவ்வொரு செயற்குழுவும் அதற்கெனச் சிறப்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயம் தொடர்பாக முதலில் விரிவாகஆராயவேண்டும் என்றும், அதன்பின் ஏனைய செயற்குழுக்களுடன் கலந்துரையாடி விடயங்களைத் தொடர்புபடுத்தி ஆராய வேண்டும் என்றும், அவற்றினடிப்படையிற் பெருந்திட்டம் (Master Plan) உருவாக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1. 4 பிரதான நகரங்களின் அமைவிடம் முதலில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்றும், அதனடிப்படையிலேயே ஏனையவிடயங்கள் பற்றிய ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் செயற்திறன் உடையமுறையில் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 2. நகரங்களுக்கான செயற்குழு

2. 1 தமிழீழத்தின் பிரதான நகரங்களைத் தெரிவு செய்வதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட செயற்குழுவுக்கு ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்:

1. கட்டிடக் கலைஞர் - 3 பேர்
2. குடிசார் பொறியிலாளர் - 1
3. விரிவுரையாளர் - 2 பேர்
4. நில அளவையாளர் - 1
5. பொறியியலாளர் - 1
6. இணைப்பாளர் - 1

2. 2 இக்குழு, நாடு - மாவட்டங்கள் - நகரங்கள் என்ற தொடர் நோக்கு அடிப்படையிற் சிந்திப்பது அவசியமாயிருந்தது. நாட்டின் எல்லைகள் தெரிந்தனவாக இருப்பதனால், மாவட்ட எல்லைகளை நிர்ணயித்தல் பற்றியே கவனம் செலுத்த வேண்டியதாயிருந்தது.

### 3. நிர்வாகப் பிரதேசங்களின் நிர்ணயம்

3. 1 நிர்வாகப் பிரதேசங்களாக அமையும் மாவட்டங்களின் பரப்பு, எல்லை தொடர்பாக ஆராய்ந்து அதனடிப்படையில் முன்மொழிவு செய்ய வேண்டும் என இச்செயற்குழு கருதியது.

தற்போதுள்ள மாவட்டங்கள் சிறீலங்கா அரசின் தேவைக்கேற்பவே உருவாக்கப்பட்டிருப்பதால், தமிழீழத்தின் வளர்ச்சிக்கும், எதிர்காலத் தேவைகளுக்கும், அபிவிருத்திக்கும் அவை போதுமானவையாக அமையமாட்டா என்றும், எமது அபிவிருத்தி இலக்குகளுக்கும், நிர்வாக முறைமைகளுக்கும் ஏற்ற வகையில் புதியனவாகவும், கூடிய எண்ணிக்கையிலும் (மாநிலங்கள்) நிர்வாகப் பிரதேசங்கள் தீர்மானிக்கப்படுதல் அவசியம் என்றும், இக்குழு கருதியது. நிர்வாகப் பிரதேசங்கள் 'மாநிலங்கள்' என்றழைப்படும்.

3. 2 மாநிலங்களின் பரப்பளவு, எல்லைகள் பற்றி நிர்ணயம் செய்வதற்குப் பல அடிப்படையான தகுதி விதிகள் கவனத்திற்கொள்ளப்பட்டன. அவை:

3. 2. 1 புதிதாக வகுக்கப்படும் மாநிலங்கள் அனைத்தும் சமமானதும், சீரானதுமான வளர்ச்சியைப் பெறக்கூடியதாகவும், அதற்கேற்ப அப்பிரதேசங்களிடையிலான வேறுபாடுகளுக்கு இடமளிக்காத வகையிலும், இயன்றளவு எல்லா வகையான வளங்களையும் (கடல், விவசாயம், கைத்தொழில்) எல்லாப் பிரதேசங்களும் பெறக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

3. 2. 2 மாநிலங்களை வகுக்கும்போதும், அவற்றின் எல்லைகளை நிர்ணயம் செய்யும்போதும் கூடியளவு புவியியல்சார் பௌதீக அம்சங்களுக்கு (ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், கடனீரேரிகள்) முன்னுரிமை கொடுத்தல் அவசியம்.

3. 2. 3 புதிய மாநிலங்களை வகுக்கும்போது, தமிழீழத்தின் எதிர்காலத் தேசியத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

3. 3 புதிய மாநிலங்களும், எல்லைகளும்: தமிழீழத்தின் புதிய மாநிலங்கள் பல முன்மொழியப்படுவதுடன், தேவைக்கேற்பத் தற்போதிருக்கும் மாவட்டப் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டும், ஒன்றிணைக்கப்பட்டும் உள்ளன. அவ்வாறான நிர்வாகப் பிரதேச எல்லைகள், பரப்பளவு நிர்ணயம் தொடர்பாகப் பின்வரும் அம்சங்கள் இக்குழுவினால் முன்மொழியப்படுகின்றன.

3. 3. 1 தமிழீழத்தில் மொத்தமாக இருபது (20) மாநிலங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்குமுரிய பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

3. 3. 2 மாநிலங்கள் (மாவட்டங்கள்) எனப்படும் இவ் ஆட்சிப் பிரதேசங்கள் தற்போதைய மாவட்டங்களைவிட, பரப்பளவிற் சிறியவை. எனினும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பார்க்க பெரியனவாகும்.

3. 3. 3 தமிழீழத் தேவைகள், இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாகவும், கிளிநொச்சி மாவட்டம் மூன்றாகவும், மன்னார் மாவட்டம் இரண்டாகவும், புத்தளம் மாவட்டம் மூன்றாகவும், திருகோணமலை மாவட்டம் மூன்றாகவும், மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாகவும், அம்பாறை மாவட்டம் இரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து 'மாங்குளம் மாநிலம்' எனப் புதிய பிரதேசம் உருவாக்கப்பட்டுள்ளது.

3. 3. 4 யாழ்ப்பாணக் குடாநாடு இயற்கையாகவே தொண்டைமானாறு -நாவற்குழி நீரேரியினால் வலிகாமம் பிரதேசத்திலிருந்து தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்கள் பிரிக்கப்படுகின்றன. இதனடிப்படையில், யாழ்ப்பாணக் குடாநாடு இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

3. 3. 4. 1 நல்லூர் மாநிலம்: இப்பகுதியில் தற்போதைய வலிகாமமும், தீவகமும் அடங்கும். இங்கு சனத்தொகை அதிகமாயிருப்பதோடு, வளமான செம்மண்ணும் உண்டு.

3. 3. 4. 2 வரணி மாநிலம்: இப்பகுதியில் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்கள் அடங்கும். இங்கு சனத்தொகை குறைவாகவே காணப்படுகின்றது.

தென்மராட்சியில் நெற்பயிர்ச்செய்கை இடம்பெறுவதோடு, பளைப் பிரதேசத்தில் தென்னைப் பெருந்தோட்ட அபிவிருத்தியும் காணப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியில் கடல்வள அபிவிருத்திக்குப் போதிய வாய்ப்புண்டு. வடமராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்குத் திட்டமிடல் அவசியம்.

வரணி நிர்வாகப் பிரதேசத்தில் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இங்கு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் அறிமுகப்படுத்தக்கூடியளவுக்கு நிலமும் ஏனைய வளங்களும் உள்ளன.

3. 3. 5 கராச்சி மாநிலம்: இது கிளிநொச்சி, பரந்தன், வட்டக்கச்சிப் பகுதிகளை உள்ளடக்கியது. இதன் வடக்கு எல்லையாக யாழ். குடா நீரேரி உள்ளது. விவசாயம் இப்பிரதேசத்தின் பிரதான வளமாகும்.

3. 3. 6 பூநகரி மாநிலம்: இதன் மேற்கு எல்லை மன்னார் வளைகுடாவாகும். பூநகரி பெருநிலப்பகுதி ஆதிக்குடியிருப்புகள் காணப்பட்ட பிரதேசமாகும். இங்கு நெற்செய்கையும் பிரதானமானதாகும்.

3. 3. 7 முல்லைத்தீவு மாநிலம்: இது முன்னைய முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பகுதியைக் கொண்டதாகும். இதில் மணலாற்றுப் பிரதேசமும் அடங்குகின்றது. இதன் கிழக்குக் கரையோரம் வங்காள விரிகுடாவாகும். கடல்வளம், விவசாயவளம் என்பன இப்பகுதியில் பிரதானமானவையாக உள்ளன.

3. 3. 8 மாங்குளம் மாநிலம்: இது தற்போதைய முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். வடமாகாணத்தின் பிரதான நிர்வாக மையம் (மாநகரம்) மாங்குளத்தில் அமையும். இதனைக் கருத்திற்கொண்டு இப்பிரதேசம் பரப்பளவிற் பெரிதாக அமையுமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக ஆராயுமிடத்து, மாங்குளத்தில் ஒரு மாநகரம் அமைப்பதற்கேற்றளவு 'நீர்வளம்' இல்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வளமான காடு அழிக்கப்படும் அபாயமும் ஏற்படுமென்றும், இதனால் வடமாநிலத்தின் தலைநகர் முறிகண்டியில் அல்லது கொக்காவிலில் அமைக்கப்படலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

3. 3. 9 தற்போதைய மன்னார் மாவட்டம் மாந்தை, மடு என்ற இரண்டு நிர்வாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

3. 3. 9. 1 மாந்தை மாநிலம்: இது மன்னார், தலைமன்னார், திருக்கேதீசுவரம், கட்டைக்கரைக்குளம் (Gaints Tank) என்பவற்றை உள்ளடக்கும். இங்கு நெற்செய்கையும், கடல்வளம் அபிவிருத்தியடைந்ததும் இலகுவாக இருக்கும். தரமான களிமண் வளமும் உண்டு.

3. 3. 9. 2 மடு மாநிலம்: இப்பகுதி பிரதானமாக காடுகளைப் பேணும் இடமாக அமையும். மடு தேவாலயம் இப்பகுதியில் இருப்பதால் இதற்கு முக்கியத்துவம் உண்டு.

3. 3. 10 வவுனியா மாநிலம்: இப்புதிய வவுனியாப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு, கால்நடை அபிவிருத்திக்கு முதன்மையளிக்க வேண்டும். இங்கு ஏற்கனவே ஓரளவு சனத்தொகை உண்டு.

3. 3. 11. 1 திருகோணமலை மாநிலம்: தமிழீழத்தின் தலைநகர் இப்பிரதேசத்தில் அமையும். தலைநகரத்தின் நிர்வாகப் பிரதேசமாக இதன் அயற்பகுதிகள் அபிவிருத்தி அடையும். சீனன் குடா, தம்பலகாமம் என்பன இதில் அடங்கும்.

3. 3. 11. 2 குச்சவெளி மாநிலம்: தற்போதைய வட திருகோணமலை மாவட்டம் இப்பகுதியிலடங்கும். இதன் வடக்கு எல்லை தற்போதைய முல்லை., திருகோணமலை மாவட்ட எல்லையாகும். தெற்கு எல்லை திருகோணமலை கரபத்தாவை நெடுஞ்சாலையும் நிலாவெளியும் ஆக அமையும்.

3. 3. 11. 3 மூதூர் மாநிலம்: இதன் எல்லை மகாவலிகங்கையாகவும் மற்றைய எல்லை தற்போதைய திருகோணமலை -மட்டக்களப்பு எல்லையாகவும் உள்ளது. இப்பிரதேசத்தில் விவசாயம், கடல் என்பன பிரதான வளமாக அமைகின்றன.

3. 3. 12 மட்டக்களப்பு மாநிலம்:

Network
July 1994
Published by the International Federation of Tamils

"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."
- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

Satchithanandan Sathananthan comments from Colombo on the dynamics of

# Broker Politics

**Most Tamil political parties in Colombo are busy cobbling together their respective electoral platforms in this election year .**

Some are engaged in "consultations" allegedly to evolve a common Tamil position... (The familiar) question is: Which of the major Sinhalese parties should the Tamil parties support? And on what terms must such support be extended?

The two major Sinhalese parties, the United National Party (UNP) and the Sri Lanka Freedom Party (SLFP), are wooing Tamil and Muslim parties. Early indications are that the Ceylon Workers Congress (CWC) will support the UNP. The recent insensitive remarks made by the President about the Tamil problem (Tamils and Muslims are "vines" upon the Sinhalese "tree", etc.) have estranged most Tamils parties from his ruling UNP. The Tamil United Liberation Front (TULF), Eelam Peoples Revolutionary Liberation Front (EPRLF) and the Peoples Liberation Organisation of Tamil Eelam (PLOTE) now seem to favour the SLFP. The All Ceylon Tamil Congress (ACTC) will support neither the UNP nor the SLFP. The position of other Tamil parties is unclear.

The Virakesari (29 May 1994) reported that two prominent Sinhalese intellectuals are engaged in brokering an alliance between the SLFP and the TULF and EPRLF. ...(It is reported that) the TULF and EPRLF believe that Mrs Chandrika Kumaratunga "will stand firm" in resolving the Tamil problem and - that she is "unlike any other Sinhalese leader in the past or present". A member of the TULF flatly asserted that she is "the best bet for Tamils" (Island, 29 May 1994). **Informal soundings revealed that some in the TULF are virtually gushing over an alleged "understanding" reached between the TULF and Mrs Kumaratunga.**

What is the basis of (this) optimism? In her interview published in the Virakesari (1 May 1994) Mrs Kumaratunga offered nothing new. She merely repeated the following platitudes:

1. A political solution to the Tamil problem could be achieved based on a form of decentralisation of authority which includes an institutional mechanism for centre-region interaction. **Translated into simple language, she prefers to reduce the political autonomy of regional administration in Tamil areas and increase the powers of the centre in order to minimise centre-region friction.**

2. Such a political solution must apply equally to all parts of the country. **In other words, she intends to ignore the national question in the tradition of Sinhalese politics.**

3. The intransigence of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) is the only obstacle to a negotiated peace. **That is, under her leadership a future SLFP Government will pursue a military solution against Tamils in the North-East Province (NEP). Moreover, she has implicitly set up the LTTE as a convenient scapegoat for her future inability or unwillingness to achieve a political solution to the Tamil problem.**

4. Tamils in the NEP are virtually exhausted and wish an end to conflict. **In other words, she draws comfort from the mistaken belief that counter-insurgency techniques of collective punishment, have weakened the resolve of Tamils.**

These banal observations are being widely quoted by many Tamil parties in Colombo as indicative of a new vision of ethnic reconciliation emerging within the SLFP; and as justification for Tamil support for the SLFP.

She spoke mysteriously of a proposal that is being evolved within the SLFP to solve the Tamil problem. This proposal is to be incorporated in the SLFP election manifesto. She failed to say that SLFP party policy will be changed to reflect the so called new proposals. So the SLFP will not be bound by them... If the assertions of Mrs Kumaratunga are to be taken seriously by Tamils she must firstly begin a nation-wide campaign of perception building among Sinhalese to make a federal system of government acceptable to them. Secondly she must lobby within the SLFP to incorporate the funda-

## "a cynical betrayal of the Tamil national struggle "

*continued on page 2*

Sun Tzu on Illusion & the Tactical Paradox

## "When able appear unable"

More than twenty three centuries have passed since Sun Tzu wrote the Art of Strategy, one of the world's earliest military treatises. **He wrote: "A true victory can be won only with a strategy of tactical positioning, so that the moment of triumph is effortless..."** The strategy follows a direct path that escalates until victory is assured. From analysis and projection, through planning and positioning, and on to confrontation Sun Tzu explains such techniques as the use of camouflage, **the creation of illusion** and the gathering of intelligence. **Tactical paradox is the ability to project to the opponent a contradictory view of one's position or plan.** Sun Tzu believed that this was fundamental to a clever strategy.

**"Thus when able, they appear unable.**
When employed they appear useless.
When close, they appear distant.
When distant, they appear close.
**They lure through advantages,**
**And take control through confusion.**
When angry, they appear to submit.
When proud, they appear to be humble.
When comfortable, they appear to toil.
**When attached they appear separated.**
**They attack when the opponent is unprepared.**
And appear where least expected.
This is the Strategist's way of triumph.
**It must not be discussed beforehand.**

Superior leaders spend their time and effort beforehand, calculating, estimating, analysing and positioning. Sun Tzu pointed out: "Skilful strategists put themselves beyond attack by becoming invisible, seamless, without error. At the same time they gather intelligence and analyse it in light of their objectives. **They move in the same direction as the larger trends in their world, so that they can harness the timeliness of that momentum. Then they wait for their opponent to move, for well positioned Strategists are led to triumph through the actions of their opponents."**

# That Resolution of the European Parliament!

**Christine Oddy, MEP, Midlands Central, U.K. commenting on the recent resolution of the European Parliament on the Sri Lanka situation said:** 'Subsequent to my visit to Sri Lanka and writing my report, the Committee on Foreign Affairs and Security presented a report on Sri Lanka written by Mr.Jas Gawronski pursuant to resolution by Mrs.Pollack, Mr.Saby and Mr.Stevenson. **It is unfortunate that the report was rushed the Parliamentary procedure and was originally tabled for vote without a debate.** It was only by the pressure of twenty three signatures of MEPs (including my own) at the last minute that enabled a debate to be held **on a Friday morning when most MEPs had already left Strasbourg for their constituencies.** It is also unfortunate that the Committee on Foreign Affairs and Security did not refer the report to the South Asia Delegation for an opinion. **The report is somewhat flawed because it lacks a balanced approach.** A more thorough examination could have removed the lack of balance from the report and inserted a more critical analysis of the Government's record.'

In her report made after a visit to Sri Lanka in November 1993, Ms.Christine Oddy declared: "At the time of the visit, Sri Lanka was still not a signatory to the UN Convention on Torture. Although Sri Lanka has subsequently signed the Convention, it is important to ensure that the Convention is properly observed and in particular training is given on a systematic basis to the police force on the moral imperative against torture. During the visit, the practice of torture was widely acknowledged. Further, there are no minimum conditions for the prisoners in detention and people spoke of 'standing room only' in some police cells... It can only be assumed that the quality of hygiene in the detention camps is appallingly low and there urgently needs some form of established binding minimum standards for the welfare of detainees. It is unfortunate that during the visit the Parliamentary Committee had failed to produce any workable proposals for an end to the civil war and that the new President was treating the conflict solely as a terrorist problem with no ethnic problem. This gives little hope for a negotiated unless some major is made to find a peacable solution." **Amongst the recommendations that Christine Oddy made was that 'Tamils in Colombo should not be victimise and subjected to multi arrests** and detentions.'

# Broker Politics

*continued from page 1*

mental concepts and principles of the new proposals into the official' party policy. She has done neither although similar inclusion was effected for example with respect to economic issues. Until she engages in concrete actions along these lines any positive comment on the 'Tamil problem' must be taken merely as political posturing in an election year which carries no meaning beyond the day on which elections are held.

Then why has Mrs. Kumaratunga become the new political messiah of most Tamil parties in Colombo? Are these parties naively placing faith in election promises? It is instructive to examine the roles played by TULF and EPRLF which are representative of this trend.

**The approach of TULF and EPRLF is only superficially naive.** It is in fact a time worn strategy which the TULF and later EPRLF inherited from the Federal Party (FP). In the mid-1 950s the FP politicians presented themselves as political brokers to the Tamil people in the then Northern and Eastern Provinces...

But FP's broker politics lacked conviction. Because if the other, Sinhalese side refused to listen, then what is the use of a broker? In fact many Tamils had criticised FP's broker politics as a farce because neither the UNP nor the SLFP was in any mood to accommodate Tamil demands. Indeed the policies of the two parties catered to Sinhalese nationalism. **They are simply Sinhalese parties which dismiss negotiations as "appeasement", which catalysed the emergence and growth of armed Tamil militant struggle. In fact there was no UNP or SLFP leader who was ready to change party policy to consider Tamil demands.**

So to make their broker politics credible in the eyes of Tamils, FP conjured up a fictitious receptiveness to negotiations in selected personalities. In each case the FP described the Sinhalese leader as "different", that he or she was willing and able to negotiate with the FP.

The first aspect of FP's strategy was **the absence of mass political mobilisation** of Tamils (except for token gestures like satyagraha, protest fasts, etc) in the Northern and Eastern Provinces, FP avoided mass mobilisation because it inevitably would release new political forces and throw up new leaders in those provinces who in time would challenge the leadership of FP. This was especially dangerous for FP because its politicians came essentially from Tamils in Colombo. The second aspect is **the emphasis on individual Sinhalese leaders**, instead of their respective governments or even parties. The FP alleged that Sinhalese leaders as individuals were somehow above party politics. It claimed that their "solemn assurances" given verbally to solve the Tamil problem were reliable. This implied the third aspect: such Sinhalese leaders would in due course **elevate "talks" to the level of official negotiations** between the Government and the FP. Options, if any, open to the FP if Sinhalese leaders refused to do so was left unsaid.

In each instance, Sinhalese leaders went through the motions of holding "talks" in their individual capacity. This was convenient for all concerned. The FP could defend broker politics as a viable strategy. Sinhalese leaders could engage in personal aggrandisement as peace makers and also legitimately woo Tamil voters outside the Northern and the Eastern Provinces. At the same time the policy of the UNP and the SLFP on the Tamil problem was left undisturbed and none of the Sinhalese leaders formalised the "talks" by commencing official negotiations; both of which satisfied the all important party rank and file.

The Tamils who voted for the FP in the Northern and Eastern Provinces and for the UNP or SLFP outside these areas were the only losers. And the 'Tamil problem' remained unresolved.

**When each Sinhalese leader routinely failed to deliver on so called "assurances", FP politicians routinely shed copious tears and protested that one or the other Sinhalese leader had violated their "trust"**..In every instance the Tamil parties were politically too weak even to induce official negotiations at Government level, let alone grapple with the larger task of securing the rights of Tamils.

Tamil parties failed because broker politics was flawed in a fundamental sense. By avoiding mass mobilisation Tamil parties forfeited political power. Contrary to Liberal mythology, in the real world questions of political power are decided on the street. Tamil parties did not draw Tamil people out on the streets and therefore lacked street power, which is the foundation of real political power.... **it is a fact that Mr.S.Thondaman and Mr.V.Pirabakaran are the only Tamil leaders who enjoy political power because both have street power. In contrast by avoiding mass mobilisation Tamil politicians sacrificed political power which alone would ensure that they negotiated from a position of strength. Power conceds nothing without a demand and those who lack political power cannot demand; they can only appeal. Not surprisingly, the FP then and the TULF and EPRLF now have proved incapable of forcing negotiations at government level.**

> **"It is simply nonsense to allege that (these Tamil political partiesin Colombo) can even induce the present or future Government to begin official negotiations. They merely serve as window dressing for the insincere exercise of "exploring political solutions" conducted by the Government for the twin purposes of legitimizing the military campaign in the NEP and hoodwinking the international community that it is seeking a political solution to the 'Tamil problem.'"**

**Political impotence has reduced Tamil parties to merely appealing to Sinhalese leaders.Naturally neither the UNP nor the SLFP has taken the grovelling Tamil politicians seriously.**

Today the TULF and EPRLF would like Tamils to believe that their organizations have reached an "understanding" with Mrs Kumaratunga. She is being projected as "new and improved". "New" because she is the new generation. "Improved" because SLFP acquired a liberal sheen after a few Sinhalese intellectuals began working with the party recently. All of which made a Tamil academic in Colombo speak breathlessly of a "new dispensation under future SLFP rule.

But the TULF and EPRLF are merely resurrecting broker politics through the so-called "understanding"... This is a desperate attempt to keep afloat sinking political fortunes; to manufacture a political role for themselves as brokers where no scope for such role exists because the so-called "understanding" is with Mrs Kumaratunga in her individual capacity. Like other Sinhalese leaders before her she also has not attempted to change the policies of her party. Any assertion by Tamil parties that she could impose a change within the first nine months of an SLFP election victory by voluntarily initiating (presumably through sheer altruism) official negotiations at Govemmental with Tamil parties is self-serving political mythology.

Mrs. Kumaratunga has begun playing peace maker. She is actively wooing Tamils **without** compromising the SLFP. But after the elections SLFP policies on the 'Tamil problem' will remain the same and the 'Tamil problem' will continue to fester. The Sinhalese intellectuals who work with her party will have to either withdraw their support or become apologists for its anti -Tamil policies. When the "understanding" is forgotten by the SLFP, the TULF and EPRLF will ritually beat their breasts, cry "foul" and protest that their trust was betrayed. But before the bankruptcy of broker politics is revealed again, the two parties hope to have persuaded sufficient number of Tamils to vote for them.

The deep intransigence of Sinhalese leaders, who have repeatedly refused to initiate official negotiations between their respective Governments and Tamil parties, was dramatically exposed by the growing militant struggle in the NEP in the 1980s. It also underlined the irrelevance of Tamil broker politics.

More importantly, Tamils are unlikely to forget the controversial actions of EPRLF and its associated parties under the protective umbrella of the military administration of the Indian Peace Keeping Force IPKF in the NEP. Indeed the fact that most EPRLF members fled to India with he returning IPKF in 1990 is a damning indictment of their role. The credibility of these parties and their broker politics is so abysmally low that votes had to be gathered for them in the 1989 Parliamentary elections held under IPKF administration

The broker politics of most Tamil parties in Colombo and particularly of the TULF and EPRLF are clearly bankrupt. The present as well as a future Government will avoid negotiations with the LTTE and continue to seek a military solution in the NEP. But these Tamil parties, having abandoned militant struggle, lack political power to force the Government to commence official negotiations with them. They have little choice but to "talk about possible talks" in Colombo in order to justify their existence and ensure their livelihood.

In the process they have in effect provided ammunition for anti-Tamil propaganda by Sinhalese dominated Governments. Successive Governments have exploited the eagerness of Tamil parties to conjure up illusions of 'negotiations" in order to claim falsely that a majority of Tamils disagree with the ongoing Tamil national struggle in the NEP. Their aim is to marginalise the LTTE as a minority of "terrorists" and to discredit Tamil resistance as "violence". Tamil parties in Colombo surely cannot claim ignorance of Government strategy, of the damage they continue to inflict the Tamil national struggle through their opportunistic search for political survival through the chimera of 'talks'.

.... Genuine negotiations at the official institutional level directly between the Government and the Tamil parties and organisations took place only once during the entire post independence period of 46 years, at the abortive 1985 Thimpu talks. Even that was flawed: it took place under diplomatic pressure from India.. Tamil parties in Colombo must accept primary responsibility for helping to mask Sinhalese intransigence by foisting the political deception of 'talks' at the expense of a generation of Tamils. They owe the Tamils an explanation.

**The persistence with which Tamil politicians repeatedly "trusted" Sinhalese leaders is not an accident. It is an intrinsic , component of broker politics which served Tamil politicians to pretend injured innocence. But it also revealed ignorance of an elementary principle of politics: that politics is decided not by trust but by interests.**

The tragic history of broker politics demonstrates the political impotence of Tamil parties. It shows conclusively that they lack the power to force the Government to negotiate. Today these parties are at their weakest politically. They are no longer a credible political force. **Therefore, it is simply nonsense to allege that they can even induce the present or future Government to begin official negotiations.** They merely serve as window dressing for the insincere exercise of "exploring political solutions" conducted by the Government for the twin purposes of legitimizing the military campaign in the NEP and hoodwinking the international community that it is seeking a political solution to the 'Tamil problem.'

**All of the above amounts to a cynical betrayal of the Tamil national struggle by most Tamil parties in Colornbo. It is a betrayal for which no explanation is sufficient.** *(Courtesy Lanka Guardian, June 15 1994)*

---

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi-polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

# Viduthalai Puligal on Mr.Dixit's Pronouncements

**It is now four years since the Indian Forces quit the soil of Tamil Eelam; the last Indian seapoy embarked from Trincomalee on 24 March 1990.**

Following the accord between the Indian and Sinhala governments on 29 July 1987, the Indian Forces made their entry into Tamil Eelam without the permission of the people of Tamil Eelam. It is now a matter of record that the Government of India broke off political and diplomatic relations with the Liberation Tigers of Tamil Eelam after hostilities broke out between its forces and the Tigers (in October 1987).

Everybody knows that the chief architect of the Indo Sri Lanka Accord, which was the root cause leading to this rupture was Mr.Dixit.

**Mr.Dixit's gun boat diplomacy, his myopic, emotionally tinged political outlook and his obsession with India's interests eventually led to the outbreak of war. More than 8,000 citizens of Tamil Eelam were killed as a consequence of this war. Tamil Eelam has suffered irretrievable losses of rare invaluables. The Indian government apart from losing more than a thousand of its troops, had to pull back its forces with its reputation tarnished.** The chief cause of the debacle that India suffered on Tamil Eelam soil was its failure to take cognizance of the political realities of Tamil Eelam and its slighting of the Liberation Tigers. The person who was mainly responsible for India committing these egregious blunders was none other than Mr.Dixit. Almost seven years later this very same gentleman seems to have seen the light and begun to understand something of the political realities of Tamil Eelam.

## If Mr.Dixit's change of views about the Eelam Tamils' struggle for self determination is reflected in Indian diplomatic circles, then it can help to repair the impaired links between India and the Tigers

A recent article by Mr.Dixit in the 'Hindu' gives us a glimpse of Mr.Dixit's new outlook. In this article Mr.Dixit accepts that the Liberation Tigers are the pivotal force in the politics of Tamil Eelam and that Mr.Pirabakaran is the people's Leader. **Though Mr.Dixit is no longer in the Indian Foreign Service, and hence his views cannot be considered to be the official standpoint of the Indian government, they certainly need to be carefully studied. Especially as Mr.Dixit's views appeared in the Hindu which also played a key role in the formulation of the Indo Sri Lanka Accord.**

If Mr.Dixit's change of views about the Eelam Tamils' struggle for self determination is reflected in Indian diplomatic circles, then it can help to repair the impaired links between India and the Tigers.

However, Mr.Dixit's changed views remain somewhat circumscribed; he specifies that the political problem faced by Eelam Tamils should be solved within the framework of a unitary Sri Lanka as that would best suit India's interests.

India's policy makers fear that the Eelam Tamils' struggle for self determination and its ultimate victory will pose a grave danger to India's interests and its unity. It is this long standing fear that has led to India adopting this political stance. When Bangladesh attempted to secede from Pakistan this same bogey was raised by some Indian nationalists. They argued that the secession of Bangladesh would unleash separatist forces in West Bengal. What happened ultimately? *(Courtesy: Viduthalai Puligal, Tamil Eelam)*

# News Watch by Guerilla

### 'Fishy' business

The Colombo based Virakesari reported in May that the Police Force has intensified their security patrol in the Amparai District follwing the recent withdrawal of the Special Task Force for redeployment in the North. On 25 April, the Sri Lanka Police halted a bus proceeding from Kalaru to Kalmunai. At Thalavettuvan junction they asked a woman carrying a basket of fish to get out. They then ordered her to cut open the stomachs of over 50 fish which she was hoping to sell in Kalmunai. They suspected that there were bombs inside the guts of the fish!

### Sinhala attack on Muslim fishermen

Following an assault on one Sinhalese fisherman on 10 may in Puttalam, Sinhala fishermen in the area went on a rampage, setting fire and destroying 45 fishing boats, over 100 outboard motors, several fishing nets and 28 fishermen huts - all belonging to Muslim fishermen

### G.A. tours LTTE controlled areas

In the last week of April, the Government Agent of Vavuniya toured the areas under the control of the LTTE in this District. His circuit around Omanthai, Nedunkerni, Puliyankulam, Mankulam, Kanakarayan Kulam and Killinochchi was to study the situation of the people there. He also held discussions with LTTE representatives in these areas.

### Quisling EPDP squeals

S.Dhushyanthan, the political organiser of the quisling Tamil group EPDP in Trincomalee, has written to President D.B.Wijetunga complaining about the appointment of personnel as Grama Sevakayas in Trincomalee. His grouse was that though a Mr.Rajaratnam obtained 155 marks in the March examination for the selection of Grama-sevakayas, many who got lower marks have been appointed, but not Mr.Rajaratnam. It is not known whether Sinhala President D.B.Wijetunga bothered to reply.

### Kopay bombed

The Colombo based Tamil daily reported on 29 May 1994 that he Sri Lankan Air Force bombed Kopay North on the morning of 22 May, killing three civilians and destroying seven houses

### Attack on Iyakachchi

According to a report from the Sri Lanka Security Forces, a column of Sri Lankan soldiers at Iyakachchi were attacked by the Liberation Tigers on 28 May. Two soldiers were killed and six received injuries. Two of the injured are said to be in a critical condition.

### Medicine in short supply

The Colombo based Tamil daily reported on 22 May 1994 that all the hospitals in the Jaffna Peninsula, including the Jaffna University Teaching Hospital are affected badly by a severe shortage of medicines, specially anti tetanus vaccines for injections.

### Bombing of Omanthai

The village of Panriku Thaya Kulam in Omanthai was bombed on 3 May 1994. Four bombs were dropped which damaged a large house near the roadside

### Extra Mural Unit in Jaffna

An Institute of Extra Mural Studies was established in the University of Jaffna in October 1992 on lines similar to what obtains in the Extra Mural Studies Units of Birbeck College, London and the University of Singapore. No formal qualifications were required for entry to courses. In order to provide opportunities for every one who wished to attend, the courses were conducted in the evenings, at week ends and during holidays. In 1993, over 3500 attended the various courses which included horticulture, photography, village welfare, and farming. Several additional courses such as music appreciation, practical mechanical engineering, animal husbandry, poultry keeping, basic English, dress making and physical fitness were added to the curriculum in 1994.

### Food vessels carry Sinhala troops

It is reported that ships, supposed to transport food supplies to Kankesanturai, are bringing in troops to increase the existing numbers already in Palaly.

### Yet another Committee!

The SLFP has appointed a committee headed by Professor G.L.–Pieris to study and submit proposals for finding a political solution to the conflict in the North-East. These proposals are expected to be published during the forthcoming elections. One of the proposals which is under consideration is to annex the Amparai District to the Uva Province and link the rest of the North-East as one unit.

### Srimavo set to contest Presidency

At the General Council Meeting of the SLFP on 23 May 1994, Mrs. Srimavo Bandaranaike was reelected as leader of the SLFP and will contest as the SLFP nominee at the forthcoming Presidential elections. Mrs.Chandrika Bandaranaike Kumaranatunga was elected Deputy Leader of the Party and becomes the heir apparent.

### DUNF to support Srimavo

The Sirimani Athulathmudali faction of DUNF has agreed to support Mrs.Srimavo Bandaranaike, the Peoples Alliance candidate at the Presidential elections. It is reported this follows a discussion between the Chief Minister of Western Province, Ms.Chandrika Bandaranaike Kumaranatunga and Mrs. Sirimani Athulathmudali

### Appoint Commission into father's death says daughter

Mrs. Dulanjali Jayakody, the late President Premadasa's daughter, has called on President D.B.–Wijetunga to appoint without further delay an 'independent' Commission, including foreign experts to inquire into her father's death. She expressed regret that though an year had passed since her father's death, President D.B.Wijetunga had made no move to appoint such an independent Commission.

### New Red Cross Chief

Ms. Mary Perkins has been appointed ICRC Chief for the Jaffna District with effect from 2 June 1994. Since 1980, she has served earlier as ICRC Chief in Kenya, Cambodia, Afghanistan and the former USSR.

### US gift to Jaffna University stolen - and Found

Books on Science and Medicine worth several lakhs of rupees presented by the U.S.A. to the Jaffna University were stolen by some postal workers at the General Post Office, Colombo. The cuplrits were later apprehended, the books recovered and handed over to the Deputy Registrar of Jaffna University.

### Hameed calls for settlement - again!

Mr.A.C.S.Hameed, a Senior Minister in the Sri Lanka Government has said that the problems of the North East should be divorced from the forthcoming elections. He added that an all out effort must be made to resolve the festering conflict in the North East before conducting the Presidential and parliamentary elections. Informed observers see this as a Government ploy to get the sympathy of Tamils and Muslims and their votes at the forthcoming elections.

### Change of Ship Route

It is reported that the ship 'Nagroma' which used to ply between Trincomalee and KKS will in future sail directly to Point Pedro from Trincomalee. This change of route will help reduce the inconvenience that people encountered when the ship docked at KKS.

### Sri Lanka Army slaughters again

In two separate incidents, the Sinhala Sri Lanka Army shot and killed four innconent Tamil civilains in the Batticaloa District. On 29 April, the Army ambushed and killed two middle aged men who were on their way to fish in the Waharai river. Arumugam (45), the father of five children and Alagiah (47), the father of seven children were the victims. On the nextday the STF encamped at Kokkadicholai had put to death two young men, Thirumal (21) of Pannamakadu, Akaraipattu and Thayanthamoorthy (22) of Amparai.

## Inside Report from South East Tamil Eelam

# A Sinhala run Concentration Camp

**The people of South East Tamil Eelam (constituting Trinco, Batticaloa and Amparai Districts) are becoming inured to the tragedies that are being enacted there every day.**

The enemy has thrust his rifle into every aspect of the people's life; their festive days, their occupations, their education, their cultural activities. In fact the enemy has bound hand and foot the people's daily life.

"Without our permission even God should not stir a little finger" seems to be the enemy's attitude. From cooking the daily meals to spraying fertiliser in the chena, everything has to be done only after prior permission has been obtained. This is the law in South Tamil Eelam; anyone who violates it is liable to be summarily shot.

When dawn breaks uneasily, people open the doors of their houses as noiselessly as possible; when they peep through the cracks, they can see green uniformed men lined along the fences. Though they know it is a round up of the entire village, they dare not step out of doors until they are ordered to do so. That whole day, the next day, the day after; sometimes that whole week, perhaps, the whole village will be subjected to a drag net search.

After a thorough search of the huts, some of them might be torched, depending on the mood of the searchers, the village will be ordered to assemble at a school or a temple and they will be checked against a list the searchers have brought with them. If there is one person in excess of the number in the householder's list, both that person and the householder are taken into custody. Very often, that is the last anyone sees of them. During the period of the round up the whole village is entirely paralysed. Schools, shops and fields are deserted. There isn't a stir of life anywhere. You can just imagine what the situation will be like as such round ups occur twice or thrice a month or sometimes even once a week.

There are various kinds of roundups. The common or garden round up is one variety. There is another variety called the 'search' which is really terrible. It would be more appropriate to call it 'search and destroy'. After the search is over, the searchers leave behind a looted, plundered and charred village. There may be five or ten or even more corpses lying on the roads; fifty or a hundred people would have disappeared. The rest of the village would have been chased away clad only in the clothes they were wearing.

A household should possess food provisions sufficient for only one day. That is the law in South Tamil Eelam. Moreover they have ordered that there should be no grocery stores, not even a small one in the villages. Daily the villagers have to go all the way to the town to buy foodstuffs just sufficient for that days's needs. Suddenly the Sinhala army personnel will burst into the huts, either in the daytime or in the night. If there is an excess of food, the question flung at the householder will be: "Is this food meant for the Tigers"? - and anything can happen to the householder. If there is any food after they have had their meals, that too could prove very awkward; if the army personnel spot this, the whole household may be taken away.

There are army barricades on every street, check points at every junction. Every mile there are army camps. Infuriatingly silly questions are asked of everyone. The objects the people carry may be something very ordinary - a frock, a toy, or a pot. They are asked 'why', 'for whom' and 'isn't this for the Tigers?'

People travelling in vehicles have to get down 300 yards in front of the security check points, walk up to the point and after the checking is over, they have to walk back 300 yards and get into their vehicles. A trader from Kalmunai angered complained: 'Earlier it took only 1 1/2 hours for the run from Batticaloa. Now it takes 4 to 5 hours. If one has to journey 15 miles, one has to trudge 5 miles in front of these camps.'

Every morning a person has to go to a specified camp and register his or her existence. One can travel outside the village only with the prior permission of the army. People who seek such permission are grilled about where they are going, why and when they expect to return. Ofcourse travel to the North is out of the question. They are allergic to the very word 'North'.

When the paddy starts sprouting it is the army and not the seasons which determines when fertiliser should be used. Similarly the paddy can be harvested only if it suits the caprices of the army. After the paddy has been harvested, threshed and stacked in bags, the Army sends Sinhala and Muslim goondas to carry them away, without so much as a by-your-leave.

In south Tamil Eelam, it is the buyer, a Muslim or Sinhalese from an adjoining village who fixes the price of the goods he is buying from the seller, a Tamil. If the Tamil seller attempts to haggle, he will be later taken into custody on some pretext or other and simply 'disappear'. So if you want to stay alive, you have no option but to accept whatever amount is given to you and count it as a big favour that they are doing for you.

According to a displaced teacher the day dawns auspiciously with the sight of gruesomely mutilated corpses. The number of murders is too numerous for the memory to contain. For every breath you draw you will have to give an explanation to the army. To add insult to injury the Tamil traitor groups use this opportunity to settle private grievances and pay off old scores.

**A retired Government servant from Mankerni said: "The Sinhalese are demonstrating to us beyond doubt that we Tamils cannot live with them. When one goes from here to Jaffna, one feels that one has broken out of prison".**

## "The enemy has thrust his rifle into every aspect of the people's life; their festive days, their occupations, their education, and their cultural activities"

# Sri Lanka woos Tamil Expatriates!

**There is something strange happening (fishy is the right word) all over the world.** Tamil expatriates living in Western countries are receiving calls from Sri Lankan ambassadors. The caller would say, "the Ambassador would like to have dinner with you. Would next Monday evening be alright.?" We wonder why? These same embassies used to call us traitors for innocuous activities such as having a meeting to discuss the plight of Tamils in Sri Lanka or writing to newspapers about what their government was doing to the Tamils etc. They also used to exclude us from embassy functions and events. Now, we can have a private dinner with the Ambassador! *(Courtesy: US based Ilankai Thamil Sangam publication Tamil Voice edited by Rajan Sriskandarajah)*

# ... moves from Special Task Force to Special Attack Force at home

In the 1980s the Sri Lanka government in its attempt to quell Tamil resistance, particularly in the SouthEast of Tamil Eelam, set up the infamous **Special Task Force** which was at one time headed by the then President J.R.–Jayawardene's son. Now, in the 1990s faced with the continuing attacks by the LTTE on Sri Lankan Army camps in Tamil Eelam, and the severe losses suffered by the Sri Lanka Army at Pooneryn and elsewhere, President D.B.Wijetunga has set up a **'Special Attack Force'.** The stated objective is to dampen the actions of the LTTE in the NorthEast of the island. No less than three Brigadiers - A.K.Jayawardene, A.S.Pieris and Nalin Augamana - will be in charge of the Special Attack Force Units in Jaffna, Vavuniya and Manal Aru/Trincomalee. Besides these three units, a Reserve Attack Force Unit has been set up under the command of Brigadier Lal Weerasuriya. The Sri Lanka Army has also created a new post - Assistant Chief of Staff and Major General Thaluwatte has been appointed to this post.

# ...& abandons Trinco Free Trade

The Sri Lanka Government has been compelled to abandon its plan too create a Free Trade Zone in the Trincomalee area. Earlier, 600 acres of land in the Trincomalee District, which belonged to Tamils had been ear marked for a Free Trade Zone. But the unrest caused by the conflict in NorthEast has resulted in foreign investors showing little interest in the proposed Free Trade Zone.

## Food for Political Thought

### Self - Determination is not a dirty word

**Nic Macelellan from Northcote writing in the Australian daily 'The Age', on 12 May 1994, focused on some home truths which are not without relevance to the Tamil struggle for self determination led by the Liberation Tigers of Tamil Eelam. He wrote:** "For nearly two decades, sections of the Australian media have been repeating the official line from Jakarta and Canberra that the East Timorese accept Indonesia's rule. Over the past few years following the trial of Xanana Gusmo and the Dilli massacre, it has become even more clear that this is untrue: a new generation of East Timorese, as well as those who originally suffered invasion and massacre, want to determine their own future and most oppose Indonesia's rule. Now the new line is that the East Timorese have rights, but they have to accept 'reality' and give up those rights. **Why must we accept that might is right? Although there are many unique features to the East Timor situation, the principles of international law remain the same, especially the right to self determination.**

**Instead of Australian journalists deciding what is reality, why can't they support principles of international law that allow a people to freely determine their own future under international supervision? Such votes on self determination, with choices such as integration, autonomy or full and sovereign independence, have occurred in Africa in recent years. Independence became reality for the Nambibians and Eritereans, who fought for thirty years (longer than the Timorese) to create this new reality.**The other strand of 'reality' is the old canard that East Timor will not be economically viable. Which brings us back to oil exploration in the Timor Sea. Maybe the Australian Government should spend more time talking to the leaders of the East Timorese people instead of BHP, Santos, Petroz and other Australian corporations developing Timor's oil."

**Nic Macelellan's remarks serve to further underline that which Tamil Eelam leader, Velupillai Pirabakaran declared on Maha Vererar Thinam in November 1993:"Our struggle for self determination ... is lawful in international law...(but) we are fully aware that the world is not rotating on the axis of human justice. ...International relations and diplomacy between countries are determined by the self interest of each country. .. In reality, the success of our struggle depends on our own efforts, on our own strength, on our own determination..."**

# கட்டுமானம்



வாகரை மாநிலம்: இது புதிய நிர்வாகப் பிரதேசம். பெரியளவு நிலப்பரப்பு உடையதாகும். தற்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியாக இது அமையும். இதன் தெற்கு எல்லை முகுந்தன் ஆறு ஆகும்.

3.3.13 அம்பாறை மாவட்டம் இரு மாநிலங்களாகச் சமநிலப்பரப்பு உடையதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நெற்செய்கையும், விலங்கு வேளாண்மையும் இங்கு பிரதானமானவை.

3.3.13.1 அக்கரைப்பற்று மாநிலம்

3.3.13.2 பொத்துவில் மாநிலம்

வெள்ளாவெளிப் பிரதேசம், தற்போதைய அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் பகுதிகளாக இருக்கும்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் தெற்கு எல்லைப் பகுதியாகப் பட்டிருப்பு அமையும். இப்பிரதேசமும் சனத்தொகை கூடிய பகுதியாகக் காணப்படும்.

3.3.14 புத்தளம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது.

3.3.14.1 அறுவாக்காடு மாநிலம்
3.3.14.2 புத்தளம் மாநிலம்
3.3.14.3 சிலாபம் மாநிலம்

## 4. பிரதான நகரங்கள்

மாநிலங்களாகத் தெரியப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு பிரதான நகரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என இச் செயற்குழு கருதி அதன்படி செயற்பட்டது.

இதற்கான முதற்கட்ட அவதானமாகத் தமிழீழத்தின் வளங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

உட்கட்டுமானம் தொடர்பாக 04.08.1993 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற குழுக்களின் கூட்டத்தில் ஏனைய குழுக்களுடன் நடாத்திய ஆலோசனையோடு பிரதான நகரங்கள் தெரியப்பட்டன. அவை தொடர்பாக மீண்டும் எமது செயற்குழு மீளாய்வு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் பிரதான நகரங்களின் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

4.1 நல்லூர்ப் பிரதேசத்தின் பிரதான நகரம் யாழ்ப்பாணம். இங்கு கூடியளவு உட்கட்டுமான வசதிகள் உள்ளன.

4.2 வரணிப் பிரதேசத்தின் பிரதான நகரம் கொடிகாமம். இது பருத்தித்துறை, சாவகச்சேரி, பளை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளின் மத்தியில் அமைகிறது. இங்கு அபிவிருத்திக்குரிய நிலப்பரப்பும் காணப்படுகிறது. புவியியற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கொடிகாமம் பற்றி ஆய்வு நடாத்தி, அதன் முக்கியத்துவம் பற்றிச் சில கட்டுரைகள் எழுதியுள்ளார்.

4.3 கராச்சிக்குக் கிளிநொச்சி நகரம். இங்கு கூடியளவு உட்கட்டுமான வசதிகள் உள்ளன.

4.4 பூநகரி மாநிலத்துக்குப் பூநகரி நகரமே சிறந்தது. சங்குப்பிட்டி, கேரதீவுப் பாலமும் (மகாதேவா பாலம்) போக்குவரத்தும் பூநகரி நகரை முக்கியத்துவப்படுத்துகின்றன. இங்கு நிர்வாகமையம் இம் மாநிலத்திற்கு இருப்பது விரும்பத்தக்கது.

4.5 முல்லைத்தீவு மாநிலத்துக்கு முல்லைத்தீவு நகரம் ஏற்கனவே இருப்பதால், தண்ணீரூற்று பிரதான நகரமாக அமையும். முல்லைத்தீவு நகரம் ஒரு துறைமுகமாகச் செயற்படும்.

4.6 மாங்குளம் வடதமிழீழத்தின் மாநகரமாகும். இவை பற்றிய ஆய்வுகள் 1991 இல் நடைபெற்றிருந்தன. இங்கு மாநகரம் உருவாவதால், காடழிப்பு ஏற்படும் அபாயம் உண்டென்றும், நீர்வளம் போதுமானதாக இருக்குமா என்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இதனால், தலைநகரமாகச் செயற்படும் மாநகரம் முறிகண்டியில் அல்லது கொக்காவிலில் அமையலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

4.7 மாந்தைப் பிரதேசத்தில் மன்னார் நகரமிருப்பதால், பெருநிலப்பகுதிகளின் அபிவிருத்தி பின்தங்கியுள்ளது. இங்கு கூடியளவு வளமும் காணப்படுகின்றது. இதனால், உயிலங்குளம் இப்பிரதேசத்தின் பிரதான நகரமாக அமையும்.

4.8 மடு மாநிலத்திற்கு மடுவே நகரமாகும் என்ற முடிவு 04.08.1993 இல் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்குழு இதனை மீளாய்வு செய்து, நகரத்தை மடுறோட் எனுமிடத்திற்கு மாற்றவேண்டும் என்று முடிவுசெய்தது. இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டமைக்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன.

1. மடு ஒரு காட்டுப் பிரதேசமாகவுள்ளது. இங்கு நகரம் ஏற்படுத்தப்பட்டால் காட்டுவளம் அழிக்கப்பட்டுவிடும்.

2. மடுக் கோவில் ஒரு புனிதப் பிரதேசமாகப் பேணப்படல் வேண்டும். இப்பகுதி பெரிய நகரமாக்கப்பட்டால், இதன் புனிதத்தன்மை சீர்குலையும் அபாயம் ஏற்படலாம்.

4.9 வவுனியா மாநிலத்திற்கு ஓமந்தை பிரதான நகரமாவது பொருத்தமானது. இதன் வளர்ச்சியின்போது, தற்போதைய வவுனியா நகரமும் அடங்கும். வவுனியா நகரம் ஓரளவு அபிவிருத்தி அடைந்துள்ளபடியால், அது பிரதான நகராக இருத்தல் வேண்டும் என 04.08.1993 இல் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதை இச்செயற்குழு மீளாய்வுசெய்து, வவுனியா ஒரு ஒதுக்கில் உள்ளபடியால், ஓமந்தை சிறந்ததெனக் கருதியது.

4.10 குச்சவெளி மாநிலத்திற்கு திரியாய் பிரதான நகரமாகத் தெரிவு செய்யப்பட்டது. திரியாய் ஒரு ஆதிக்குடியிருப்பு என்ற வகையில் அது நகரமாவது விரும்பத்தக்கது.

4.11 திருகோணமலை மாநிலத்திற்கு தம்பலகாமம்தான் அபிவிருத்திக்கு உகந்த நகரமாகும். தற்போதைய திருகோணமலை நகரம் ஒரு வரலாற்றுப் பொக்கிசமாக கோணேஸ்வரர் கோவிலை உள்ளடக்கிய வகையிற்பேணப்படல் வேண்டும். ஏற்கனவே 'திருகோணமலைக் கைத்தொழிற் பூங்கா' (Trinco Industrial Park) என்ற மாபெரும் அபிவிருத்தித் திட்டமும் இப்பகுதிக்குரியதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் 'பாரிய திருகோணமலை' (Greater Trincomalee) என்றழைக்கப்படும்.

4.12 மூதூர் மாநிலத்தின் பிரதான நகரமாகக் கிளிவெட்டி அமையவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

4.13 வாகரை மாநிலத்தின் பிரதான நகரமாக வாகரை நகரம் அமைய வேண்டும் என 04.08.1993 கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதனை இக்குழு மீளாய்வு செய்யும்போது, மாங்கனி பிரதான நகரமாக இருப்பது விரும்பத்தக்கது எனக் கருதப்பட்டது.

4.14 மட்டக்களப்பு மாநிலத்தின் பிரதான நகரமாகவும் கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரமாகவும் கரடியன் ஆறு அமையவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் மட்டக்களப்பு நகரமும் தொடர்ந்திருக்கும். இந்நகரை விஸ்தரிப்பதற்கான இடப்பரப்புக் குறைவாயிருப்பதால், கரடியன் ஆறு, நகரமாக அபிவிருத்தி செய்யப்படுவது சிறந்தது.

4.15 வெள்ளாவெளிப் பிரதேசத்துக்குப் பேராறு (மகா ஓயா) நகரம் பிரதான நகரமாக அமையவேண்டும். இது மத்திய நகரமாக அமைய முடியும். 04.08.1993 இல் நடைபெற்ற கூட்டத்தில் வெள்ளாவெளிப் பிரதேசத்துக்குப் பெரியபுல்லுமலை நகரமாக அமைய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இது இம்மாநிலத்தின் கிழக்கு எல்லையில் அமைவதாலும், கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரமான கரடியன் ஆற்றுக்கு மிகச்சமீபமாக இருப்பதாலும், 'பேராறு நகரம்' விரும்பத்தக்கதாக செயற்குழு தீர்மானித்தது.

4.16 அக்கரைப்பற்று மாநிலத்தின் பிரதான நகரமாகப் பாலமுனை அமையவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

4.17 பொத்துவில் மாநிலத்தின் பிரதான நகரமாகப் பொத்துவில் அமையவேண்டும். அருகம்பே துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்போது, அதனருகிற் காணப்படுவதால், பொத்துவில் நகரமும் விருத்தியடையும்.

4.18 அறுவாக்காடு மாநிலத்தின் பிரதான நகரமாகப் பொம்பரிப்பு அமைய வேண்டும்.

4.19 புத்தளம் மாநிலத்தின் பிரதான நகரமாக புத்தளம் அமையவேண்டும்.

4.20 சிலாபம் மாநிலத்தின் பிரதான நகரமாக சிலாபம் அமைய வேண்டும்.

## 5. சிறப்பான ஆய்வுகள் பற்றிய தேவை

தமிழீழத்தின் பிரதான தலைநகரான திருகோணமலையின் நகராக்கம் தொடர்பான விபரமான ஆய்வு தனியான நகரத் திட்டமிடல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.


வடதமிழீழப் பிரதேசத்தின் தலைநகராக விளங்கும் மாங்குளம் விருத்தி செய்யப்படும்போது, பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு தனியான நகரத் திட்டமிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. மாங்குளம் மாநிலத்துக்குரிய பிரதான நீர்விநியோக முறைக்கு உதவக்கூடிய வகையில், கனகராயன் ஆற்றை மையமாகவைத்து, பொருத்தமான ஒரு நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்படல் வேண்டும்.

2. தேவையேற்படின், பொருத்தமான வகையில் கனகராயன் ஆற்றைத் திசை திருப்புவதும், வவுனிக்குளம் ஆறு அல்லது முத்தையன்கட்டு ஆறு என்பனவற்றுடன் தொடர்புபடுத்தி இந்நீர்த்தேக்கம் அமைக்கப்படலாம்.

3. நீர்த்தேக்கச் செயற்திட்டம் அமையும் இடத்தைக் கருத்திற்கொண்டே, மாங்குளம் நகருக்கான சரியான அமைவிடம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(தொடரும்...)




| | மாநிலம் | | பிரதான நகரம் |
|---|---|---|---|
| 01 | நல்லூர் | - | யாழ்ப்பாணம் |
| 02 | வரணி | - | கொடிகாமம் |
| 03 | கராச்சி | - | கிளிநொச்சி |
| 04 | பூநகரி | - | பூநகரி |
| 05 | முல்லைத்தீவு | - | தண்ணீரூற்று |
| 06 | மாங்குளம் | - | மாங்குளம் ** |
| 07 | மாந்தை | - | உயிலங்குளம் |
| 08 | மடு | - | மடு ரோட் |
| 09 | வவுனியா / வன்னி | - | ஓமந்தை |
| 10 | குச்சவெளி | - | திரியாய் |
| 11 | திருகோணமலை | - | திருகோணமலை *** |
| 12 | மூதூர் | - | கிளிவெட்டி |
| 13 | வாகரை | - | மாங்கனி |
| 14 | வெள்ளாவெளி | - | பேராறு (மகா ஓயா) |
| 15 | மட்டக்களப்பு | - | கரடியன் ஆறு ** |
| 16 | அக்கரைப்பற்று | - | பாலமுனை |
| 17 | பொத்துவில் | - | பொத்துவில் |
| 18 | அறுவாக்காடு | - | பொம்பரிப்பு |
| 19 | புத்தளம் | - | புத்தளம் |
| 20 | சிலாபம் | - | சிலாபம் |

*** தமிழீழத் தேசியத் தலைநகரம் மாநிலத் தலைநகரம் **

# சமூக அநீதியாக உருவெடுத்துள்ள சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட மக்கள் கைகொடுத்து உதவ வேண்டும்

## தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

தமிழீழ சமூகத்தில், சீதன முறையானது பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமூக அநீதியாக உருவெடுத்திருக்கிறது. இந்தக் கொடுமையால் பெண்ணினம் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. பெண்கள் மட்டுமன்றி, பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடங்கியதாக எண்ணற்ற குடும்பங்கள் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுமையை ஒழித்துக்கட்ட, விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நோக்கில், சீதன ஒழிப்புச்சட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனைச் செம்மையாக செயற்படுத்தவும் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்றுறையினர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு பாரியசமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சீதனக்கொடுமையை ஒழித்துக்கட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நோக்கில், ‘சீதன ஒழிப்புச் சட்டம்’ ஒன்றைத் தயாரித்து, அதனைச் செம்மையாகச் செயற்படுத்தவும் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

சீதன ஒழிப்பிற்கான சட்டவாக்கம், மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், இந்தச் சிக்கலான பிரச்சினை குறித்து மக்களுடன் கலந்தாலோசனை நிகழ்த்தி, மக்களின் கருத்துக்களை கணிப்பெடுக்கும் நோக்குடன், வெகுசனப் பிரச்சார இயக்கம் ஒன்றையும் விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். சீதனப் பிரச்சினையின் தன்மைகள், அதனை ஒழித்துக் கட்டுவதற்கான வழிமுறைகள், சீதன ஒழிப்புச்சட்டத்தில் எழக்கூடிய சிக்கல்கள், அவற்றை எதிர்கொள்ளும் மார்க்கங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து, மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெறும் நோக்குடனேயே இந்தப் பிரச்சார இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வென்றெடுத்து, சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே இந்தப் பிரச்சார இயக்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

## வளமான வாழ்வுக்கு வழிதேடு - பெண் தருகின்ற சீதனம் பெருங்கேடு

தேசிய சுதந்திரப் போராட்டத்துடன், சமூக விடுதலையையும் வென்றெடுப்பதே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குறிக்கோளாகும். சமூக விடுதலை எனும்பொழுது சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளையும், அநீதிகளையும் நீக்கி, சமத்துவமும் சமநீதியும்கொண்ட புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிப்பதாகும். இதன் அடிப்படையில், விடுதலைப் போராட்டக் காலத்தில், சமூக ‘சீரமைப்பை நோக்காகக்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

இன்று, தமிழீழ சமூகத்தில், சீதன முறையானது பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமூக அநீதியாக உருவெடுத்திருக்கிறது. இந்தக் கொடுமையால் பெண்ணினம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. பெண்கள் மட்டுமன்றி, பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடங்கியதாக எண்ணற்ற குடும்பங்கள் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் இப்பிரச்சினையானது, எமது சமூகம் எதிர்கொள்ளும் ஒரு சாபக்கேடாக, எமது சமூக வாழ்வை சீரழித்துவருகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்குமானால், எமது சமூகத்தின் ஒழுங்கமைப்பு சீர்குலைந்து, எமது பண்பாட்டு வாழ்வும் சிதைந்துவிடும் பேராபத்தும் எழக்கூடும். எனவே, இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முறையில், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இந்தக் காலகட்டத்தின் அத்தியாவசியத் தேவையாகும்.

சீதனக் கொடுமையானது, நீண்டநெடுங்காலமாக எமது சமூகத்தில் ஆழவேரூன்றிய ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இதனை ஒழித்துக்கட்டுவதும் இலகுவான காரியமல்ல. ஆனால், மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால், இந்த சமூக அநீதியை ஒழித்துக்கட்டுவது சாத்தியமாகும். எனவே, எமது விடுதலை இயக்கம் மேற்கொள்ளவிருக்கும் முற்போக்கான முயற்சிக்கு மக்கள் கைகொடுத்து உதவவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். ■

# போசாக்குணவு வழங்கலில் இறைச்சி பதனிடுதல்

**1990** இன் பின்வந்த அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக, அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான். அவர்கள் உளவியல், உடலியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். பலவகைகளிலும் பாதிக்கப்பட்ட எமது மக்களின் உடல் ஆரோக்கியத்தைப்பேண இயன்றளவு போசாக்கான உணவு வழங்கப்படவேண்டும்.

மனித உடல் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து நிறைந்த பொருட்களாக மற்றைய பொருட்களோடு பால், இறைச்சி, முட்டை போன்றவற்றை புகழ்பெற்ற மருத்துவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். இதில் இறைச்சியை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வோம்.

வன்னியில் நிறைந்திருக்கும் கால்நடைவளம் எமது இறைச்சித் தேவையை பெருமளவில் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்றது. பால் தேவைக்கதிகமாக வன்னியில் இருக்கும்பொழுது, இங்கே தட்டுப்பாடு நிலவுகின்றது; இறைச்சியும் அப்படித் தான்.

இவை இரண்டும் பழுதுபட்டு அல்லது தரம் குன்றிப்போனால், அபாயகரமான பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையாகும். நேரடியாக அதாவது உடனடியாக நுகரப்படும் இறைச்சி வகைகளை சுகாதாரப் பரிசோதனைக்குட்படுத்தலாம். தாராளமாக இருக்கும் இடங்களில் இருந்து, தட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இறைச்சிவகைகள் பல்வேறுவகைகளில் தற்போது எடுத்துவரப்படுகின்றன.

1. கால்நடைகளை உயிராக இங்கே கொண்டுவந்து, அறுக்கும் முயற்சியிலே போக்குவரத்துக் கஸ்டங்கள், மற்றும் இயற்கை, செயற்கைக் காரணிகளால் பல கால்நடைகளை இழக்க நேரிடுகின்றது. இதன் காரணமாகவும், போக்குவரத்துச் செலவுகள் காரணமாகவும் இறைச்சியின் விலை அதிகரிக்கின்றது.

2. பெருநிலப்பரப்பிலே கால்நடைகளை அறுத்துக்கொண்டுவரும்போது, சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருப்பதோடு, போக்குவரத்துப் பிரச்சினைகளும் ஏற்படும்.

3. வற்றல் போட்டுக்கொண்டு வரும் பழக்கம் பலகாலமாகவே இங்கு இருந்து வருகின்றது. ஆனால் இப்படி வற்றல்போட்டுக்கொண்டுவரும் இறைச்சிகள் முறையான பதனிடுதல் எதுவும் செய்யப்படாமல், வெறுமனே வெயிலில் காயவைத்துவிட்டோ, புகையில் வாட்டிவிட்டோ சாக்குகளில் கொண்டவரப்படுவதால், இவ்வகை வற்றல்களிலே ஈரப்பதன் முழுமையாக அகற்றப்படாமலிருக்கும் வாய்ப்பு இருப்பதால், இவ்வீரலிப்பின் மூலம் ஏற்படக்கூடிய பின்விளைவுகள், அவற்றின் உபயோகத்திற்கு குந்தகம் விளைவிக்கலாம்.

இவற்றைக் கருத்திற்கொண்டு செயற்பட்ட, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் - உணவு பதனிடல் பகுதியினர், பூஞ்சணம் முதலியவற்றால் இவ்வளவு வளம் பாழாகப்போவதைத் தடுப்பதற்கானதும், சுகாதாரமானதுமான முறையில் இவைகளை நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வதற்குமான ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பவற்றை விஞ்ஞானரீதியாக, நிபுணர்களின் தொழில்நுட்ப மேற்பார்வையுடன் பதனிட்டு, நீர்த்தன்மையை அகற்றி, பொதிசெய்து நீண்டகாலம் களஞ்சியப்படுத்தி வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட உணவுபதனிடுதல் பகுதியினர் அம்முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளனர். குறிப்பிட்ட காலத்திற்குப்பின், பொதிகள் திறக்கப்பட்டு, தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினூடாக பல்கலைக்கழக மட்டத்திலே இந்த பதனிடப்பட்ட இறைச்சி வகைகள் பரிசோதிக்கப்பட்டன. இந்தப் பரிசோதனைகளிலே இவ்வகை இறைச்சிகள் மனித பாவனைக்குப் பொருத்தமானவை என்பதும், இவை குறித்த தரக்கட்டுப்பாட்டு நியமங்களைக் கொண்டிருக்கின்றன என்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

ஒரு பரிசோதனை முயற்சியாக சோற்றையும், பதனிட்ட இறைச்சியையும் ஒரு மாதகாலத்துக்கு மேல் தகரங்களிலடைத்து வைத்து, (Caning) பரிசோதிக்கப்பட்டது. தகரங்களின் மூடிகளும், அவற்றை முத்திரையிடப் பயன்படுத்தப்பட்ட பொறிகளும் தமிழீழத்திலேயே உருவாக்கப்பட்டன என்பது பெருமைக்குரிய ஒரு விடயமாகும். ஒரு மாதத்தின்பின் திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டபோது, இச்சோறு - இறைச்சிக்கலவை பழுதடையாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

முறைப்படி தொற்றுநீக்கப்பட்ட, துருப்பிடியாத தகரங்களைத் தயாரிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவ்வாறு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுக் கலவைகளை உலகின் பல்வேறு நாட்டினரும் பயன்படுத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும். எமது உணவுமுறையில் பெரும்மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய இம்முயற்சியானது, பெருமளவு வேலைவாய்ப்பையும் உருவாக்கக்கூடியதாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

கோதுமைமா ரொட்டிகளிலே, பதனிடப்பட்ட இறைச்சியை வைத்து உருவாக்கப்பட்ட ஒரு உணவுப்பொருளும், நீண்டகாலம் பழுதுபடாமல் வைத்திருக்கப்படக்கூடியதாகும் எனக்கண்டறியப்பட்டுள்ளது. இதனை உருசி பார்த்த பலரும் இதனுடைய சுவையை மனம் திறந்து பாராட்டியிருக்கின்றார்கள்.

இம்முயற்சிகள் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இறைச்சிக்கான கால்நடைகள் பெருமளவில் உள்ள வன்னிப்பகுதியிலே நீண்டகாலக் களஞ்சியப்படுத்தலுக்கும் பாவனைக்குமான உணவுவகைகளைத் தயாரித்து, தொற்றுநீக்கி, பொதிசெய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. நிரம்பல் பகுதிகளிலிருந்து கேள்வி பகுதிகளுக்கு இவ்வுணவு வகைகளைக் கொண்டுவந்து, சந்தைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள மக்களும் மற்றும் மறைமுக, நேரடித் தொழில் வாய்ப்புப் பயனாழிகளும் நன்மையடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சாரத்தடை ஒரு பின்னடைவுதான் என்றாலும், இங்கு கிடைக்கக்கூடிய சக்தி, எமது பகுதிகளில் காணப்படும் பெருமளவு மனிதவலு என்பவற்றை ஒருங்கிணைத்து, இச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் பரிந்துரையின்படி இவ்விறைச்சி, உணவுப்பொதிகளிலே இறுதிப் பாவனைக்குரிய திகதி குறிக்கப்படவிருப்பது இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ் உற்பத்திகள் மலரப்போகும் எமது தமிழீழத்தில் ஒரு புதிய துறையாக உருவாகப்போகின்றது என்பது திண்ணம். இந்தத் துறையின் வளர்ச்சியோ, வீழ்ச்சியோ இதனை நுகரப்போகின்ற பொதுமக்களின் ஆதரவில்தான் தங்கியுள்ளது. இதுவே மலரப்போகும் தமிழீழத்தின் புதியதொரு தொழில் முயற்சியாக வரப்போகும் ‘நீண்டகாலப் பாவனைக்கு உணவு பதனிட்டு - பொதியிடும்’ தொழிலுக்கு அடித்தளமாக அமையப்போகின்றது.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

நன்றி: 'ஈழநாதம்'

# தேர்தலில் தோல்வியை விரும்பும் ஐ.தே.க போட்டிக் குழுக்கள்

ஐ. தே. கவிற்குள் இன்று உருவாகியுள்ள காமினி, ரணில், கூரே, பிரேமதாசா அணிகளிடையே ஏற்பட்டுள்ள இழுபறி, கட்சியைப் பலவீனப்படுத்தும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. தேர்தலில் கட்சி வெற்றிபெறுவதைவிட, தோல்வியுறுவது, கட்சியில் பின்னர் தமது கையைப் பலப்படுத்த உதவுவதாக இருக்கும் என இவர்கள் நம்புவதாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் இது தொடர்பாக ஆலோசனை கேட்க, பிரதமர் ரணில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் சென்றபோது, பொறுத்திருக்குமாறு ஜே. ஆர். கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி வேட்பாளராக ஐ. தே. கவில் டி. பி. விஜேதுங்காவே நியமிக்கப்பட்டிருப்பதால், காமினியின் கை கட்சியில் ஓங்கும். இதனால், ரணிலின் பிரதமர் பதவிக்கு ஆபத்துவரலாம் என, ரணில் தரப்பில் அஞ்சப்படுகின்றது. இந்த அச்சத்தை ஜே. ஆரிடம் ரணில் கூறியபோது, "வருவதை ஏற்றுக்கொள்ளவும்; காமினியை உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது" என ஜே. ஆர் கூறியதாக கட்சி வட்டாரங்களில் கூறப்படுகின்றது. ■

# அவர் ஒரு பேராசிரியர்

சிறு கதை

புதியவன்

சற்று நீண்டதாக கோலிலிருந்த சுழல்கதிரையின் பரப்பளவில் டாக்டர் சம்பந்தனின் உருவம் மறைந்திருந்தது. அவரது அறைவாசலின் பின்பக்கத்தை சுழல்கதிரை மறைதிருக்கிறது. அறைக்குள் நுழையும் நோயாளிக்கு டாக்டர் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகமே தோன்றிவிடும்.

ஜேர்மனியில் டாக்டர்களைப் பார்த்த எம்மவருக்கு சம்பந்தரின் உருவம் கட்டையாகத்தான் தெரிந்தது. பெயர் என்னமோ 'டாக்டர் சம்பந்தர்' என வாசலில் எழுதியிருந்தாலும், அவருக்கு எம்மவர்கள் வைத்த பெயர் தமிழ் டொக்டர். ஜேர்மனியில் தஞ்சம் பூண்டவர்கள் வேலையைத்தேடி பணத்தைச் சேகரித்த வேகத்தில், அந்நாட்டின் மொழியைக் கற்றுக் கொள்ளவில்லை. அதனால் டாக்டர் சம்பந்தரை நாடுவதில் அவர்களின் மனதில் ஒரு திருப்தி.

சமபந்தரின் வைத்தியஅறை வெறிச்சோடிக்கிடந்தது. ஆம்... இன்று புதன்கிழமை, மதியவேளைக்குப்பின் ஜேர்மனியில் பெரும்பாலான டாக்டர்களின் அறை வெறிச்சோடித்தான் இருக்கும். வாரம் முழுவதும் நோயாளிகளைத் தொட்டுப்பார்த்த கைகள், பேனாவைக் கையில் எடுத்து, நோயாளிகளால் தமக்குக் கிடைக்கும் வருமானத்தை கணக்குப் பார்ப்பதற்காக இன்று அந்த அமைதி. சம்பந்தரின் அறையில் நிசப்தம் நிலவியது என்பது உண்மைதான். ஆனால் அவரின் சிந்தனையில் அமைதியில்லை. பேராசிரியர் துரையின் மறைவு சம்பந்தனின் மனதைப் பாதித்துள்ளது. பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவராக இருக்கும் பொழுதே, பொறியியல்துறை மாணவனான துரையின் நட்பைப்பெற்றவர். பாரிய நண்பன், எவ்வளவு எழிமையானவன், இனிமையானவன். தான்கற்றதை கற்றதோடுவிடாமல், ஆராய்ச்சிசெய்த அறிஞன். பல்கலைக்கழகங்களின் பொக்கிசம். அவருக்கு இப்படி ஒரு கொடிய நோயா! அவரது இழப்பை சம்பந்தரால் ஜீரணிக்க முடியவில்லை.

வெளிநாட்டிலிருந்து வெளியாகும் அத்தனை தமிழ்ப் பத்திரிகைகளிலும் பேராசிரியர் துரையின் படங்கள், அஞ்சலிச்செய்திகள் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன. சம்பந்தரின் மேசையில் நோயாளிகளின் மருத்துவ அட்டைகளுக்குப் பதிலாக இன்று தமிழ் சஞ்சிகைகள் குவிந்திருந்தன. பேராசிரியர் துரையைப் பற்றிய செய்தித் தலைப்புக்கள் ஒவ்வொன்றும் சம்பந்தரைப் பார்த்து கேள்விகள் கேட்டன. "சாதனைபடைத்த பேராசிரியர் என்பதைவிட, சரித்திரம் படைத்த பேராசிரியர் என்பதே உண்மை" என்ற தலைப்பில் வந்த அஞ்சலிச்செய்தி சம்பந்தரின் மனத்தை உறுத்தியது. சற்றுப் பெருமையுடன்கூடிய மன உறுத்தல்தான். "தகிறேற் நியூறோலஜி சேர்சன் டொக்டர் சம்பந்தர்" என்று ராசாத்தியின் பாசையில் பல அறிஞர்களுக்கு முன்னால் பேராசிரியர் துரையினால் பாராட்டப்பட்டவன் நான்.

தொடர்ந்தும் ஈழத்திலேயே இருந்திருந்தால், என்னையும் அம்மக்கள் போற்றியிருப்பார்கள்! இது அவரின் ஏக்கமல்ல, அவரது மனச்சாட்சியின் கேள்வி. இன்னும் பத்து வருடங்களிற்குப்பின், அவர் தமிழீழம் திரும்பிப்போகும் பொழுது, அங்குள்ள மக்களிடம் அவர் எதிர்பார்க்கும் கேள்வி... ஏனப்பா நாங்கள் செத்துப்போனோமா இருக்கிறோமா என்று பார்க்க வாறியா...? சிறந்த நரம்பு நிபுணர்... நீ... அன்று வந்திருந்தால், எத்தனையோ காயப்பட்ட போராளிகளை உன்னால் பாதுகாத்திருக்க முடியும்... உன் சேவையை அன்று எதிர்பார்த்திருந்தோம். நீ வரவில்லை. இன்று உன்னைப்போல எத்தனையோ பேரை உருவாக்கிவிட்டோம். இன்று நீ வந்திருக்கிறியே! நாடு திரும்பும்பொழுது இத்தகைய கேள்விகளை அவர் எதிர்பார்க்கிறார். இந்தக் கேள்விகளுக்குக்கூட அவரால் பதில் சொல்ல முடியும். சம்பந்தர் கதைக்கத் தெரிந்தவர். ஆனால் அவரது மனச்சாட்சியின் கேள்விக்கு அவரால் பதில்சொல்ல முடியவில்லை. சம்பந்தரின் தலையில் எஞ்சியிருந்த ஒன்று இரண்டு மயிர்களும் அவரது கைவிரல் பிடிக்குள் மாட்டிக் கொண்டு தவித்தன. அவரால் ஓரிடத்தில் இருந்துகொள்ள முடியவில்லை. ஏதோ.ஒன்று அவர் மனதை அரிக்கிறது. கையில் இருந்த பேனாவை எறிந்துவிட்டு, எழுந்து அங்கும் இங்குமாக நடந்தார்... 'நானும் நாட்டுக்குப்போய் என் மண்ணுக்குப் பணியாற்றுவதா? அப்போ என் வருமானம்... என் பிள்ளையின் வாழ்க்கை...? தமிழீழ மண்ணுக்குப் பணியாற்றப்போவதானால்... அப்போ நான் புலியா...?' சம்பந்தர் தன்னைத்தானே கேட்டார். அவர் மனதுக்குள்ளேயே ஒரு நீதிமன்றம். 'அப்போ நான் புலியா...?' சம்பந்தர் இன்னும் புலியாகவில்லை. அவரது மனச்சாட்சி புலியாகிவிட்டது இன்று. பேராசிரியர் துரையின் மறைவுதான் இதற்குக் காரணம். 'அப்படியானால் பேராசிரியர் துரை... புலியா...?' சிங்கள அகராதியில் ஈழத்தமிழரின் நலனில் அக்கறைகொண்ட யாருமே புலிதான்.

"பீம்... பீம்... பூம்... பீம் பூம்"

திறந்திருந்த யன்னலினூடாக வந்த கார்க்கோண் சத்தம் அவரது நிசப்தத்தைக் கலைக்க, சுழல்கதிரையில் இருந்து எழுந்த சம்பந்தர் அவசரமாக யன்னல் ஓரம் எட்டிப்பார்த்தார். ஜேர்மனியில் கலியாண ஊர்வலத்தில் கார்கள் கோண் அடிக்கும், அல்லது முன்னுக்குப்போறவர் பிழையாக வாகனம் செலுத்தினால், கோண் அடிப்பார்கள். ஆனால் இது இரண்டுமில்லையே... இன்று ஜேர்மன் -இத்தாலி உதைபந்தாட்டம். உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜேர்மன் வென்றுவிட்ட தன் மகிழ்ச்சி. ஜேர்மனியர்களின் குதூகலிப்பு.

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது, உலகநாடுகளே ஒன்றிணைந்து ஜேர்மனியை அழித்தபின்னும், தமது தேசியத்துவத்தின் ஒற்றுமையால் இன்று உலகிலேயே முன்னணியில் நிற்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டார்கள். ஆனால்... நாம்... நமது ஒற்றுமை மீண்டும் அவர் மனதுக்குள் போராட்டம்.

சீச்... சீச்சி. நான் வெளிநாடு செல்லப்போறேன் என்றவுடன்... எனது நண்பன் துரை சொன்ன அந்த வார்த்தைகள்... "சம்பந்தன்... நீ ஒரு சிறந்த நரம்பு நிபுணர், போராட்டகாலம்... என்று வெளிநாடுபோவது தப்பு... உனது சேவை இப்போதுதான் எமது இனத்திற்கு முக்கியம் தேவை. சாதாரண பொதுமக்கள் போராட்ட சூழலுக்கு முகம் கொடுக்கமுடியாமல் இடம்பெயர்வதில் பலகாரணங்கள் இருக்கலாம். ஆனால் நீ ஆண்டவனுக்குச் சமமானவன். எதிரியால் தாக்கப்பட்டவர்களே உயிர்ப்பிச்சைகேட்டு கோயிலுக்கோ, தேவாலயத்திற்கோ போகமுதல் உன்னிடம்தான் வருகிறார்கள்... உன்னால்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும். ஆனால் நீயே வெளிநாடு சென்றால்...!...?

சம்பந்தரின் மனப்போராட்டத்தில் முகம் சிவந்து அனலாகக் கொதிக்கிறது. டாக்டர் சம்பந்தர் அறையில் இருக்கும் கைகழுவும் தொட்டியில் முகத்தை நனைக்கிறார். அவர் தனது முகத்தைக்கூட கண்ணாடியில் பார்க்கவிரும்பவில்லை. அவர் முகத்தில் அவருக்கே வெறுப்பு.

ஜேர்மன்வாழ் தமிழர்களின் பார்வையில்தான் அவர் தமிழ் டாக்டர். ஜேர்மனியர்களுக்கு அவர் சுவாற்சை... -கறுப்பு -டாக்டர். டாக்டர் சம்பந்தர் என்னும் பெயர் வெறும் பெயரளவில் தான்.

சுவரில் இருந்த கடிகாரத்தை அவர் கண்கள்விழுங்கின.
"ஓ... நேரம் 8 மணி".
"கோடைக்காலம் என்பதால் பொழுது இருண்டதே தெரியவில்லை..." என்றவர், தன் வருகைக்கு காத்திருக்கும் மனைவியின் ஞாபகம்வந்து, அவசர அவசரமாக புறப்படத் தயாரானார்.

கதவின் அழைப்புமணிச்சத்தம் கேட்டு, இது அவர்தான் என்ற முடிவுக்கே வந்தவவாக எழுந்து சென்றா வள்ளியம்மா. 'அவரே தான்...' வாசற்கதவைத் திறந்துவிட்ட வள்ளியம்மா வீட்டுக்கு வந்த தன் கணவனின் அடுத்த தேவை என்ன என்பதை தெரிந்து, சமையல் அறைப்பக்கம் திரும்பினா.



ஜேர்மனிக்கு வந்ததிலிருந்து எதிலுமே பற்றற்றவவாக வெறுமையானவவாய் இருக்கும் வள்ளியம்மாவிற்கு மனதில்தான் தளர்வு இருந்தது. ஆனால் இன்று அவவின் நடையிலும் ஒருவித தளர்ச்சி..., சோர்வு..! "அம்மா..." சம்பந்தர் தன்மனைவியை அப்படித்தான் அழைப்பார். வள்ளியம்மா என்ற பெயரின் சுருக்கமா... அல்லது அவசெய்யும் பணிவிடைக்கு கணவன் கொடுக்கும் மரியாதை...? எப்படியோ மனைவியை அம்மா...! என்று அழைப்பதில் சம்பந்தருக்கு ஒரு மனநிறைவு.

வள்ளியம்மா... சற்றுநின்று மிகநிதானமாக அரைவட்டத்தில் திரும்பிய அவவின் முகத்தில் ...! அந்தக் கண்கள்...! அது குளமாகி அணையைத் தாண்டிப்பாயும்போல் இருந்தது. அந்த இரணைமடுக் குளத்து நீர் தேம்பி வழிந்தது. ஒருவேளை பேராசிரியர் செய்தியை அறிந்திருப்பாவோ...!

"...ம்ம்..."
- அவவின் குரல் கேரியது -
சம்பந்தரின் அடைத்த தொண்டையிலிருந்து மிகவும் சிரமப்பட்டு வந்த வார்த்தை.

"பேராசிரியர்... துரை..."
- அவர் இன்னும் வசனத்தை முடிக்கவில்லை -
"ஐயோ...!...!..."
- அந்தக் கண்ணீர்க்குளம் உடைந்தேவிட்டது -
தன் கையால் தன்தலைக்கு அடித்தபடி... சமையலறைக்குள் ஓடினா வள்ளியம்மா.
சம்பந்தர் மனம் இடிந்துபோய் பக்கத்தில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.
"ஐயோ...! ஐயோ...!..." வள்ளியம்மாவின் அழுகை இன்னும் நிற்கவில்லை... எப்படி ஆறும்? "ஆ... கடவுளே... தாய்மண்ணுக்காக பணியாற்றிய அந்த உத்தமரையும் நீ விட்டுவைக்கவில்லையா...? அந்த இனிய உள்ளத்துக்கா -இந்த கொடிய நோய்வரவேண்டும்...? இந்த நோயை மாற்ற அப்படி ஒரு வைத்தியர் இல்லையா...? அல்லது அப்படி ஒருவரும் எமது மண்ணில் பிறக்கவில்லையா...?...!...!...!"
அந்த சொற்பநேர மவுனத்தின்பின் ஒரு... ஸ்க்... என்ற உறிஞ்சலுடன் வள்ளியம்மா தொடர்ந்தா...

"அதுசரி... படிச்சு, பட்டம்பெற்று, பெரிய வைத்திய நிபுணர்கள் என்று பெயர்பெற்றவையே தங்கள் சுயநலத்திற்கா வெளிநாடு வந்தால்..."

"எந்தத்துரையை... எவர் காப்பாற்றுவது...!"
- இது சம்பந்தரைச் சுட்டது -

சோபாவில் பிடரிக்கு கைகட்டிக்கொண்டு பின்புறம் சாய்ந்திருந்த சம்பந்தர் திடீர் என வள்ளியம்மாவின் பக்கம் முகத்தைத் திரும்பிப்பார்த்தார்...!

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# வல்லரசுகள் விதைத்த வினைகளால் மீட்சியில்லாத் துயரில் ஆப்கான் மக்கள்

இவ்வருடத் தொடக்கத்திலிருந்தே தொடங்கி, பேரிடியாக ஆப்கானித்தான் மக்கட்கு அமைந்துவிட்ட மோதல்கள் இன்றளவும் தொடர்கின்றன. இவை இப்போதைக்கு முடிவதற்கான எவ்விதமான சாத்தியமும் இல்லையென்பது இப்போது தெளிவாகிவிட்டது. தொடக்கத்தில் காபூலை மையமாகவைத்து தொடங்கப்பட்ட மோதல்கள், இப்போது ஆப்கானின் பல்வேறு பகுதிகட்கும் பரவுகின்றன. மோதலைத் தவிர்க்க பாகித்தான் தொடக்கம் ஐ. நா. வரை எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இனிமேல் இத்தகைய முயற்சிகள் எதுவும் பயன்தரும் என்கிற நம்பிக்கைகளையும் மக்கள் இழந்துவிட்டனர். இரண்டிலொரு முடிவு வரும்வரை மோதல்கள் நீடிக்கப் போவதாகவே மக்கள் நம்புகின்றனர். பனிப்போர் நிலவிய காலத்தில் நடந்த மோதல்கள் போல் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு ஆனால், மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் இம்மோதல்கள் அமையப்போவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஆப்கானித்தான் என்கின்ற தேசத்தின் வரைபடத்தை மீளவும் வேறொருவிதமாக வரையநேரிட்டுவிடுமோ என்கின்ற ஐயம் இப்போது வலுவடைகின்றது.

முடிவில்லாத அவலமே இன்று ஆப்கான் மக்களின் அன்றாட வாழ்வாகிவிட்டது. 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்பது போலிருந்த குழு மோதல்கள் மறையும் என மக்கள் நினைத்ததற்குப் பதிலாக, அவை இப்போது பெரும்போராகிவிட்டன. எனவே இருவல்லரசுகளுக்கிடையே முறுகல்நிலை நிலவியபோது பேரழிவைச் சந்தித்த மக்கள், 1990 ஆம் ஆண்டு சோவியத் படைகள் வெளியேறியபின் முஜாகுதீன் போராளிகள் குழுக்களின் மோதல்களில் சீரழிந்த மக்கள் - இன்று முடிவில்லாத நீண்ட உள்நாட்டுப் போரில் மடிகின்றனர்.



குல்புதுதீன் கெக்மாட்டியார்

இப்போது பட்டினிச்சாவும் அவர்களை அண்மிக்கின்றது. காபூலில் ஏறத்தாழ அரைஇலட்சம் மக்கள் கடும்குளிரில் வதிவிட வசதிகளின்றி, பட்டினியின் விளிம்பில் இருப்பதாக ஐ. நா அறிவித்துள்ளது. நான்கு இலட்சம் மக்கட்கு மேல் இடம்பெயர்ந்துவிட்டனர். காபூலின் பெரும்பகுதி பாழடைந்த நகரம்போல் சிதறலாகி வெறிச்சோடிப்போய் விட்டது. சென்ற சனவரியிலிருந்து இற்றைவரை1, 500 மக்கள் மடிந்ததாகவும், 10, 000 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (காபூலில் மட்டும் 1992 ஆண்டின்பின் இற்றைவரை 10, - 000 மக்கள் குழு மோதல்களில் இறந்ததாகச் சொல்லப்படுகின்றது. )

இப்போதுள்ள பெருத்த அவலம் என்னவென்றால் காபூல் நகரில் சிக்கியிருக்கும் மக்கட்கு உணவு விநியோகம் தடைப்பட்டமையும், ஏதிலிகளாக பாகித்தான், ஈரான் போன்ற நாடுகளை நோக்கி ஓடியமக்களை அந்நாடுகள் ஏற்காமையும் ஆகும். ஒரு காலத்தில் தமது சகோதரர்களாகக் கருதி இருகரம் நீட்டி வரவேற்று, பலஇலட்சம் ஆப்கான் மக்களை பல்லாண்டு காலம் பராமரித்த இருநாடுகளும் இப்போது கையை விரித்துவிட்டன. ஆப்கான் மக்கட்கு மிகநெருங்கிய ஆதரவாளராக தன்னை இனம் காட்டிய பாகித்தானின் புதிய போக்கு பெரும்சீற்றத்தை ஆப்கானித்தான் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே சென்ற பெப்ரவரி 20 ஆம் திகதி இசுலாமாபாத் நகருக்கு அண்மையில் பள்ளிப்பிள்ளைகள் சென்ற பேருந்தைக் கடத்திய ஆப்கான் போராளிகள் சிலர், காபூல் மக்கட்கு உணவு அளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். பாகித்தானிய கொமாண்டோக்கள் முறியடித்த இக்கடத்தல் நாடகத்தின்போது, சில ஆப்கானியர் மடியநேரிட்டது. இதனால் காபூலில் இருந்த பாகித்தான் தூதர் அலுவலகம் தாக்கிச் சேதமாக்கப்பட்டது. ஏற்கனவே தமது நாடுகளில் இருக்கும் 16 இலட்சம் ஏதிலிகளை பாகித்தானும், 23 இலட்சம் ஏதிலிகளை ஈரானும் எவ்வாறு திருப்பி அனுப்புவது என்றே சிந்திக்கின்றன. எனவே இன்று ஆப்கான் மக்கள் வல்லரசுகளினதும், அண்டை நாடுகளினதும் ஆபத்தான அரசியல் விளையாட்டில் பகடைக்காய்களாகி படாதபாடுபடுகின்றனர்.

ஆப்கானின் அவலத்திற்கு அன்றுதொட்டு இன்றுவரை அதன் அமைவிடமே பிரதான காரணமாகிவிட்டது. முன்பு வல்லரசுகள் தமது மேலாதிக்கத்திற்கு கருவியாக ஆப்கான் அமைவிடத்தைப் பயன்படுத்தின. இன்றோ ஆப்கானைச் சுற்றியுள்ள மத்திய கிழக்கு நாடுகள், முன்னர் சோவியத்திலிருந்து பிரிந்துபோன மத்திய ஆசியப்பகுதிக் குடியரசுகள் எல்லாமே இன்று தமது பொருண்மிய நலன்கட்காக, ஆப்கானில் ஏற்படும் ஆட்சி தமது அரசுகட்கு பாதிப்பேற்படாமல் அமைவதற்காக தமது தலையை ஆப்கான் விவகாரத்தில் நீட்டுகின்றன. இதனால் இந்த நாடுகள் தத்தமது செல்வாக்கிற்குட்பட்ட அமைப்புக்களை ஆதரித்து தற்போதைய குழுமோதல்கள் தொடர்கதையாக வளர வழிவகுத்த வண்ணமேயுள்ளன.

இவ்வாறாக உஸ்பெக்கித்தான், பாகித்தான், ஈரான், சவுதி அரேபியா, துருக்கி, தஜிகிஸ்தான் என நீளும் இந்நாடுகள், தமது நலன்கட்காக ஆப்கானில் உள்ள பல்வேறு பூர்வீகக் குழும, கலாச்சாரத் தொன்மை வேறுபாடுகளைக் கையாளுகின்றன. உஸ்பெக், தஜிக், பக்தூன், சியா, இஸ்மாயிலி எனப்பல் வேறு இனக் குழுமங்களிடையேயான பரம்பரைப் பகைமைகளை இவர்கள் இன்று தீப்பற்றி எரியச் செய்துவிட்டனர்.

குறிப்பாக 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமெரிக்க -பாகித்தானிய கூட்டுமுயற்சியால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டதும், போராளிக் குழுக்களில் மிகப்பலமுடையதுமான கிஸ்பி இசுலாமியின் (Hezbi -Islami) தலைவரான குல்புதுதீன் கெக்மாட்டியாருக்கும், தற்போதைய சனாதிபதியும் யமாதி இசுலாமியின் (Jamati -Islami) தலைவருமான றபானிக்கும், அவரது கூட்டாளியுமான அகமதுசா மசூத்திற்கும் இடையேயான பகைமை இன்று உச்சம்பெற்று விளங்குகின்றது. ஆப்கான் மக்களில் ஏறத்தாழ 30 -50 விழுக்காடு பக்தூன் இனமக்களாகும். இம்மக்களின் தலைவராக தன்னைக் கருதிக்கொள்பவர் கெக்மாட்டியார். அதுபோலவே சிறுபான்மை தஜிக் இனத்தைச் சேர்ந்தவர்கள் றபானியும், மசூத்தும் ஆவர். வரலாற்றில் 100 வருடங்களில் முதல் தடவையாக கடந்த இருவருடங்களாக காபூலில், பக்தூன் இனத்தைச் சாராதவர்



ஜெனரல் தோஸ்த்தம்

கள் ஆட்சிசெய்வது கெக்மாட்டியாருக்குப் பொறுக்கமுடியாத விடயமாகின்றது. சோவியத் சார்பு நஜிபுல்லா வீழ்ந்த பின்னர் பக்தூன் இனத்தைச் சாராத வடக்கு ஆப்கான் இனக்குழுக்கள் கைவசமே காபூல் ஆட்சி இருந்துவருவதே இப்போதைய தகராறின் அடிப்படையாகின்றது. சோவியத்திற்கு எதிராகத் தாமே கட்டிவளர்த்த இவ்வமைப்புக்கள், தமக்குள் மோதுவதைத் தடுக்க அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் எடுத்த முயற்சிகள் எதுவுமே பயன் அளிக்கவில்லை. அமெரிக்காவோ, ஆப்கான் விடயத்தை இப்போது தற்காலிகமாகக் கைகழுவிவிட்டது. இறுதியில் பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து, சென்ற வருடம் பாகித்தான், ஈரான், சவூதி அரேபியா போன்ற நாடுகள் மெக்காவிற்கு போராளித் தலைவர்களை அழைத்து புனி

**பாலகுமாரன்**

தத்தலத்தின் முன் ஏற்படுத்திய இணக்கமும் இன்று காற்றில் பறக்கின்றது. றபானியை சனாதிபதியாக-கெக்மாட்டியாரை பிரதம மந்திரியாக-இதுவரை காலமும் மசூத் வகித்துவந்த பாதுகாப்புத் துறையை கெக்மாட்டியாரிடம் ஒப்படைக்கவும் வழி செய்யப்பட்டது. ஆனால் மசூத்தோ நாடு திரும்பியபின் பதவிவிலக மறுத்ததுடன், கெக்மாட்டியாரை காபூலுக்கு வரவிடாமற் தடுத்து தனது பதவி ஆசையை பகிரங்கமாகவே இன்று வெளிப்படுத்திவிட்டார்.

கெக்மாட்டியாருக்கும் அகமத் சாமசூத்திற்கும் இடையிலான பகைமை உலகம் அறிந்ததே. நானா, நீயா என்று இன்று இவர்கள் மோதும் மோதலின் தீவிரம் ஆப்கான் மக்களின் அவலத்திற்கு அடிப்படை.

இக்கட்டத்திலேயே வடக்கு ஆப்கான் பகுதி உஸ்பெக் இனத்தளபதியான ஜெனரல் தோஸ்த்தம் (Dostam) என்பவரின் நிலைப்பாடு இம்மோதலில் முக்கியம் பெறுகின்றது. பெயரளவில் இவர் முசுலிமாக, இருந்தாலும் சோவியத்சார்பு சனாதிபதி நஜிபுல்லா காலத்தில் அவருக்குத் துணையாக இருந்தவர். பின் அவருக்கான தனது ஆதரவை விலக்கி, முஜாகுதீன் போராளிகளோடு சேர்ந்ததன் மூலம் நஜிபுல்லாவின் வீழ்ச்சிக்குக் காரணமானவர். அதன்பின் அகமது சாமசூத்தோடு சேர்ந்து கெக்மாட்டியாரின் விரிவாக்கத்திற்கு பலத்த தடை ஆனார். இப்போது எவரும் எதிர்பாராத வகையில், றபானியைக் கைவிட்டு, கெக்மாட்டியாரோடு சேர்ந்துவிட்டார். இவரது மிகப் பலம்வாய்ந்த 80, 000 உஸ்பெக் வீரர்களைக்கொண்ட படை சோவியத்தின் மிகப்பலம்வாய்ந்த கனரக ஆயுதங்களைக்கொண்டது; ஒரு தீர்மானிக்கும் சக்தியாகக் கருதப்படுவது. தனது மேலாண்மை வடக்குப் பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு. காபூல் அரசில் தனக்கு முக்கியஇடம் அளிக்கப்படவேண்டும் என்பதே இவரது கோரிக்கையாகும். இதற்காக இவர் எவரோடும் கூட்டுச்சேரத் தயார். எனினும் இவரது பின்னணியில் பல்வேறு சக்திகள் செயற்படுகின்றன. பல சிக்கல்களின் முடிச்சுக்கள் அவிழ்க்கப்படுகின்றன.

புதிய மத்திய ஆசியக் குடியரசுகளான உஸ்பெக்கித்தானும், தஜிகித்தானும் தத்தமது அரசுகட்கு ஆபத்து வராமல் இருப்பதற்காக, ஆப்கானில் இசுலாமிய அடிப்படைவாத அரசுகள் அமைவதை விரும்பவில்லை.

> **"கொதிக்கும் எண்ணெயில் அன்று- கொழுந்து விட்டெரியும் தீயில் இன்று- ஆப்கான் மக்கள் படும்பாடு".**

எனவே வடக்கில் தோஸ்த்தம் பலம்பெற்று விளங்குவதை இவை ஆதரிக்கின்றன. அதுபோலவே துருக்கியும் ஜெனரல் தோஸ்தத்திற்கு உதவுவதாகக் கூறப்படுகின்றது. அதுமட்டுமின்றி, தஜிகித்தானில் இப்போது நடக்கும் உள்நாட்டுப் போரில் தஜிகித்தான் முன்னாள் சோவியத்சார்பு ஆட்சியாளருக்கு எதிராகக் கடுமையாகப் போராடிவரும் தஜிக் இன இசுலாமியப் போராளிகளுக்கு ஆப்கானிலிருந்து உதவிகிடைக்காமல் இருப்பதற்காக, தஜிக் இன மசூத்திற்கும் எதிராக தோஸ்தத்திற்கு தஜிகித்தானும், அங்கு தங்கியுள்ள யெல்ட்சினின் ருஸ்சியப் படையினரும் உதவுவதாக வேறு கூறப்படுகின்றது.

எனவே இவ்வாறான பின்னணியில் ஜெனரல் தோஸ்த்தம் தனது கட்டுப்பாட்டில், வடக்கின் சில பகுதிகளைச் செவ்வனே நிருவகித்து வருவதாகக் கூறப்படுகின்றது. காபூலைப்போல மோதல்களால் பாதிக்கப்படாத இவரது பகுதியின் தலைநகரான மசார் (Mazar), காபூலைவிட செழிப்புள்ளதாக நம்பிக்கைக்குரிய பகுதியாகக் கருதப்படுகின்றது. இதனால் இங்கு அநேக



அகமதுசா மசூத்

வெளிநாடுகள் தமது தூதர் அலுவலகங்களை அமைத்துள்ளன. இவ்வாறே இன்று ஆப்கானின் உள்ளூர்ப் பகுதிகள் அவ்வப்பகுதி இனக்குழுத் தலைவர்களால் நிருவகிக்கப்படுகின்றன. 1992 ஆம் ஆண்டின்பின் மத்திய அரசு ஒன்றிருப்பதாகவே எவரும் கருதுவதாகத் தெரியவில்லை.

இப்போது எழும் கேள்வி என்னவென்றால், இன்று காபூலை மையமாக வைத்து நடக்கும் மோதலில் தத்தம் வசதிக்காக கூட்டுச்சேர்ந்தள்ளோர், எவ்வளவு காலம் தமது கூட்டுக்களை வைத்திருப்பர் என்பதேயாகும். அவ்வாறு கூட்டுக்கள் முறியும் நிலையில், ஆப்கான் சிதறிப்போகும் நிலை இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முன்னர் மேற்குலக தொடர்புச் சாதனங்களால் பெரும் வீரராகச் சித்தரிக்கப்பட்ட மசூத், தனியான பெருவிருப்பமொன்றை அடிமனதில் வைத்திருப்பதாகவே கருதப்படுகின்றது. தற்போதைய தஜிகித்தான் குடியரசையும், ஆப்கானின் வடபகுதியையும் இணைத்த ஒரு புதிய தேசத்தின் தலைவராகத் தான் மாறவேண்டும் என்பதே அது. அதுபோலவே தெற்கிலும் பாகித்தான் ஆதரவோடு கெக்மாட்டியாரும், ஏனைய சிறுசிறு குறுநில மன்னர்போல் பல்வேறு குழுக்கள் தத்தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்த முயல்கின்றன. எனவே 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்கின்ற நிலையில், ஆப்கான் எதிர்காலம் கேள்விக் குறியாகின்றது. இத்தகைய நிலையிலே முன்னைய நஜிபுல்லா ஆட்சி அல்லது மன்னர் சாகிர்சா (Zahi-rshah) ஆட்சிபற்றி மக்கள் சிந்திக்கத் தலைப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது சிறைக் கைதியாகவுள்ளார் நஜிபுல்லா. அவரது வீழ்ச்சியின் பின்னர், அவரது அணியினர் கெக்மாட்டியார் பக்கமும் றபானி பக்கமுமாகத் தமது இனச்சார்பிற்கேற்ப இணைந்துவிட்டனர். எனவே ஆப்கான் மக்களைப் பொறுத்தவரை இன்று எவ்வித தெரிவிற்கும் இடமில்லாத நிலையேயுள்ளது. ஏதாவது ஒரு பகுதி அழிந்தாலேயே முடிவேற்படும் என்பதே அவர்களின் இன்றைய பட்டறிவு. ஏனென்றால் காபூலைக் கைப்பற்ற நடக்கும் பாரிய மோதல்களில் இன்று விமானக் குண்டுவீச்சுக்கள்,

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# யேர்மனியில் கரும்புலிகள் நினைவுநாள்

**09.07.1994** சனிக்கிழமையன்று, தமிழர் கலை, பண்பாட்டுக் கழக யேர்மன் கிளையினரால், ஏசன் நகரில் உள்ள பல்கலைக்கழக மண்டபத்தில் 'கரும்புலிகள் நினைவுநாள்' கலை நிகழ்ச்சிகளுடன் நினைவுகூரப்பட்டது.

காலை 8 மணிக்கு ஆரம்பமான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் கலந்துகொண்டு, ஆர்வத்துடன் பங்குபற்றினர். கருத்துச்செறிவான ஆக்கங்களை போட்டியாளர்கள் வெளியிட்டபோது, பார்வையாளர்கள் வியந்து நின்றனர். உமா என்ற ஐந்து வயதுச் சிறுமி ஆறு நிமிடங்கள் தங்குதடையின்றி ஆற்றிய உரை, பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

கவிதைப் போட்டியில் கலந்துகொண்ட, மேற்பிரிவு மாணவர்களின் கவிதைகள், புலம்பெயர்ந்த இளம் ஈழத்தமிழரின் மத்தியில் சிறந்த கவிநயமுள்ள படைப்பாளிகளைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்தது.

பிற்பகல் 5 மணியளவில் கரும்புலிகள் நினைவுக் கலை நிகழ்ச்சிகள் தீபாராதனையுடன்கூடிய மௌன அஞ்சலியோடு ஆரம்பமானது.

"கரும்புலிகளே! உங்களை நோக்கி..." என்ற தலைப்பில் வார்த்தைகளால் ஒரு பிரார்த்தனை நடைபெற்றது. போட்டிகளில் பரிசுபெற்ற ஆக்கங்கள் மேடையேற்றப்பட்டன. "நமது எதிர்காலத்துக்காக, தங்களது உயிரை, நாள் குறித்துத் தானம் செய்தவர்கள் கரும்புலிகள். நமது எதிர்காலம் என்பது நமது இளைய தலைமுறையே. அவர்களது திறமைகளை வெளிக்கொணர நடாத்தப்பட்ட இப்படியான போட்டிகள், கரும்புலிகளின் எண்ணங்களுக்கு உருவம்கொடுக்கும் முயற்சிகளின் ஒரு சிறியபகுதியே" எனக்கூறிய கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், கப்டன் மலரவனின் 'போர் உலா' என்ற போர்க்கால இலக்கியத்தை வெளியிட்டுவைக்கையில்:-

"மலரவன் மரணத்தை சட்டைப் பையில் சுருட்டிவைத்துப் போராடியவன். அவன் என்றும் மரணத்தைக் கண்டுபயந்ததில்லை. அவனுடைய சட்டைப் பைக்குள் இருந்த, குறிப்பேட்டில், சகபோராளித் தோழர்களின் மரணம், மரணத்தின் இறுதிவிளிம்பிலும் அந்தப் போராளிகளின் இலட்சியவேட்கை - போராளிகளின் இதயங்களில் நிறைந்து நின்ற உன்னத எண்ணங்கள், அந்த வயதுக்கேற்ற குறும்பு -இலட்சியத்தால் உரமான நட்பு, போராளிகள் மக்களைநேசிக்கும் பாங்கு -மக்கள் போராளிகளை அன்போடு நன்றிசெலுத்திய தேசப்பற்றின் இழையோடிய உணர்வு. இப்படி ஒரு தேசத்தின் விடியலுக்கான வேளையின் யதார்த்தம் கொட்டிக்கிடக்கும் களஞ்சியமே இந்தப் புத்தகம்" என்றார். 'நொய்ஸ்' பிரதிநிதி திரு. அன்னலிங்கம் முதற்பிரதியை வாங்கினார்.

'வெற்றியை விதைத்தவர்கள்' என்ற இசை நடனம், பல விடுதலைக் கீதங்களுடன்கூடிய, புதிய கலை வெளிப்பாடாகத் தோன்றியது. கரும்புலிகளை நினைவுகூரும் உன்னதமான கணங்களாக அந்த நிமிடத்துளிகள் கரைந்தன.

"மண்ணை நேசித்து,
விண்ணதிர வெடித்தவர்கள்".

என்ற கவியரங்கம் பலரது கைதட்டல்களுடன், சூடான கருத்துக்களை வெளிப்படுத்தி, கரும்புலிகளின் தியாகத்தைப் போற்றி, பாராட்டைப்பெற்றது.

வருகை தந்திருந்தோர், உணர்ச்சிப்பெருக்குடனும், விடுதலை வேட்கையுடனும், "மனிதநேயம் காப்பாற்றி வளர்க்கப்படவேண்டிய ஒன்று" என்றும், "அந்த பணியைச் செய்யவே கரும்புலிகள் உயிர் ஈந்தார்கள்" என்றும் பேசியபடியே, விழா மண்டபத்தைவிட்டு அகன்றனர். ■



03-07-94 அன்று சுவிசில் இடம்பெற்ற கரும்புலிகள் ஞாபகார்த்த எழுச்சி விழாவின்போது


## டென்மார்க்கில்
## மாபெரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி – 94

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மீண்டும் ஒருவரை ஒருவர் கைகுலுக்கிக் கொள்ளும் நாள் .

உதை பந்தாட்ட அபிமானிகளே !

வெளி நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் உதைபந்தாட்டக் குழுக்களுக்கிடையில் மாபெரும் 7 பேர் கொண்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை முதன் முதலாக டென்மார்க்கில் நடாத்த ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது .

எதிர்வரும் செப்டெம்பர் 10 ம் திகதி(10 . 09 . 94)சனிக்கிழமையன்று இச் சுற்றுப்போட்டியை நடாத்த ஈழத் தமிழர் கலையரங்கம் தீர்மானித்துள்ளது .

வெளிநாடுகளில் வாழும் தமிழ் உதைபந்தாட்டக் குழுக்கள் சகலதையும் இப்போட்டியில் கலந்து கொண்டு , போட்டியைச் சிறப்பிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் .

குறிப்பு ,

வெளிநாடுகளில் இருந்து வந்து கலந்து கொள்ளும் குழுக்களிற்கு தங்குமிட வசதி , உணவு வசதி , போன்றவை செய்து தரப்படும் . விமானத்தில் வரும் குழுக்களிற்கு விமானநிலையத்திலிருந்து போக்கு வரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்படும் . கலந்து கொள்ளும் குழுக்கள் தமது குழுவில வரும் அங்கத்தவர்கள் எத்தனை பேர் ? என்பதை அறியத் தந்தால் , தங்குமிட வசதி , உணவு வசதி , போன்றவற்றை சிறப்பாகச் செய்யமுடியும் என்பதையும் அறியத்தருகிறோம் .

மேலதிக விபரங்களிற்கு கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் .

S.E. Mahendren , Grønningen 35 st . th , 7200 Grindsted , Denmark , T. Phone : 75310546 .


# ரெலோ - புளொட் குழுக்கள் வவுனியாவில் மோதல்

வவுனியாவில், புளொட் குழுவினருக்கும் ரெலோ குழுவினருக்கும் இடையில், லொறிக்காரர்களிடம் கப்பம் வாங்குவது தொடர்பாக முறுகல் ஏற்பட்டுள்ளது. பணத்தை லொறிக்காரர்களிடம் ரெலோக் குழு வாங்குவதை நிறுத்தவேண்டும் எனவும், அதையும் மீறி வாங்கினால், நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புளொட் குழு எச்சரித்துள்ளது.

அண்மையில் வவுனியாப் பொலிசாரால், ரெலோ குழுவால் பதுக்கிவைக்கப்பட்டிருந்த காட்டுமரங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக புளொட் குழு பொலிசாருக்குத் தகவல் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேசமயம், வவுனியாவில் தொடர்ந்தும் தமது கைது செய்யும் நடவடிக்கையை புளொட் மேற்கொள்கின்றது. ■

# பனைத் தொழில் வல்லுநர் சந்திப்பு

பனைத்தொழில் வல்லுநர்களுக்கு இருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து, ஆராய்ந்து ஆவனசெய்யும் நோக்கில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர், மேற்படி தொழில் வல்லுநர்களை நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாடி விபரம் திரட்டிவருகின்றனர்.

இச்சந்திப்பு, பனைத் தொழில் வல்லுநர்கள் வதியும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் ரீதியாகவும், தனிப்பட்ட வகையிலும் இடம்பெற்று வருகின்றது. ■

# சீதன ஒழிப்புப் பிரசாரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில், சீதன ஒழிப்புப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால், வட்டவை ரீதியாக இச்சீதன ஒழிப்புப் பிரசாரம் நடத்தப்பட்டு வருகின்றது. புதுக்குடியிருப்பு, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி வட்டங்களில் மகளிர் மன்றங்களின் ஒத்துழைப்புடன் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தப்படும் அதே வேளை, சீதன ஒழிப்புத் தொடர்பான பதாதைகள், வீதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. அத்துடன், 'சீதனம் என்னும் மாயையை ஒழிப்போம்' என்னும் வீதி நாடகமும், 'சீதன அம்புகள்' என்னும் நாட்டிய நாடகமும் நடத்தப்பட்டுவருவதுடன், 'கொடியோரின் கொடுமை' என்னும் வீடியோப் பிரதியும் காட்டப்பட்டு வருகின்றது. ■

# ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகம் படையினரால் முற்றுகை
## ■ ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

திருகோணமலை நகரில் அமைந்துள்ள, ஈ. பி. ஆர். எல். எவ். காரியாலயத்தின் பின்புறத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், வெடிகுண்டுகளை சிறீலங்கா இராணுவத்தினர் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர்.

அதிசக்திவாய்ந்த ஏழு குண்டுகள் மற்றும் ஆயிரத்து ஐந்து ரவைகள், மற்றும் தன்னியக்கத் துப்பாக்கிகள் என்பனவே கண்டுபிடிக்கப்பட்டவை எனவும், இவற்றை வைத்திருப்பது தொடர்பாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கோ அன்றி, பாதுகாப்பு ஒருங்கமைப்பு அலுவலகத்திற்கோ தெரியாது எனவும் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து மேற்படி காரியாலயம் சுற்றிவளைக்கப்பட்டதாகவும், மேலதிக விசாரணை நடைபெறுவதாகவும் தெரிய வருகின்றது. ■

# கோழிமுட்டை விலை வீழ்ச்சி; எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கோழிவளர்ப்பினை ஊக்குவித்ததின் பயனாக, கோழி முட்டையொன்றின் விலை 5 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை, சுழிபுரம் பகுதியில் பயிரிடப்பட்ட ஊர் எள்ளு அமோக விளைச்சலைக் கொடுத்ததினால், வழமையைவிட அதிகளவு எள்ளு சாகுபடியாகியுள்ளது. இதனால், சுழிபுரம் பகுதியில் உள்ள நல்லெண்ணைவடிக்கும் செக்குகளில் இருந்து, பெறப்படும் நல்லெண்ணையின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. ■

# இராணுவத்துக்குப் பதிலடி வழங்கி புலிகள் பலத்தின்மேல் பலம் பெற்றனர்

"கடந்த சில வருடங்களாக அரசு எடுக்கும் சிறப்பான இராணுவ நடவடிக்கைகளுக்கு, விடுதலைப் புலிகளும் சமமான பதில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதன் மூலம் புலிகள் பலத்தின்மேல் பலம் பெற்று வளர்ந்து வருகின்றனர். வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு அல்லாத, நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இன்னமும் பரிசீலிக்கப்படவில்லை. இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுவரும் கிளர்ச்சி எமக்குப் பல பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது". இவ்வாறு 'சண்டே ஐலண்'டில் அக்னி என்பவர் எழுதியுள்ளார்.

"வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மீதான அணுகுமுறை குறித்து, அரசின்போக்கில் மாறுதல் ஏற்படவேண்டும். விடுதலைப் புலிகளின் கடந்த 10 வருட நடவடிக்கைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கமுடியும்: முதல் பகுதியில், போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் கொல்லப்பட்டனர்; சிறீலங்கா அரசின் பொலிசார் மற்றும் புலனாய்வுத் துறையினர் அழிக்கப்பட்டனர்; இரண்டாவது கட்டத்தில் பொலிஸ் நிலையங்கள், இராணுவரோந்து அணிகள் மீது தாக்கிவிட்டுத், தப்பும் நடவடிக்கைகளை புலிகள் கைக்கொண்டனர். மூன்றாவது பகுதியாக இது 1985 -1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பித்தது. அதாவது இராணுவ, பொலிஸ் படைகளைப் புலிகள் எதிர்கொண்டு நேரடியாகப் போரிட்டனர்; பாதுகாப்புப் படையினரின் நிலைகளையும் நேரில் போரிட்டு அழித்தனர். இதன்போது அவர்கள், படையினரின் ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்ல, தமக்கு வேண்டிய பயிற்சிகளையும் பெறமுடிந்தது

புலிகளால், அர்ப்பணிப்புள்ள வீரர்களைக்கொண்ட ஒரு இராணுவத்தை இவ்வழிமுறைகள் மூலம் கட்டியெழுப்ப முடிந்தது. அத்துடன் அவர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து புலனாய்வுத் தகவல்கள் பெருமளவில் வெளியேறுவதையும் சிறப்பாகக் கட்டுப்படுத்தி வருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் தமது மூன்றாவது கட்டத்திலிருந்து, நான்காவது கட்டமாக, முழு அளவிலான சிவில் போரில் குதிக்கும் கட்டத்திற்கு இதுவரை நகரவில்லை; இதற்கு அவர்களிடம் உள்ள படைப்பலம் குறைவும் ஒரு காரணமாக உள்ளது" எனவும் அவர், மேலும் எழுதியுள்ளார். ■

## ஆயுத ஆக்கிரமிப்பின்......

சிறீலங்காவின் தேர்தல் நடாத்தும் நோக்கையும், போக்கையும் தெளிவாக்கியுள்ளது.

இவ்வாறே சிறீலங்காவின் ஆயுத ஆக்கிரமிப்புக்கு - இலக்காகியுள்ள தீவுப் பகுதிகளில் அகப்பட்டுள்ள, முன்னைய சனத்தொகையில் ஒரு வீதத்திற்கும் குறைவான எண்ணிக்கையான தமிழ் மக்களைக்கொண்டு வாக்களிப்பு நடாத்தி, மிகுதி 99% ஆன வாக்காளர்களுக்குமான பிரதிநிகளை தெரிவாக்கப்போவதாக சிறீலங்கா தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்பு ஜனநாயக்தையே கேலிக்கூத்தாக்குகின்றது.

### அகதி வாக்காளர்

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில், தமிழீழத்தின் யாழ். குடாநாட்டின் 11 தேர்தல் தொகுதிகளிலும் காணப்பட்ட வாக்காளர் விபரம் வருமாறு:-

ஊர்காவற்றுறை (தீவுப்பகுதி) 36,372, வட்டுக்கோட்டை 40,684, காங்கேசன்துறை 43,907, மானிப்பாய் 41,373, கோப்பாய் 41,824, உடுப்பிட்டி 36,955, பருத்தித்துறை 36,959, நல்லூர் 40,205, யாழ்ப்பாணம் 34,865, கிளிநொச்சி 26,670, முல்லைத்தீவு 24,698, சாவகச்சேரி 42,221. அதேவேளை, மன்னாரில் 31,767 பேரும் வவுனியாவில் 28,450 பேரும் வாக்காளர்களாக இருந்தனர். கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் 35,778, சேருவில 31,250, மூதூர் 30,389, கல்குடா 33,995, மட்டக்களப்பு 63,039, அம்பாறை 49,006, பட்டிருப்பு 35,909, சம்மாந்துறை 27,308, கல்முனை 28,826, பொத்துவில் 49,691 பேர் வாக்காளர்களாக இருந்தனர். இன்று 17 வருடங்களுக்குப் பின்னர், இப்பிரதேசங்களின் வாக்காளர் தொகை, இயற்கை அதிகரிப்புடன் சேர்த்து நோக்கும் போது, எவ்வளவு எண்ணிக்கையால் அதிகரித்திருக்க வேண்டும் என்பதை உலகம் அறியும். ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் ஆறு இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழும் நிலையில், வெளிநாடுகளில் மூன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அரசியல் தஞ்சம் அடைந்து அகதிகளாக அல்லலுறும் சூழ்நிலையில், தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை அழித்தொழிக்கும் நோக்கில், சிறியதொரு கும்பலை வைத்துக்கொண்டு, அவர்கள் தான் தமிழ் வாக்காளர்கள் என உலகுக்கு எடுத்துக் காட்டப்பட்டு, இத்தேர்தல் நடைபெறவுள்ளது

### வாக்காளர்களில் பாரபட்சம்

அத்துடன், இத்தேர்தலில் குடாநாட்டுக்கு வெளியே வாழும் முஸ்லீம்களுக்கு, புத்தளத்தில் ஒரு வாக்குச்சாவடியை ஏற்படுத்தி, அங்கிருந்தபடியே அவர்கள், வடக்கு மாகாணத்திற்கான பிரதிநிதியைத் தெரிவுசெய்யலாம் என அறிவித்துள்ள சிறீலங்கா அரசாங்கம், அதேவேளை அகதிகளாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்துள்ள தமிழ் வாக்காளர்களுக்கு இதே உரிமையை அளிக்காது, தேர்ந்தெடுந்த முறையில், வாக்களார் பதிவை நடாத்தி, வாக்காளர் பதிவில் பாரபட்சம் காட்டிவருகின்றது. அவ்வாறே திருகோணமலைத் தொகுதியிலும், கிழக்கின் பல தொகுதிகளிலும் பெருந்தொகையான சிங்கள வாக்காளர்கள் நேர்மையற்ற முறையில் வாக்காளர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், வடக்கிலும் கிழக்கிலும் நிலைகொண்டுள்ள சிறீலங்கா பாதுகாப்புப் படையினரையும் அப்பிரதேசங்களில் வாக்களிக்கும் வாக்காளராக்கியுள்ளது.

### வாக்காளர் இடாப்பு சிங்களத்தில்

தமிழ்ப் பிரதேசங்களுக்கான வாக்காளர் இடாப்புக்களில் பெரும்பான்மையான பதிவுகள், சிங்களத்திலேயே இருப்பதை சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

### சிறீலங்கா அரசாங்கத் தமிழ் ஆயுதக்குழுக்கள் மோதல்

இதற்கிடையில், சிறீலங்கா அரசாங்கத்தின் தமிழ் ஆயுதக் குழுக்களான ஈ. பி. டி. பிக்கும், ஈ. பி. ஆர். எல். எவ்க்கும் இடையே தேர்தல் மோதலொன்று வெளியாகியுள்ளது. தீவுப்பகுதிக்கு சென்ற ஈ. பி. ஆர். எல். எவ். அணியினரை ஈ. பி. டி. பியினர் ஆயுத அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியதாக அறிவித்த ஈ. பி. ஆர். எல். எவ், தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது. அவ்வாறே, புளொட் குழுவினர் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரியை வவுனியாவில் ஆயுத அச்சுறுத்தல் செய்துள்ளதாக மற்றொரு புகார் வெளியாகியுள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தின் அடிவருடிகளே பதவியாசையில், ஒருவருக்கொருவர் ஆயுத அச்சுறுத்தல் உண்டென அறிவிக்கும் இச்சூழலில், சாதாரண ஒரு தமிழ் வாக்காளர் எத்தகைய ஆயுத அச்சுறுத்தலுக்கு நடுவே வாக்கைப் பிரயோகிக்கவேண்டிய பரிதாபத்திற்கு உள்ளாகியுள்ளார் என சர்வதேச சமூகம் எண்ணிப்பார்க்கத் தொடங்கியுள்ளது. 'எக்னோமிஸ்ட்' சர்வதேச சஞ்சிகை, தமிழ் வாக்காளர் வீடுகளில் தங்குவதையே விரும்புகின்றனர்; வாக்களிப்பில் கலந்துகொள்ள மாட்டார்கள் என அறிவித்துள்ளது.

### நீதிமன்றத்தில்

சிறீலங்காவின் நீதிமன்றத்தில், தேர்தலில் பங்குபற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, "வடக்கில் தேர்தல் நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லை" எனக்கூறி, அங்குமட்டும் தேர்தலை வைக்கவேண்டாம் என வழக்குத் தாக்கல் செய்தது. இதனை நிராகரித்த, சிறீலங்கா நீதிமன்றம் யூலை 29 ஆம் திகதி இதற்கான காரணங்களைத் தெரியப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அதேவேளை, ஆவரங்காலைச் சேர்ந்த சின்னத்துரை என்பவர், "வடக்கில் தேர்தல் நடத்தக்கூடாது" என, இன்னொரு தடையுத்தரவு கோரும் மனுவொன்றை சிறீலங்கா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் எனத் தெரியவருகின்றது. இந்த தடையுத்தரவு மனுக்கள், வடக்கில் நடைமுறையில் சிறீலங்காவின் இறைமை இழக்கப்பட்டு இருப்பதையும், அங்கு தேர்தலைக் கூட சிறீலங்காவால் நடத்தமுடியாது இருப்பதையும் வெளிப்படுத்தியுள்ள அதேவேளை, விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட பிரதேசம் ஒன்று இலங்கைத் தீவில் இருக்கின்றது என்பதை உலகிற்கு மேலும் தெளிவாக்கியுள்ளது.

### சந்திரிகாவும் செயலாளரும்

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சந்திரிகா குமாரணதுங்கா, "வடக்கில் தேர்தல் நடாத்துவது சிறீலங்கா அரசாங்கத்தின் பொறுப்பு; அங்கு அத்தகைய சூழல் இல்லை என்பதினால், தமது கட்சி போட்டியிடவில்லை" என அறிவித்துள்ளார். ஆனால், சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர், "வடக்கில் சிறீலங்கா அரசாங்கம் தேர்தலை நடாத்த எடுத்த முயற்சி, சரியான நடவடிக்கை" என வர்ணித்துள்ளார்.

### தேர்தல் விஞ்ஞாபனங்கள்

தேர்தல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட விஞ்ஞாபனத்தில், இராணுவத் தீர்வை அது தொடர்வதற்கு உறுதியாக உள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அதேவேளை, சிறீலங்கா சுதந்திரக் கட்சி பேச்சுவார்த்தை நடாத்தப்போவதாகக் கூறுகின்ற போதிலும், அதற்கான உருப்படியான யோசனை எதனையுமே விஞ்ஞாபனத்தில் வெளியிடவில்லை. அதேநேரம், மாகாணசபைகளின் அதிகாரங்களைக் கூட்டுவதன் மூலமும் மாகாணசபைகளின் எல்லைகளை மாற்றியமைப்பதன் மூலமும் தீர்வு காணப்போவதாக பேசிவரும் சுதந்திரக் கட்சியினர், தமிழரின் பிரச்சினையை தனியான ஒன்றாகப் பார்க்காது, எல்லா மாகாணங்களுக்கும் உள்ள பிரச்சினைகளில் ஒன்றாகவே கருதுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் தமிழ்த்தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை என்பவை குறித்து தொடர்ந்தும் தெளிவற்ற நிலையையே கொண்டிருக்கும் சுதந்திரக் கட்சி, பௌத்த சிங்கள பேரினவாதத்தை மீறி, தீர்வுகளை முன்வைப்பார்களா என்பது கேள்விக்குறியாவே உள்ளது. ■

## சர்வதேச கலை.....

இசை, நடனத்துக்கென இரு நாள் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையில் ஈழத்தமிழ் நடனத்திற்கான பயிற்சிப் பட்டறை, கலைக்கூட நடன ஆசிரியர்களில் ஒருவரான திருமதி மாலதி யோகேந்திரன் அவர்களால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையில் நோர்வே நாட்டுப் பெண்களும் பங்கு பற்றியதோடு, பயிற்சியின்போது பழகிக் கொண்ட பந்து நடனம், கும்மி நடனம் ஆகியவற்றை கலைக்கூட மாணவிகளுடன் இணைந்து பார்வையாளர்கள் முன்னிலையில் வழங்கினர். தமிழ் - நோர்வேசிய பெண்கள் இணைந்து வழங்கிய இந்நடனங்களும் பெரும் வரவேற்பினைப் பெற்றுக் கொண்டன.

நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிரதான மண்டபத்திற்கு வெளியே பங்கு கொண்ட கலைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்தந்த நாட்டுத் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அங்கு ஏற்றப்பட்டிருந்த சிறீலங்காத் தேசியக் கொடி எம்மைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை எனவும் இக் கொடியின் கீழேயே ஈழத்தமிழ் மக்கள் இனப்படுகொலக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் எனவும் கலைக்கூடத்தினால் விடுக்கப்பட்ட ஆட்சேபனையை அடுத்து, சிறீலங்காத் தேசியக் கொடி கீழிறக்கப்பட்டே நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்டவில் இடம்பெற்ற இச் சர்வதேச கலைநிகழ்வு 1990 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவதுடன், மிகத் தரமான கலைஞர்களுக்கே இக்கலை விழாவில் இடமளிக்கப்பட்டு வருகிறது. இக்கலை நிகழ்வில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் பங்குற்றியதன் மூலம் ஈழத்தமிழ் மக்களின் செழுமை மிக்க கலைப் பாரம்பரியம் சர்வதேச கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், சிறீலங்கா அரசின் கொடிய ஒடுக்குமுறையினால் ஈழத்தமிழ் மக்கள் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டமையும் வெளிக் கொணரப்பட்டது. சிறீலங்கா அரசின் கொடூர ஒடுக்குமுறைக்கு எதிராக ஈழத்தமிழ் மக்கள் கலாசாரத்தினையும், ஆயுதமாக ஏந்தியுள்ளார்கள் என்பதும் இக்கலை நிகழ்வில் நிகழ்ச்சி வழங்குனர் ஒருவரால் வெளிப்படுத்தப்பட்டது.

அன்னை பூபதி தமிழ்க்கலைக் கூடத்தினால் வழங்கப்பட்ட நடனங்களை திருமதி மாலதி யோகேந்திரன் அவர்கள் தயாரித்தளித்திருந்தார். இந்நிகழ்ச்சிக்கான பாடகர்களாக திருமதி வாசுகி ஜெயபாலன், திருமதி நந்தினி ஜெயராசா, திருமதி சாந்தி குமரேந்திரன், திரு. ச. உமாகுருபரன் ஆகியோரும் பக்க வாத்தியக் கலைஞர்களாக திருமதி சாந்தி சச்சிதானந்தம், திரு. - க. சுந்தரமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

1992 ஆம் ஆண்டு மாசி மாதம் ஏறத்தாழ 25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் தற்போது 170க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் பெரும் கலைக்கூடமாக நோர்வே ஒஸ்லோவில் இயங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

## பூரண அதிகாரங்....

கொண்ட பாடங்களை மையமாகவைத்தே, அங்கு பதினாறு மாகாண அரசுகளைக்கொண்ட சமஸ்டி அமைப்பு ஆட்சிமுறை ஏற்பட்டது.

இந்த பதினாறு மாகாண அரசுகளும், தத்தமது எல்லைக்குள் சகல விடயங்களையும் தாமே கையாளக்கூடிய வகையில், தனியான அரசியல் அமைப்பை ஆக்கிவைத்துள்ளன. இந்த ஒவ்வொரு மாகாண அரசும் கல்வி, உயர்கல்வி, மருத்துவம், நீதிபரிபாலனம், சட்ட அமுலாக்கம், சட்டவாக்கம் போன்ற சகல துறைகளிலும் பூரண சுதந்திரத்துடன் இயங்கி வருகின்றன.

மத்திய அரசு மாகாண விவகாரங்களில், ஒருபோதும் தலையிடுவதில்லை. அதேவேளை, மத்திய அரசு அறவிடும்R வரிப்பணத்திலும் உரியபங்கை மாகாண அரசுகளுக்கு அளித்துவருகின்றது. மாகாண அரசுகளுக்கும், தனது அவசியத் தேவைகளுக்கு வரிவசூலிக்கும் அதிகாரமும் உள்ளது.

இத்தகைய சகல அதிகாரங்களும்கொண்ட, சமஸ்டி அரசியல் அமைப்பு அங்கு வேருன்றி இருந்தமையினால்தான், கிழக்கு யேர்மனி மேற்கு யேர்மனியுடன் இணைந்து, மிகப்பலம் பொருந்திய நாடாக யேர்மனி உருவாக வழிவகுத்தது.

இதேபோன்று, இலங்கையிலும் பூரண அதிகாரங்களுடனான சமஸ்டி ஆட்சிமுறை ஏற்பட்டால் மட்டுமே, நாட்டில் சமாதானமும், அமைதியும் ஏற்படும். இப்படியான அரசியல் விழிப்புணர்வு ஒன்று ஏற்படுவதற்கான முயற்சிகளில், எமது 'ஈபேர்ட்' மன்றம் ஈடுபட்டுவருகின்றது" எனக்கூறினார்.

இக்கருத்தரங்கு திருநெல்வேலியில் உள்ள, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. மகாசிவம் நன்றி உரையாற்றினார். ■

## வன்னியில் 2900 ஏக்கரில் கால்நடை மேய்ச்சல் தரை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது, வன்னி வட்டத்தில் அரச செயலகத்துடனும், கால்நடை சுகாதாரத் திணைக்களத்துடனும் இணைந்து, பரவலாக மேய்ச்சல் தரைகளை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இதற்காக இரணைமடு, அக்கராயன்குளம், ஊற்றுப்புலம், வன்னேரி, பிரமந்தனாறு, கல்மடுநகர், சுடலைக் குளம், சூரியபுரம், மாயவனூர், கனகாம்பிகைகுளம் ஆகிய இடங்களில் மொத்தமாக 2900 ஏக்கருக்கு மேய்ச்சல் தரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ■

# அவர் ஒரு போராசிரியர்.....

ஜேர்மனிக்கு வந்ததிலிருந்து வள்ளியம்மா வாய்திறந்து பேசிய வார்த்தைகள் மிகக்குறைவு. அதிலும் 'ஐயோ' என மனம் விட்டு குளறி அழுதது இதுதான் முதல்தடவை.

- ஓம்... ஓம் அவ மிகச்சாது வானவா. சாதுமிரள்கிறது -

நீண்ட பெருமூச்சுடன்கூடிய உறிஞ்சலுக்குப் பின்னும் வள்ளியம்மாவின் வாய் ஓயவில்லை.

... அந்த உயர்ந்த மனிதனின் பண்புக்கு வெளிநாட்டுக்கு வெளிக்கிடமாட்டேன் என்று மண்ணுக்காக தன் அறிவை பயன்படுத்திய உத்தமருக்கு... தமிழீழ மக்கள் நல்ல இறுதிமரியாதைதான் செலுத்தியிருக்கினம்.

இங்கையும் சிலபேரு வெளிநாடு என்று கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருக்கினம்... இவை இங்கை செத்தால், தாட்ட இடத்தில் முளைக்கிற புல்லுக்கு தண்ணி வாக்கக்கூட ஆழில்லை.

- இது சம்பந்தருக்கு விழுந்த அடுத்த தடு -

"அம்மா..."

- சற்று அழுத்தமாகத்தான் -...

"நான் மட்டும் ஏதோ வெளிநாடு என்று அலைந்துவரவில்லை...

உமக்குத்தெரியும், நான் பெரியாஸ்பத்திரியிலை வேலைசெய்த பொழுது எனக்குக் கீழே வேலைசெய்த டாக்டர்களே என்னுடன் நிமிர்ந்து பார்த்துக்கதைக்க பயப்பிடுவார்கள். அப்படி இருக்கேக்கை, இந்தப் பெடியள் திடீர் என்று வந்து அவசரம் காயப்பட்ட நோயாளிகளைப் பார்க்கவேணும் என்று கேட்பார்கள் என்னால் அப்படிச்செய்ய ஏலாது. "நான் ஒரு விசுவாசமிக்க அரசாங்க ஊழியன்".

"... அப்படி என்றால்..." என இடைமறித்து பதில் சொல்ல வெளிக்கிட்ட வள்ளியம்மாவின் குரலை சம்பந்தர் செவிமடுக்கவில்லை. தொடர்ந்தார்...

அவசரம் என்று வந்து கூட்டிக் கொண்டு போவார்கள்... வள்ளியம்மாவால் பொறுக்கமுடியவில்லை.

"... கொஞ்சம் பொறுங்கோ...! ஏதோ சத்தம் போட்டுக்கதைத்தால், ஞாயமாகிவிடமுடியாது. காயப்பட்ட போராளிகளுக்கு மருந்துகட்ட வந்துகேட்டால், அதைத்தான் முதல்செய்ய வேண்டும். அது எமது தேசியக் கடமை. மண்ணுக்காக செய்வதை எந்த ஒரு பொதுமகனும் வேண்டாம் என்று சொல்லமாட்டான். கண்டறியாத ஒரு அரசாங்க விசுவாசம். தார்மீகமாக நடக்கும் ஒரு அரசாங்கத்திற்குத்தான் நாம் விசுவாசமாக இருக்கவேண்டும்; அரச பயங்கரவாதத்திற்கு அல்ல. ஆண்டவனுக்கு தொண்டு செய்யும் பாதிரியாரும், அர்ச்சகருமே தமிழீழ விடுதலைவை முன் எடுக்கும் பொழுது, கேவலம்... உயிரைப் பாதுகாக்கும்... ஒரு டாக்டர் பிற்போக்குவாதம் பேசுவது... கோழைத்தனம் இல்லையோ...? பெடியள்... பெடியள்... பெடியள்... இனிமேல் அவர்களை பெடியள் என அர்ச்சிப்பதை விட்டுங்கோ. அவையள் தான் உண்மையிலேயே தமிழீழத்தின் மாமனிதர்கள்.

உங்களைப் போன்றவையின்ற செயற்பாடு இல்லாத பிரசங்கத்திற்கு செவிசாய்க்கவில்லை. உங்களை முன்னுக்குவைக்கவில்லை என்ற எரிச்சலாத்தான் உப்படி அறுக்கிறியள். நீங்கள் இன்னும் பார்வையாளர் மட்டத்திலைதான் இருக்கிறியள். பேராசிரியர் துரை... தாய்மண் மீது தான்கொண்ட விசுவாசத்தைக் காட்டினார். அதனால் அவர்கள் அவரை, அந்த உயர்ந்த கல்விமானை... எவ்வளவு மரியாதையாக நடத்தினார்கள் தெரியுமோ, தமிழீழ விடுதலையின் விருது வழங்கப்பட்ட முதல் பல்கலைக் கழகப் பேராசிரியர் என்ற மதிப்பைப் பெற்றார்... இந்த மதிப்பு உங்களுக்குக் கிடைக்குமோ...? எப்படிக்கிடைக்கும்... நீங்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலை வேலைசெய்தபோது உங்கஸிட்டை வந்த ஒரு போராளியைப் பார்த்து, ஏன் பிள்ளை இந்த உயிருக்கு ஆபத்தான வேலையளுக்குப்போறியள் என்று கேட்டபோது, அந்த பெண்போராளி சொன்னது ஞாபகமிருக்கோ? "உயிர் எமக்குப் பெரியது தானுங்கோ... ஆனாலும் சுதந்திரம் அதைவிடப்பெரியது..." இதைக்கேட்ட பின்னும் வெளிநாட்டுக்கு வந்தனீங்கதானே? இனியா உங்களுக்குப் புரியப்போகுது. இல்லைத் தெரியாமல்த்தான் கேட்கிறேன், இந்த வெளிநாட்டிலை மட்டும் ஏதோ வெட்டிப்புடுங்கிறியளே... யாரைப் பார்த்தாலும் உங்களை சுவாஸ்சை -கறுப்பு -டொக்டர் என்றுதானே கூப்பிடுகினம்... ஏதோ... நீங்க படிச்சனிங்கள், நீங்க நினைப்பது தான் சரி என்ற எண்ணம். படிச்சவங்கள் எல்லோரும் புத்திசாலியள் இல்லை..." வள்ளியம்மாவின் வாயிலிருந்து தொடர்ந்த எஞ்சிய வசனங்கள் சிறுத்து, சிறுத்து அவவின் வாயிக்குள்ளேயே சங்கமமாகிவிட்டது.

நீண்டநேர அமைதியின்பின்... சம்பந்தரின் உதடுகள் பிரிந்தன. "கொஞ்ச சுடுதண்ணி தாரும்..."

வழமையாக சாப்பிட்டுவிட்டு சுடுதண்ணி குடிக்கும் சம்பந்தர் இன்று சாப்பாட்டைவிடுத்து சுடுதண்ணீர் கேட்டது, வள்ளியம்மையின் மனதில் சாதுவாக நெருடியது. சுடுதண்ணீர் கொண்டுவந்த வள்ளியம்மா... எதற்கும் ஒருசொல் கேட்போம் என்றதுபோல்... அப்போ... சாப்பாடு... என்றா" எனக்கு வேண்டாம்..." என்ற சம்பந்தர் சுங்கானை வாயில்வைத்தபடி கையில் லைற்றருடன் ரொயிலற்றுக்குப் போனார்...

ஏதாவது சிந்திப்பதாக இருந்தால், சம்பந்தர் சுங்கானை மூட்டிக்கொண்டு, ரொயிலற்றுக்குள்தான் போவார். எல்லோரும் ரொயிலற்றை எதற்கோ பாவிப்பார்கள்... ஆனால் சம்பந்தர்... இதற்கும் பாவிக்கிறார். அதற்குள் இருக்கும்பொழுது, சம்பந்தர் தன்னை மறந்த நிலையில் ஏதாவது சிந்தனையில் ஆழ்ந்து விடுவார். ஆனால் இன்று... அதற்குள்ளேயே படுக்கை போட்டுவிட்டாரா எனச்சிந்திக்கத்தூண்டியது... ஆம் மிகநீண்ட இடைவேளையின் பின்... சம்பந்தர் வெளியே வந்தார்...

"...வள்ளியம்மா..."

- மிக அமைதியாகத்தான், அதில் கொஞ்சம் அவசரமும் கலந்திருந்தது -கிட்டவந்த வள்ளியம்மாவின் கையைப்பிடித்தபடி -வள்ளியம்மாவுக்கு ஏதோ ஒன்று -ஒரு உணர்வு வழமைக்கு மாறாக அவரிடம் இருந்தது தெரிந்தது...

"...வள்ளியம்மா..."

வள்ளியம்மையின் கையை தானாக எடுத்து, தன் கன்னத்தில் வைத்தபடி, சம்பந்தர் எதையோ சொல்லத்துடித்தார்.

"அம்மா..."

"நாங்கள் நாட்டுக்குப்போவோம்..."

சம்பந்தரின் கைப்பிடி இறுகியது. வள்ளியம்மா...!

அவாவின் முகம்!

- தாமரை மொட்டானது தெரியும் -அது மலர்ந்தது தெரியும். ஆனால், மலர்வதை இன்றுதான் சம்பந்தர் நேரில் கண்டார்.

* * *

நீளத்தில் வித்தியாசம் தெரியவில்லை... விமானம் வெளிக்கிட்டு வெகுநேரமாகிவிட்டது. எல்லோரும் அமைதியாக விமானத்தில் தூங்கிக்கொண்டு இருந்தவேளை, வள்ளியம்மையின் கேள்வி சம்பந்தரின் காதுக்குள் நுழைகிறது.

"என்னங்க... ஒரு பேராசிரியர் துரையின் மறைவு உங்களை மாற்றி இருக்கிறதே... ஆனால் இன்னும் எத்தனை வைத்திய நிபுணர்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள்..."

"அம்மா..."

"யார் என்ன செய்தார்கள் என்பதைவிட, நாம் எமது விடுதலைக்கு என்ன செய்தோம் என்பது தான் முக்கியம். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்; இப்ப என்றாலும் ஒரு நரம்பு நிபுணர் தான்பிறந்த மண்ணில் சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வில், தாய்நாடு திரும்புகிறார் என்பதை அந்தத் தலைவர் அறிந்தால், நிச்சயம் அவர் மனம்குளிரும்". -இது சம்பந்தரின் மனச்சாட்சி மட்டுமல்ல, சம்பந்தரும் சேர்ந்து கூறிய வார்த்தை அது -■

# பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் லெஸ்டருடன் கலந்துரையாடல்

பிரித்தானியப் பாராளுமன்றத்தின் எக்லெஸ் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் லெஸ்டருடன், 'கஸ்டிஸ்' (CASTIS) அமைப்பினரும் புலம்பெயர்ந்த தமிழர் பாராளுமன்ற பிரசாரக் குழுவினரும், சிறீலங்காவின் மனித உரிமைமீறல்கள் குறித்து, கலந்துரையாடல் ஒன்றை யூன் 23 ஆம் திகதி மாலை 6. 20 மணியளவில் நடாத்தினர். 50, 000 இற்கு மேற்பட்ட தமிழர்களை வடக்கு -கிழக்கில் கொன்றுகுவித்தும், 60, 000 இற்கு மேற்பட்ட சிங்களவர்களை தெற்கில் கொலைசெய்தும், 1993 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் மட்டும் 15, 000 தமிழர்களை கொழும்பில் கைதுசெய்தும், பல எலும்புக்கூட்டுக் குழிகள் தோன்றமாகியும், எழுத்திலடங்கா மனித உரிமை மீறல்களைச் செய்துவரும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக பிரித்தானியப் பாராளுமன்றக் கட்டிடத்தில், ஒரு கூட்டத்தை ஜோன் லெஸ்டர் பாராளுமன்ற உறுப்பினருடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கென ஆறாம் இலக்க குழு அறையை ஸ்ரெட் போரட் பாராளுமன்ற உறுப்பினர், டொனிலொயிட் ஏற்பாடு செய்திருந்தார். ஆயினும், சில விளக்கமின்மையினாலும், வெளியார் தலையீடுகளாலும் இக்கூட்டம் இறுதிநேரத்தில் இரத்துச் செய்யப்பட்டதாக, ஜோன் லெஸ்டர் பாராளுமன்ற உறுப்பினர் அறிவித்தார். இந்த அறிவிப்பு நேரத்துடன் கிடைக்காததினால், பாராளுமன்றத்தில் 25 இற்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடினர். இதனால் இவர்களுடன், ஜோன் லெஸ்டர் அவர்கள் கலந்துரையாடல் ஒன்றை உடன் ஏற்பாடு செய்திருந்தார்.

சிநேகபூர்வமான முறையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இப்பெண் பாராளுமன்ற உறுப்பினருக்கு உண்மை நிலைகள் எடுத்துக்கூறப்பட்டன. இதனையடுத்து, கோடைகாலம் முடிவடைந்ததும் மீண்டும் இக்கூட்டத்தை, தான் நடாத்த ஏற்பாடு செய்வதாக அவர் வாக்குறுதி அளித்தார். இது தொடர்பாக 'கஸ்டிஸ்' அமைப்பும், ஜோன் லெஸ்டர் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டாகக் கையெழுத்திட்ட பத்திரிகைச் செய்தி ஒன்றும் வெளியிடப்பட்டது. ■

## சர்வதேச அரசாங்..

றோம்; விடுதலைப் புலிகள்தான் தடையாக உள்ளனர்" என சிறீலங்கா கூறிவருவதை இனியும் நம்பத்தயாரில்லை" என பி. பி. சி. சர்வதேச நிறுவனம் யூலை 7 ஆம் திகதி ஒலிபரப்பிய தனது உலகச்செய்தி விமர்சனத்தில் சிறீலங்காவைப் பகிரங்கமாக எச்சரித்துள்ளது. அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழத்தின் 'அரசு நோக்கிய அரசிற்கு (Defacto Government of Tamil Eelam) சர்வதேச பொதுசன தொடர்புச்சாதனங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளன. உலகின் முக்கிய சஞ்சிகைகளில் ஒன்றான 'எக்கோனோமிஸ்ட்' தனது யூலை 2 ஆம் திகதிய இதழில் நீண்டகால யுத்தத்தின் பின்னணியில் விடுதலைப் புலிகள் அரசாங்கம் ஒன்றை அமைத்து, நடாத்தி வருகின்றனர். உதாரணமாக நீதிபதிகள்கூட, அவர்களின் சொந்த நீதி அமைச்சினால் நியமிக்கப்படுகின்றார்கள்" எனக்குறிப்பிட்டுள்ளது. பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' ஆங்கிலப் பத்திரிகையும், விடுதலைப் புலிகளின் 'அரசு நோக்கிய அரசி'ன் நீதி, நிர்வாக முறைமைகள் பற்றி செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவின் சி. என். என். தொலைக்காட்சி அமைப்பும் விடுதலைப் புலிகளின் 'அரசு நோக்கிய அரசி'யைப் பற்றி செய்தி ஒளிபரப்பியுள்ளது. இவ்வாறாக 'தமிழீழ அரசு நோக்கிய அரசி'னைப் பற்றிய அக்கறை சர்வதேச பொதுசனத் தொடர்புச்சாதனங்களிடையே வளர்ந்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் தமிழீழத்திற்குச் சென்று, நேரடியாக நிலைமைகளை அவதானித்து, சர்வதேச பொதுசனத் தொடர்புச்சாதனங்களின் பிரதிநிதிகள், தமிழீழ மக்களின் புனிதமான விடுதலை உணர்வையும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ மக்களின் 'அரசு நோக்கிய அரசி'ன் நிர்வாகத்தையும் மன உறுதியையும் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர். ■

## முதலில் பாராளுமன்ற......

தித் தேர்தலை எதிர்கொள்ளமுடியும் என டி. பி. விஜேதுங்கா கருதுவதாகத் தெரிகின்றது. இதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் பலமானதொரு நிலையை தன்னால் அடையமுடியும் என அவர் எண்ணுவாராயின், அதில் அர்த்தமும் உண்டு.

மேலும் பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதன் மூலம், வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்துக்கொண்டவர்கள் விரும்பியோ, விருப்பமில்லாமலோ கட்சியின் வெற்றிக்கு உழைக்கவேண்டிய அவசியம் உண்டு.

இந்நிலையில் கட்சி, தேர்தலில் வெற்றிபெறுமானால், ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வெற்றி பெறுவதற்கு இது அடித்தளமாக அமைந்துவிடுவதற்கான வாய்ப்புக்களும் அதிகம்.

இந்நிலையில் தான், அக்கினிப் பரீட்சை என்று தெரிந்துகொண்டும், டி. பி. விஜேதுங்கா பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளார் என்றுகொள்ளலாம். அவரைப் பொறுத்து, பாராளுமன்றத் தேர்தலின் வெற்றியென்பது அவரது எதிர்காலப் பதவியை உறுதிப்படுத்துவதாகவும்; இத்தேர்தல் தோல்வியென்பது இருமாதங்களின் பின்விளையக்கூடிய முடிவை முன்கூட்டியே அறிவிக்கும் எதிர்வுகூறலாகவும் அமையும்.

இது ஜனாதிபதித் தேர்தல் குறித்து அவர் அலட்டிக்கொள்ளாமலும், மண்டையை உடைத்துக்கொள்ளாமலும் 'அரசியல் துறவறம்' பூண்டுவிடக்கூட உதவக்கூடும்.

அவ்வாறானதொரு நிலை உருவாகுமானால், அது ஐ. தே. கவிற்கு, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத்தேடி அலையவேண்டிய நிலையைக்கூட ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■

நன்றி: 'ஈழநாதம்'

## வல்லரசுகள் விதைத்த....

எறிகணைத் தாக்குதல்கள் எல்லாம் மக்கள் தலை மேலேயே வீழ்கின்றன.

இன்றைய ஆப்கானின் இத்தகைய சிதறுநிலை இந்தியா போன்ற அண்டை நாடுகளுக்கிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே காஸ்மீரில் ஆப்கான் போராளிகள் போரிடுவதாகவே முறையிடப்பட்டு வருகின்றது. இத்தகைய நிலையில் ஆப்கானின் எதிர்காலம் இந்தியாவிற்கு ஆபத்தானது என்ற குரல்கள் இப்போது புதுடில்லியில் எழுப்பப்படுகின்றது. இதுபோலவே மேற்குலகால் தமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாக உருவகப்படுத்தப்பட்ட -ஆப்கான் போராளிகள் கையில் ஆட்சியதிகாரம் வந்தமையும் இப்போது அவர்கள் முகத்திலேயே கரிபூசுவதாகவே அமைந்துவிட்டது. இன்னொரு பக்கத்தில், ஆப்கானில் பலம் மிக்க இசுலாமிய அடிப்படைவாத ஆட்சி அமையும் என எண்ணிய ஈரான் போன்ற நாடுகளின் எண்ணமும் நிறைவேறவில்லை. ஈற்றில் ஆப்கான் மக்கள் இன்று யார்? யாரோ? விதைத்த வினைகளை அறுவடை செய்ய நேரிட்டதே மிச்சமாகின்றது.

எனவே 'எடுப்பார் கைப்பிள்ளைகளாக' -'ஏவற்படையணிகளாக' -போராட்ட அமைப்புக்கள் மாறினால் விடுதலை உணர்வு என்கின்ற மனோபலம் அற்றுப்போனால் என்ன நடக்கும் என்பதற்கு ஆப்கான் தகுந்ததொரு பட்டறிவைத் தருகின்றது. முன்னர் தமிழீழத்தில் பல்வேறு குழுக்கள் இயங்கியபோது, ஆப்கான் நிலைமையோடு ஒப்பிட்ட நிலை ஒன்று இருந்தது. ஆனால் இன்று, இத்தகைய மோதல்கள் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளமை குறித்து நாம் நிச்சயம் மகிழ்ச்சி அடையமுடியும் அல்லவா? ■

நன்றி: 'ஈழநாதம்'

## சீதன ஒழிப்புப் பிரசாரம்

தென்னியன் குளத்திலும் விடுதலைப் புலிகள் அரசியல் துறையினரால், சீதன ஒழிப்பு விளக்கப் பிரச்சாரம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சிக் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர், திரு. பரணீதரன் கலந்துகொண்டு உரையாற்றினார். இதில் பல பொது மக்களும் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். ■

# யூலைப் படுகொலை

## கனத்த நினைவு சுமந்து 11 ஆண்டுகள்



குட்டிமணி



தங்கத்துரை

வெலிக்கடைச் சிறையில், இனவெறியின் கோரத் தாக்குதலுக்கு
நெஞ்சுகொடுத்து, மண்ணில் வீரவிதையாகிவிட்ட, தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்,
நடேசதாசன், தேவன், சிவபாதம் மாஸ்ரர், சிறீகுமார் ஆகிய மாவீரர்களுக்கு

**வீர அஞ்சலி செலுத்துகின்றோம்.**

## கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன...

தாரது கொதிக்கும் தட்டினில் தமிழனைக்...
கோர வெறியுடன் கொன்றது சிங்களம்!
பாரதிர்ந்திட கத்திய மங்கையைச்
சோரவே செய்தனர் சிங்களக் காடையர்!
மண்ணினைப் பார்ப்பேன் மறையுமுன் என்றவன்
கண்ணினைக் கழற்றிக் காலால் மிதித்தனர்!
என்னத்தைச் செய்வோம் என்ற தமிழினம்
கன்னத்தில் கைவைத்துக் காத்துக் கிடந்தது!
கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன!
வீர விதையொன்று இம்மண்ணில் நீண்டு வளர்ந்தது!
கோரவெறியினைக் கொண்ட சிங்களம் நின்று
திகைத்தது!
வெறுப்புடன் பார்த்த தமிழனைச் சிங்களம்
வெறித்துப் பார்த்தது...


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.